Not for sale

ஜனவரி - பிப்ரவரி 2016

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள்


தீர்க்கதரிசிகள் • ஏசாயா, எரேமியா மற்றும் தானியேல்

எசேக்கியேல், ஒரு வரலாற்றுப் பாடம்

நாகூம் • ஆகாய் • ஐந்தாம் கற்பனை

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள்

# ஆதியிலே



பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளில் பலர், நமக்காக அவர்களுடைய எழுத்துக்களை விட்டுச் செல்லவில்லை மற்றும் நம்மிடம் அவர்களில் அநேகருடைய பெயர்களின் பதிவுகளும் இல்லை. "யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளைச் சங்கரிக்கிறபோது, ஒபதியா நூறு தீர்க்கதரிசிகளைச் சேர்த்து, அவர்களைக் கெபிக்கு ஐம்பது ஐம்பது பேராக ஒளித்துவைத்து, அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து, அவர்களைப் பராமரித்துவந்தான்" (1 இராஜாக்கள் 18:4).

ஆனாலும் 16 தீர்க்கதரிசிகளின் பெயர்களைக்கொண்ட புத்தகங்கள் பழைய ஏற்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பொதுவாக இவர்கள் நான்கு "பெரிய தீர்க்கதரிசிகள்" மற்றும் 12 "சிறிய தீர்க்கதரிசிகளாகவும்" பிரிக்கப்படுகிறார்கள். இந்தத் தீர்க்கதரிசிகளின் எழுத்துக்களுக்காக இந்தப் பிரதி அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

"தீர்க்கதரிசிகள்" என்ற நம்முடைய துவக்கக் கட்டுரை, அந்த 16 தீர்க்கதரிசன புத்தகங்களின் ஒரு கண்ணோட்டமாக உள்ளது. அந்தத் தீர்க்கதரிசன புத்தகங்கள், முழு பழைய ஏற்பாட்டிற்கு எவ்வாறு தொடர்புடையதாக இருக்கிறது என்றும், இந்தக் கட்டுரை விவரிக்கிறது. துவக்கத்தில், எபிரெயர்களின் 22 பரிசுத்தமான புத்தகங்களாக எவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தது என்றும் பழைய ஏற்பாட்டின் மூன்று முக்கிய பகுதிகளையும் இந்தக் கட்டுரைக் குறிப்பிடுகிறது.

நான்கு "பெரிய தீர்க்கதரிசிகள்," அவர்களின் காலங்கள், சூழ்நிலைகள் மற்றும் இந்நாளிலுள்ள பரிசுத்தவான்களுக்கு வடிவமைக்கப்பட்ட தீர்க்கதரிசன சாட்சியின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய இந்தப் புத்தகங்களிலுள்ள சில பாடங்களை, "ஏசாயா, எரேமியா, தானியேல்" மற்றும் இதைத் தொடர்ந்து வரும் "எசேக்கியேல் ஒரு வரலாற்றுப் பாடம்" என்ற இரண்டாம் கட்டுரை விவரிக்கிறது.

அடுத்துவரும் மூன்று கட்டுரைகள், 12 சிறிய தீர்க்கதரிசிகளில், மூன்று பேரைக்குறித்துப் பேசுகிறது. அந்த 12 புத்தகங்களில், முதல் ஆறு புத்தகங்கள் அசீரிய சாம்ராஜ்யத்தின் காலத்திற்குத் தொடர்புடையதாக உள்ளது. அசீரியாவின் நியாயத்தீர்ப்பு மற்றும் வீழ்ச்சியைக்குறித்து அடுத்துவரும் மூன்று புத்தகங்களாகிய நாகூம், ஆபகூக் மற்றும் செப்பனியாவில் விவரிக்கப்பட்டுள்ளது.

அசீரியாவின் தலைநகரமாகிய "நினிவேயின் பாரம்" என்று நாகூம் புத்தகம் துவங்குகிறது. முன்பு ஒரு காலத்தில் இதே பட்டணத்திற்கு யோனா தீர்க்கதரிசி அனுப்பப்பட்டார். அந்தப் பட்டணத்திலுள்ள 120,000 பேர்களுக்கு மேலான ஜனங்களை அவருடைய செய்தி இரட்சித்தது (யோனா 4:11). அந்தத் தீர்க்கதரிசியின் புத்தகத்தை "நாகூம்" என்ற கட்டுரைத் தெளிவாக விவரிக்கிறது. மற்றும் நம்முடைய நியாயத்தீர்ப்பின் நாளில் இது எவ்வாறாகப் பொருந்தும் என்பதையும் இந்தக் கட்டுரை கண்ணோக்குகிறது.

ஆகாய், சகரியா மற்றும் மல்கியா பழைய ஏற்பாட்டை நிறைவு செய்யக்கூடிய தீர்க்கதரிசிகள். சம காலத்தில் வாழ்ந்த முதல் இரண்டு தீர்க்கதரிசிகளும், இஸ்ரயேலை மறுபடியும் கட்டும்படிக்குப் பாபிலோனிலிருந்து திரும்பி வந்தவர்களை ஊக்குவித்தார்கள். அதற்குப் பின்வந்த மல்கியா, கிறிஸ்துவின் முதலாம் வருகை மற்றும் அவருடைய இரண்டாம் வருகையைக்குறித்து அறிவித்தார்.

ஆகாயைப்பற்றி "ஆகாய்" என்ற அதே பெயரிலுள்ள கட்டுரையில் ஆராயப்படுகிறது. மல்கியாவைக்குறித்து, "ஐந்தாவது கற்பனை" என்ற கட்டுரை விவரிக்கிறது. தங்களுடைய பரலோக பிதாவை உயர்வாக மதிப்பதற்கு மல்கியா இஸ்ரயேலர்களை ஊக்குவித்ததைக் குறிப்பிடுகிறது.

இந்தப் பிரதி வாசகர்களுக்கு மூன்று வழிகளில் உதவி செய்யும் என்று நாம் நம்புகிறோம். (1) தீர்க்கதரிசன எழுத்துக்களை முழுமையாக ஏற்ற சூழ்நிலையிலும், அவர்கள் மத்தியிலும், பழைய ஏற்பாட்டிலும் பொருத்திப்பார்க்கவும், (2) வேறு கட்டுரைகளில் காணப்படுகிற அந்தந்த தீர்க்கதரிசிகளைப் பற்றிய குறிப்பிட்ட பாடங்களைப் புரிந்து கொள்ளவும், (3) பல நூற்றாண்டுகளுக்குப் பின்வந்த நமக்குப் பயனுள்ள எழுத்துக்களைக் கொடுப்பதற்கு, தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டும் அவருக்காகப் பேசின இந்த விசுவாச வீரர்களைப்பற்றி ஆழமாகப் புரிந்து கொள்வதற்கும் உதவியாக இருக்கும்.

**ஜனவரி - பிப்ரவரி 2016**


**தீர்க்கதரிசிகள்** 2

தேவனுடைய பேச்சாளர்

**ஏசாயா, எரேமியா மற்றும் தானியேல்** 7

தீர்க்கதரிசிகளின் வழியாகப் பெறும் ஆதாயம்

**எசேக்கியேல், ஒரு வரலாற்றுப் பாடம்** 13

இலேசாகத் தொடுதல்

**நாகூம்** 17

நினிவேயின் அழிவு

**ஆகாய்** 22


ஆலயத்தின் நிறைவு

**ஐந்தாம் கற்பனை** 26

மல்கியா, நம்முடைய பரலோக தந்தையை மதித்தல்

**இன்றைய தீர்க்கதரிசனம்** 33

உலகிற்குக் கல்வி புகட்டுதல்



தேவனுடைய பேச்சாளர்கள்

# தீர்க்கதரிசிகள்

"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்" (எபிரெயர் 1:1).

David Rice

பழங்காலத்தில், எபிரெய பழைய ஏற்பாடு 22 புத்தகங்களாக யூதர்களால் வரிசைப்படுத்தப் பட்டிருந்தது. நம்முடைய நடைமுறையில் வரிசைப்படுத்தப்பட்ட 39 புத்தகங்களிலுள்ள அதே தகவலை அந்த 22 புத்தகங்களும் கொண்டுள்ளது. 12 சிறிய தீர்க்கதரிசிகளை ஒரே புத்தகமாக, ("பன்னிரண்டு") இணைக்கப்பட்ட காரணத்தினால், புத்தகங்களின் எண்ணிக்கையில் ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. இன்று நாம் இதே காரியத்தைச் செய்தால், நம்முடைய பழைய ஏற்பாடும் 28 புத்தகங்களாகக் குறைந்துவிடும்.

கூடுதலாக மூன்று தொகுப்புகளைக்கொண்ட இரட்டைப் புத்தகங்கள் (ஒன்று மற்றும் இரண்டு சாமுயேல், இராஜாக்கள் மற்றும் நாளாகமம்) யூத வேதாகமத்தில் ஒவ்வொரு புத்தகமாகக் குறைக்கப்பட்டது. மேலும் ரூத் நியாயாதிபதிகளோடும், புலம்பல் எரேமியாவோடும் மற்றும் நெகேமியா எஸ்றாவோடும் இணைக்கப்பட்டது,

22 புத்தகங்களின் பிரிவு அர்த்தமுள்ளதாக இருந்தது, இந்தப் பரிசுத்தமான புத்தகங்களின் எண்ணிக்கையை 22 எபிரெய எழுத்துக்களோடும், ஆதாம் துவங்கி இஸ்ரயேலின் தந்தையாகிய யாக்கோபு வரைக்குமுள்ள சந்ததியோடும் இணைத்தார்கள். 119-ஆம் சங்கீதம், தேவனுடைய வார்த்தைக்கு ஒரு புகழுரையாகும். இந்தச் சங்கீதம், 8 வசனங்கள் கொண்ட 22 பகுதிகளாகும். அதில் ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு எபிரெய எழுத்துக்களைக்கொண்டு துவங்குகிறது. ஆலேப் முதல் தாவ் வரைக்குமுள்ள எபிரெய எழுத்துக்கள், வரிசையாக ஒவ்வொரு பகுதியின் துவக்கத்திலும் காணலாம். மேலும் பரிசுத்த ஸ்தலத்திலுள்ள விளக்கில் காணப்படும் ஆறு கிளைகளில், ஒவ்வொன்றிலும் மூன்று அலங்காரப் பொருட்களும், நடு தண்டில் நான்கு அலங்காரப் பொருட்களும் காணப்படுகிறது. இவைகள் பழைய ஏற்பாட்டின் பிரமாணங்களை அலங்கரிக்கக்கூடிய புத்தகங்களுடைய எண்ணிக்கைக்கு ஒப்பாக உள்ளது (யாத்திராகமம் 25:31-35).

**டனக்** (Tanakh)

இந்த 22 புத்தகங்களும் தோரா, தீர்க்கதரிசிகள் மற்றும் எழுத்துக்கள் என்று மூன்று கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவைகளுக்குத் தோரா (Torah) நிவீம் (Neviim) மற்றும் ஹெட்டுவிம் (Khetuvim) என்ற எபிரெய பெயர்கள் சூட்டப்பட்டது. "Tanakh" என்ற வார்த்தைக்கு TNK என்ற தொகுப்பே மூலாதாரம். நாம் பழைய ஏற்பாடு என்று அறிந்துகொண்டிருக்கும் புத்தகத்தை "Tanakh" என்று யூத ஜனங்களால் அறியப்பட்டுள்ளது.

மோசே எழுதின ஐந்து புத்தகங்களை தோரா கொண்டுள்ளது. யோசுவா, நியாயாதிபதி, சாமுயேல், இராஜாக்கள், ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் மற்றும் 12 சிறிய தீர்க்கதரிசிகளின் புத்தகங்களை நிவீம் (Neviim) உள்ளடக்குகிறது. குறிப்பாக தானியேலின் புத்தகம் ஹெட்டுவிம்-இல் (Khetuvim) காணப்படுகிறதினால் இந்த வரிசையில் காணப்படவில்லை. தானியேலின் புத்தகத்தை மிகவும் குறிப்பான தீர்க்கதரிசன எழுத்தாக நாம் எண்ணுவதினால் இந்தப் புத்தகம் இதில் இடம் பெற்றிருப்பது நம்முடைய உள்ளுணர்வுக்கு எதிரானதாக உள்ளது.

ஆயினும் 12 சிறிய தீர்க்கதரிசிகள் முன்பு இருந்ததுபோலவே ஒன்று கூட்டப்பட்டிருக்கும் காரணத்தை (ஹெட்டுவீம்) எழுத்துக்கள் மத்தியில் தானியேல் புத்தகம் இடம் பெற்ற விவரம் விளக்கமளிக்கலாம். அதில் நீண்ட புத்தகம், 14 அதிகாரங்கள் கொண்ட சகரியா புத்தகமாகும். இந்தப் புத்தகம், ஏசாயாவிலுள்ள 66 அதிகாரங்கள் எரேமியாவின் 52 அதிகாரங்கள் அல்லது எசேக்கியேல் 48 அதிகாரங்களைக் காட்டிலும் மிகவும் சிறியது. இவ்வாறாக சிறிய தீர்க்கதரிசிகள், மூன்று பெரிய தீர்க்கதரிசிகளைக் காட்டிலும் சிறியதாக உள்ளது. மற்றும் தானியேல் ஒரு வேறுபட்ட வகுப்பில் உள்ளது.

**ஏசாயா, எரேமியா, எசேக்கியேல்**

ஏசாயாவின் தீர்க்கதரிசனங்கள், யூதா இராஜாக்களாகிய உசியா, யோதாம், ஆகாஸ் மற்றும் எசேக்கியாவின் நாட்களில் கொடுக்கப்பட்டது என்று ஏசாயா 1:1 வசனம் கூறுகிறது. உசியா இராஜாவின் முடிவு நாட்களில் அதாவது தந்தையாகிய அமத்சியாவிடமிருந்து சுதந்தரம் பெற்ற காலத்தில், அவருக்கு குஷ்டரோகம் பிடித்ததினால், அவனுடைய சார்பில் அவனுடைய குமாரனாகிய யோதாம்

ஜனங்களை நியாயம் விசாரித்த அக்காலத்தில் ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தார் என்று பொருள்கொள்ளலாம் (2 இராஜாக்கள் 15:5). மனாசேயின் ஆட்சி காலம் வரைக்கும் ஏசாயா வாழ்ந்தார் என்றும், மனாசேயினால் அவர் கொல்லப்பட்டார் என்றும் பொதுவாக அனைவராலும் அறிந்துகொள்ளப்பட்டுள்ளது. எபிரெயர் 11:31-ஆம் வசனத்தில், "வாளால் அறுப்புண்டார்கள்" என்ற வார்த்தை ஏசாயாவின் மரணத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்க வேண்டும். இப்படியாக, ஏசாயா எழுபது வருடங்களாக ஊழியம் செய்திருக்க வேண்டும்.

யோசியாவின் 13-ஆம் வருடத்தில் (எரேமியா 1:1-5) எரேமியா தீர்க்கதரிசனம் உரைப்பதற்கு அழைக்கப்படும்போது கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு கடந்திருக்க வேண்டும். அதாவது சிதேக்கியாவின் 11-ஆம் வருடம் வரையிலும், அதைத் தொடர்ந்து சிதேக்கியா சிங்காசனத்தை இழந்து, எகிப்தில் எரேமியா இருந்தவரையில் அவருடைய ஊழியம் 40 வருடங்கள் நடந்தது. இந்த 40 வருடங்களும், பாஸ்டர் ரசலின் 40 வருட (1874-1914) ஊழியத்திற்கு இணையாகக் காணப்படுகிறது. இதில் குறிப்பிட்ட சம்பவங்கள், ஒன்றோடொன்று இசைவாகக் காணப்படுகிறது. [இயல்பாகக் காண்பதைக்காட்டிலும் அதிகமான தொடர்புகள் காணப்படுகிறது. விசுவாசமுள்ளவர்களுக்கும், துன்மார்க்கர்களுக்கும், இஸ்ரயேலர்களுக்கும், ஜாதிகளுக்கும் எரேமியா தூது உரைத்தார். தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கும், பெயர் கிறிஸ்தவ மண்டலங்களுக்கும், இஸ்ரயேலர்களுக்கும் மற்றும் ஜாதிகளுக்கும் பாஸ்டர் ரசல் தூது உரைத்தார். ஒருவர் மனித வரலாற்றைக் காட்டும் 7000 வருடங்களின் முதல் 1000 வருடத்தை ஆதாமுக்கும், இறுதி 1000 வருடத்தை இயேசுவின் ஆயிர வருட ஆட்சிக்கும் பிரித்துவிட்டால் இடையிலிருக்கும் வருடங்களை 2500 சரி பாதியான வருடங்களாகப் பிரிக்கலாம். எரேமியாவின் 40 வருடங்கள் முதல் 2500 வருட பகுதியிலும், பாஸ்டர் ரசலின் 40 வருடங்கள் (1874-1914) பின்வரும் 2500 வருடங்களில் காணப்படுகிறது. மேலும் எரேமியாவின் நாட்களில் நடந்த மூன்று சிறையிருப்பின் தேதிகள் அறுவடையின் அர்த்தமுள்ள சம்பவங்களோடு தொடர்புடையதாக உள்ளது].

எரேமியா வாழ்ந்த காலத்தில் எசேக்கியேல் ஒரு வாலிப தீர்க்கதரிசியாக பணியை துவக்கினார். சிதேக்கியா வீழ்ச்சி அடைவதற்கு 10 வருடங்களுக்கு முன், யோயாக்கீன் சிறைப்பிடித்தபோது, அவரும் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அந்நேரத்தில் 3023 யூதர்கள் சிறைபட்டுப்போனார்கள் (எரேமியா 52:28). அதற்குப் பின் எருசலேமில் எரேமியாவின் ஊழியம் தொடர்ந்தபோது பாபிலோனில் சிறைப்பட்டிருந்த யூதர்கள் மத்தியில் எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைத்து, 22 வருடங்கள் ஒரு தீர்க்கதரிசயாகப் பணியாற்றினார் (எசேக்கியேல் 1:1, 2, 29:17).

எரேமியா மற்றும் எசேக்கியேல் ஆசாரியர்களாக இருந்தார்கள். இப்படியாக அவர்கள் லேவியர்களாகவும் இருந்தார்கள் (எரேமியா 1:1; எசேக்கியேல் 1:3). ஏசாயா ஆமோத்சின் குமாரன் (ஏசாயா 1:1). "யூத வேதத்தின்படி ஒரு தீர்க்கதரிசியின் தந்தைக்குப் பெயர் கொடுக்கும்போது, அவருடைய தந்தையும் ஒரு தீர்க்கதரிசி ஆவார் என்று சொல்லப்படுகிறது." ஆமோஸ் இராஜாவாகிய அமத்சியாவுக்கு சகோதரனும், உசியா இராஜாவின் தகப்பன் என்றும் ரபிகளின் பாரம்பரியம் கூறுகிறது. இப்படியிருந்தால், தீர்க்கதரிசியாகிய தானியேலைப்போல, ஏசாயாவும் யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் (தானியேல் 1:6).

### பன்னிரண்டு சிறிய தீர்க்கதரிசிகள்

முன்னதாகவே குறிப்பிட்டபடி, ஏசாயா, எரேமியா மற்றும் எசேக்கியேல் புத்தங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த 12 "சிறிய" தீர்க்கதரிசிகளும் சுருக்கமாக எழுதப்பட்ட தங்களுடைய தீர்க்கதரிசன எழுத்துக்களினிமித்தம் இவ்வாறாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

முதல் ஆறு நபரும் அசீரிய சாம்ராஜ்யத்தின் காலத்தில் வாழ்ந்தார்கள் - ஓசியா, யோயேல், ஆமோஸ், ஒபதியா, யோனா மற்றும் மீகா. அடுத்த மூன்று தீர்க்கதரிசிகளும் - நாகூம், ஆபகூக் மற்றும் செப்பனியா - பாபிலோன் சாம்ராஜ்யத்தின் காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். கடைசி மூன்று தீர்க்கதரிசிகள் - ஆகாய், சகரியா, மல்கியா - பெர்சிய சாம்ராஜ்யத்திலே வாழ்ந்தவர்களும், இஸ்ரயேலின் திரும்பக்கொடுத்தலின் கால தீர்க்கதரிசியாக இருந்தார்கள். [இந்த 12 புத்தகங்களும் வரிசையாக நினைவில் வைத்துக்கொள்வது, சகோதரர்களுக்குச் சவாலாக இருக்கலாம். மீகா மற்றும் நாகூம், M மற்றும் N என்ற ஆங்கில எழுத்துக்களில் துவங்குகிறது. நம்முடைய ஆங்கில எழுத்துக்களில் M மற்றும் N எழுத்துக்களின் நடுவில் இருப்பதுபோல, இவைகள் 12 ஜோடிகளின் நடுவிலுள்ள ஜோடியாகும்].

யூதாவின் இராஜாக்களாகிய உசியா, யோதாம், ஆகாஸ் மற்றும் எசேக்கியாவின் நாட்களில், ஓசியா தீர்க்கதரிசனம் உரைத்து, ஏசாயா தீர்க்கதரிசியோடு

உடன் வாழ்ந்தவர். ஆனால் இஸ்ரயேலின் இராஜாவாகிய யோவாசின் குமாரனாகிய யெரோபெயாமின் நாட்களில் இவர் தீர்க்கதரிசனம் உரைத்தார் என்றும் ஓசியா 1:1-ஆம் வசனம் கூறுகிறது. ஓசியாவின் தீர்க்கதரிசனம் முதலாவது, இஸ்ரயேலின் 10 வடதிசை கோத்திரங்களுக்காக உரைக்கப்பட்டதினால், இந்தத் தொடர்பு ஒருவேளை இஸ்ரயேலோடு இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இரண்டு இராஜ்யங்களும் அவருடைய தீர்க்கதரிசனத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

பச்சைப்புழு, வெட்டுக்கிளி, பச்சைக்கிளி மற்றும் முசுக்கட்டைப்பூச்சியை அடையாளப்படுத்தும் அந்த நான்கு வாதைகளை, அசீரியர் இஸ்ரயேலின்மேல் தொடர்ந்து நடத்தின திடீர் தாக்குதல்களுக்கு ஒப்பிட்டு யோயேல் பேசுகிறார் (யோயேல் 1:4). இரண்டாம் அதிகாரத்தில் வடதிசையிலிருந்து வரவிருக்கும் படையெடுப்பைக்குறித்து எச்சரிக்கிறார். ஒருவேளை அசீரியா இராஜா செனகரீப்பின் பயனற்ற தாக்குதலின் மூலம் பண்டைய காலத்தில் இவை நிறைவேறியிருக்க வேண்டும். ஜனங்களின் முறையிடுதலை யேகோவா தேவன் கேட்டு இஸ்ரயேல் விடுவிக்கப்படும். அதைத் தொடர்ந்து பரிசுத்த ஆவி தாராளமாக ஊற்றப்படும். இது சுவிசேஷ யுக காலத்தில், பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறியது. அதைத் தொடர்ந்து வடதேசத்து எதிரியின் தாக்குதல்களிலிருந்து, இஸ்ரயேல் மீட்கப்பட்டு ஆயிரவருட ஆட்சியில் முழுமையாக நிறைவடையும்.

உசியா மற்றும் யெரோபெயாம் காலத்தில் ஆமோஸ் ஒரு மேய்ப்பராக இருந்தார். ஆகவே அவருடைய ஊழியம் ஏசாயாவின் ஊழியத்தை மேற்சென்றது (over lapped). ஒருவேளை ஏசாயாவின் துவக்க காலத்தில் இவர் தீர்க்கதரிசனம் உரைத்திருக்க வேண்டும். இஸ்ரயேலைச் சுற்றியுள்ள தேசங்களின் நியாயத்தீர்ப்பைக்குறித்து ஆமோஸ் பேசுகிறார் (1, 2 அதிகாரங்கள்). அதற்குப் பின் இஸ்ரவேலுக்கு எதிராக வரும் தீர்ப்புகளை நேரடியாக முன் அறிவித்தார். குறிப்பாக அவர் ஒரு இருளான நாளைக்குறித்து முன்னறிவித்தார். "அந்நாளிலே நான் மத்தியானத்திலே சூரியனை அஸ்தமிக்கப்பண்ணி, பட்டப்பகலிலே தேசத்தை அந்தகாரப்படுத்தி" (ஆமோஸ் 8:9). இது வரக்கூடிய நியாயத்தீர்ப்புக்கு அடையாளமாக இருந்தது. கிமு 763-ஆம் வருடம் சம்பவித்த சூரிய கிரகணத்தில் நிறைவேறியது. அப்போது இஸ்ரயேலின் 10 கோத்திரங்களுக்கு எதிராக நியாயத்தீர்ப்பு நடந்து, 40 வருடங்கள் விழுந்து போனார்கள் (கிமு 723). கிபி 33-ஆம் வருடத்திலிருந்து (10 இணையான வருடங்கள், ஒரு மத்திய வேளையில் இருள் ஆரம்பம் ஆகி, எருசலேமை கவ்வத் துவங்கியது. அதற்கு எதிராக நியாயத்தீர்ப்பு நடந்தது. கிபி. 73-இல், 40 வருடத்திற்குப் பிறகு அது மாசாடாவில் வீழ்ச்சியுற்றபோது தன் உச்சக்கட்ட நிலையை அடைந்தது.

ஒரே அதிகாரத்தைக்கொண்ட ஒபதியா, ஏதோமுக்கு எதிரான தீர்க்க தரிசனத்தைக் கொண்டுள்ளது. இது சுவிசேஷ யுகத்தின் முடிவிலுள்ள கிறிஸ்தவ மண்டலத்தை அடையாளப் படுத்துகிறது.

யோனா தீர்க்கதரிசனத்தின் பின்னணியின் காரணமாக, அவருடைய புத்தகத்தைக்குறித்து அனைவரும் நன்கு அறிந்திருக்கிறார்கள். ஒரு பெரிய மீன் யோனாவை விழுங்கினாலும், அவருடைய பணிக்காகக் காக்கப்பட்டார். இயேசு மூன்று நாள் கல்லறையில் இருந்ததுபோல, யோனாவும் மூன்று நாட்கள் ஆழத்தில் இருந்தார். [மூன்று பகல் மற்றும் மூன்று இரவு என்ற (யோனா 1:17) எபிரெய மரபு வழக்கு, தொடர்ந்துவரும் மூன்று நாட்களிலுள்ள இரவையும் பகலையும் குறிக்கிறது. யோனா மீனிற்குள் மூன்று இரவு மற்றும் மூன்று பகல் இருந்தார் என்று இந்த மரபு வழக்கு குறிப்பிடவில்லை. "மூன்றாம் நாளில் இயேசு எழுப்பப்பட்டாலும்" (மத்தேயு 12:40, 16:21) அவர் இந்தப் பூமியின் இருதயத்தில் இருக்கப்போவதை விவரிப்பதற்கு இதே சொற்றொடரைப் பயன்படுத்தினார். இயேசு அவருடைய மரணத்தை, யோனாவின் அனுபவத்தோடு ஒப்பிட்டு காண்பிப்பதற்கு சுவிசேஷங்களில் ஒரே ஒரு சந்தர்ப்பத்தில், "மூன்று பகல் மூன்று இரவு" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார்.] அடுத்து, யோனா அசீரியரின் தலைநகரமாகிய நினிவே பட்டணத்தை இரட்சித்ததுபோல, இயேசு இந்த உலகத்தை இரட்சிப்பார். யோனா என்ற வார்த்தைக்கு புறா என்று பொருள். மேலும் அவருடைய அனுபவங்கள் மூன்று யுகங்களில் பரிசுத்த ஆவியின் செயல்பாட்டை அடையாளப்படுத்துகிறது - யூத யுகம், சுவிசேஷ யுகம், ஆயிரவருட ஆட்சி. [துவக்கத்தில் யோனாவின் கலகம் யூத யுகத்திற்குப் பொருந்துகிறது. அவர் மீனின் வயிற்றில் இருந்த மூன்று நாட்கள், இந்த உலகம் அறியாதபடிக்குச் சபை வளர்ச்சியடைவதை அடையாளப்படுத்துகிறது. அவர் நினிவேக்கு அளித்த விடுதலை, ஆயிரவருட ஆட்சியில் இந்த உலகம் மனம் வருந்தி மீட்கப்படுவதை அடையாளப் படுத்துகிறது.]

மீகா, ஏசாயா தீர்க்கதரிசி வாழ்ந்த நாட்களில் வாழ்ந்தவர். தேவனுடைய இராஜ்யத்தைக்குறித்து முன்னறிவிக்கக்கூடிய பிரபலமான வசனமாகிய (மீகா

4:1-4) தன்னோடு வாழ்ந்த மூத்த தீர்க்கதரிசியாகிய ஏசாயாவின் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்க வேண்டும். "கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை." ஏனெனில் இவ்வசனங்கள் ஏசாயா 2:2-4 வசனங்களிலும் காணப்படுகிறது. அசீரியர்களின் தாக்குதல்களிலிருந்து யூதா விடுவிக்கப்படும் என்று மீகா 5:5-ஆம் வசனம் முன்னறிவித்தது. திறமைமிக்க இந்த சனகெரிப்பின் படையெடுப்பின் காலத்தில் ஏசாயாவும் வாழ்ந்துவந்தார் (ஏசாயா 36-38 அதிகாரங்கள்). நம்முடைய நாட்களில் வடதிசையிலிருந்துவரும் கோகிடமிருந்து, இஸ்ரயேலை தேவன் இரட்சிப்பதற்கு இந்த ஒரு படையெடுப்பு ஒரு சாட்சியாக இருந்தது. இஸ்ரயேல் தங்களை இரட்சிப்பதற்காக யேகோவா தேவனை நோக்கி ஜெபிக்கும்போது, தேவன் ஏழு மேய்ப்பர்களையும் எட்டு பிரப்புக்களையும் - ஏழு காலங்களில் வளர்ச்சியடைந்த சபையையும், முற்பிதாக் களையும் எழுப்புவார். அதற்குப் பின் இஸ்ரயேல் குறிப்பிடத்தக்க அபார வெற்றியை அடையும் (மீகா 5:6-15).

### நினிவேயின் வீழ்ச்சி மற்றும் பாபிலோனின் வளர்ச்சி

அசீரிய சாம்ராஜ்யத்தின் தலைநகரமாகிய நினிவே பட்டணத்தின் வீழ்ச்சியைக்குறித்து நாகூம் முன்னறிவித்தார் (நாகூம் 1:1). அநீதியான பாபிலோன் இஸ்ரயேலை தண்டிப்பதற்காக நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் என்று ஆபகூக் முன் அறிவித்தார். அதற்குப் பின் பாபிலோன் மிகக் கடுமையாக நியாயம் தீர்க்கப்படும் என்று தேவன் உறுதியளித்தார். பாபிலோன் தேசத்தைக் கடந்துச் செல்வதற்கு சற்றுமுன் நடந்த யோசியாவின் ஆட்சியின் காலத்தில் செப்பனியா தீர்க்கதரிசனம் உரைத்தார். தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன் இக்கால உலகத்தின் வல்லமைகளின் வீழ்ச்சிக்கும் இந்த நீண்டகால நியாயத்தீர்ப்புகள் பொருந்தக்கூடியதாக இருக்கிறது.

### பெர்சிய சாம்ராஜியத்தின்போது தீர்க்கதரிசி களின் மீட்பு

பெர்சிய சாம்ராஜ்யத்தின் இராஜாக்களாகிய கோரேஸ், காம்பைஸ் மற்றும் தரியு ஹிஸ்டாஸ்பெஸ் (Darius Hystaspes)-இன் காலத்தில் ஆகாய் மற்றும் இளைஞரான சகரியாவும் (சகரியா 2:4) சமகாலத்தில் வாழ்ந்தவர்கள். நீண்ட அளவிலான அர்த்தங்களைக்கொண்ட இவர்களின் தீர்க்கதரிசனங்களில், சபையின் வளர்ச்சி மற்றும் நிறைவையும், இக்காலத்தில் நடைப்பெற்றுக்கொண்டிருக்கும் இஸ்ரயேலின் திரும்பிக் கொடுத்தலிலிருந்து, இராஜ்யத்தின் ஸ்தாபனம் வரையில் நம்மை அழைத்துச் செல்கிறது. இரண்டு தலைமுறைகளுக்குப் பின் எஸ்றா மற்றும் நெகேமியாவின் காலத்தில் மல்கியா வந்திருக்க வேண்டும். அவருடைய தீர்க்கதரிசனமே பழைய ஏற்பாட்டை நிறைவு செய்த கடைசி தீர்க்கதரிசன காட்சியாகும். [நெகேமியா 12:22-ஆம் வசனமே பழைய ஏற்பாட்டின் இறுதியான வரலாற்றுக்குறிப்பாகும். இது கிரேக்க சாம்ராஜ்யம் வரை எட்டியது. பழைய ஏற்பாட்டின் கற்பனைகளை எஸ்றா தொகுத்திருந்தால் நெகேமியாவிலுள்ள இந்தப் பதிவுக்குப் பின் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.]

### தனிப்பட்ட வாழ்க்கை

"உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசி களையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" என்று மத்தேயு 5:12-ஆம் வசனத்திலும், "தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தவர்களுக்குப் புத்திரராயிருக் கிறீர்கள்" என்று மத்தேயு 23:31-ஆம் வசனத்திலும் இயேசு கூறுகிறார். "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே" (மத்தேயு 23:37) என்றும் அவர் கூறினார். பொதுவாக வழி தப்பிப்போகும் தேசங்களுக்கு எதிராக தேவனுடைய நியாயத்தீர்ப்பு அறிவிக்கும்படி இந்தத் தீர்க்கதரிசிகள் நியமிக்கப்பட்டதினால் ஒரு விசுவாசமுள்ள தீர்க்கதரிசியின் வாழ்க்கை பொதுவாக ஒரு உபத்திரவத்தின் வாழ்க்கையாக இருந்தது.

பழைய ஏற்பாட்டு பக்தியுள்ள இந்த மனுஷரைத் துன்பப்படுவதற்கும், பொறுமையாக

இருப்பதற்கும் மாதிரிகளாக எடுத்துக்கொள்ளும்படிக்கு யாக்கோபு நம்மை உந்துகிறார். "என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள்" (யாக்கோபு 5:10). பெரும்பாலும் அக்காலத்தில் தீர்க்கதரிசிகள் பட்ட கடுமையானப் பாடுகளைப்போல நாம் இக்காலத்தில் அனுபவிப்பதில்லை. ஆயினும் இந்த உலகம், மாம்சம் மற்றும் சாத்தானுடைய பாதிப்புகளை எதிர்த்து நிற்கும்பொழுது, நாம் போதுமானளவுக்குச் சோதிக்கப்படுகிறோம்.

நம்முடைய வாழ்க்கை சின்னசின்ன அனுபங்களினால் நிறைந்துள்ளது. நாம் பொறுமையோடு இந்த அனுபவங்களின் வழியாகச் செல்லும்பொழுது, இன்னும் அதிகமாக வரக்கூடிய கடுமையான சூழ்நிலைகளுக்குத் தேவைப்படும் குணலட்சணங்களை நாம் வளர்த்துக்கொள்ளுவோம். மேலும் வாழ்க்கை, இப்படிப்பட்ட சரித்திரங்களையும் அடக்கியுள்ளது.

கடுமையான முயற்சிகள் அல்லது அமைதலான அர்ப்பணிப்பு, அமைதியான சாந்தம் மற்றும் விடாமுயற்சியான வேலைகளை தேவன் எதிர்பார்கிறாரா? என்று ஒருவர் கேட்டார். ஒருவேளை இரண்டுமே பதிலாக இருக்கலாம். அதிகபட்சமான வாழ்க்கை சமாதானமான அர்ப்பணிப்பிலும், அமைதலான சாந்தத்தினாலும் மற்றும் வாழ்க்கையின் சிறப்பு வாய்ந்தப் பகுதிகளில் முரண்பாடற்ற செயல்களாய் இருக்கலாம். இதில் நம்முடைய கூடுகைகள், குழந்தைகளைப் பக்தியுள்ளவர்களாகப் பயிற்றுவிப்பது மற்றும் குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதுபோன்ற காரியங்களும் அடங்கும். ஆயினும் சில நேரங்களில் நீடித்திருக்கும் கடினமான அனுபவங்களை மேற்கொள்வதற்குக் கடுமையான முயற்சிகள் தேவைப்படுகிறது.

தீர்க்கதரிசிகளுக்கு இவ்வாறாகவே நடந்திருக்க வேண்டும். இவர்கள் ஆற்றல் மிக்க அனுபவங்களை நீடிய பொறுமையோடு சகித்திருக்க வேண்டும். சில நேரங்களில் எதிர்ப்புகளையும், சிறையிருப்புகளையும் மற்றும் மரணத்தையும் சந்தித்திருக்க வேண்டும். ஆனால் அமைதலான வாரங்கள், மாதங்கள் மற்றும் சில வருடங்கள்கூட இருந்திருக்கலாம். அப்போதும் குணாதிசயங்கள் வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும். இந்த நேரங்களில் கடினமான காலத்திற்கு தங்களை ஆயத்தப்படுத்தி இருக்கலாம்.


இவைகள் உபத்திரவ காலத்திற்கு அவர்களை ஆயத்தப்படுத்தியது. "மேகம் போன்ற திரளான சாட்சிகள்" என்று பவுல் முற்பிதாக்களை விவரிக்கிறார். இங்குச் "சாட்சிகள்" என்ற வார்த்தை "காணக்கூடியவர்கள்" என்ற பொருளுளைக் கொடுக்காமல், "சாட்சிக் கொடுப்பவர்கள்" என்ற பொருளுடையதாக உள்ளது. "மரணத்திற்குப் பின்னும்" "அவர்களுடைய நன் நடத்தையின் வழியாக" முற்பிதாக்கள் "திரளான சாட்சிகளானார்கள்."

இராஜ்யத்தில், இந்தத் திரளான சாட்சிகள், உலகத்தை நடத்துவதற்கு திரும்பும்போது, அவர்களின் விசுவாசத்தினிமித்தம் கனப்படுத்தப்படுவார்கள். அவர்களின் நாட்களிலிருந்த வல்லமையான காரியங்களுக்கு முன், சோர்ந்து போகாமல், விசுவாசத்தில் வலுவாகப் பெலனடைந்த, குறிப்பான குணமுடைய புருஷர்களையும் ஸ்திரீகளையும் குறித்து அப்போது அந்த உலகம் அறிந்து கொள்ளும். அவர்கள் பெற்றிருந்த விசுவாசத்திற்காக மரிக்க ஆயத்தமாக இருந்தார்கள். இப்படிப் பட்டவர்கள் தங்களை நடத்தக்கூடிய தலைவர்கள் என்பதை அறிவதினால் இந்த உலகம் மிகுதியான ஆசீர்வாதங்களைப் பெறும். பக்தியுள்ள விசுவாசம் மற்றும் பரிசுத்தமான நோக்கத்தையுடைய குணங்களிலிருந்து அவர்கள் தலைவர்களைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிந்து இந்த உலகம் அவர்களை நோக்கிப்பார்த்து கனப்படுத்தும்.

பல நூற்றாண்டுகளுக்கு நீடித்திருக்கும் படி தங்களுக்குப் பின்வரும் விசுவாசிகளின் விசுவாசத்தை ஊக்குவிப்பதற்கு அவர்கள் வாழ்க்கையையும், வேலைகளையும், கீழ்ப்படிதலுள்ள ஊழியக்காரர்களாக தாழ்மையோடு அவர்களின் அர்ப்பணிப்பின் சாட்சிகளை அப்போது மரித்துப்போன தீர்க்கதரிசிகள் இப்போது உணரும்போது நிச்சயமாகத் திகைப்படைவார்கள் அந்த ஆயிர வருடத்தில் பில்லியன் கணக்கான ஜனங்கள் மத்தியில், "பலரை நீதிக்குட்படுத்துவதற்கு" அவர்கள் வம்சவழியாக வந்த நற்பண்புகள் அப்போது தாராளமாகச் செயல்படும் (தானியேல் 12:3).

**தீர்க்கதரிசிகளிடமிருந்து பெறும் ஆதாயம்**

# ஏசாயா, எரேமியா மற்றும் தானியேல்



Jeff Mezera

"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக" (2 தீமோத்தேயு 3:16).

நம்முடைய இருதயத்தில், தீர்க்கதரிசிகள் ஒரு விசேஷித்த இடத்தைப் பிடித்திருக்கிறார்கள். கலகக்காரர்களாகிய வணங்கா கழுத்துள்ள ஜனங்களுக்கு, தேவனுடைய செய்தியை அறிவிக்க வேண்டியதே அவர்களுடைய நன்றி எதிர்பாராத வேலையாய் இருந்தது. இதன் விளைவாக சிலர் மிகக் கொடுமையான உபத்திரவங்களை அனுபவித்தார்கள்.

பழைய ஏற்பாட்டின் நான்கு பெரிய தீர்க்கதரிசிகளில், மூன்று பேர்களைக்குறித்து நாம் காணலாம். அவர்களின் மாதிரிகளையும், அவர்களின் போராட்டத்தில் கர்த்தருக்காகக் கொண்டிருந்த விசுவாசத்தையும் நாம் ஆராய்ந்து பார்க்கலாம். இவர்களின் அனுபவங்களின் வழியாக அவர்கள் தேவனுடைய சித்தத்தை எவ்வாறு செய்தார்கள் என்றும், எவ்வாறு கீழ்ப்படிந்தார்கள் என்றும், தேவனுடைய ஊழியத்தைச் செய்யும்பொழுது எவ்வளவு அருமையாக வளர்ச்சியடைந்தார்கள் என்பதைக்குறித்தும் ஆராய்ந்துப்பார்த்துப் பிரயோஜனப்படலாம்.

### ஏசாயா, சுத்திகரிக்கப்பட்ட ஒரு ஊழியக்காரர்

ஏசாயா நேர்மையுள்ளவராகவும், தைரியமுள்ளவராகவும் எதிலும் நலமானதை காணக்கூடியவரும் அவருடைய வேலையில் முழுமையான அர்ப்பணிப்பை உடையவராகவும் இருந்தார். ஏசாயாவின் நேர்மையான குணத்தை ரோமர் 9:28-ஆம் வசனத்தில் பவுல் விவரிக்கிறார். மேலும் பரிசுத்த ஆவி ஏசாயாவின் மூலம் பேசினார் என்று கூறுகிறார் (அப்போஸ்தலர் 28:25). மற்றும் அவர் தைரியமுள்ளவர் என்று ரோமர் 10:20-இல் விவரிக்கிறார்.

இராஜாவாகிய எசேக்கியாவின் இறுதி வியாதியின்போது, தேவன் ஏசாயாவின் குரலாய் அவரோடு தொடர்புகொண்டார் (ஏசாயா 38). பலர் இந்த அனுபவங்களில் தேவனுடைய செய்தியைத் திருத்தி அமைத்து தங்களுடைய சொந்த கருத்துக்களைக் கூறுவதற்கு விருப்பப்பட்டிருக்கலாம். ஆனால் ஏசாயா மிகுந்த நம்பிக்கையுடனும், தைரியத்துடனும் தேவனுடைய செய்தியைத் துல்லியமாக அறிவித்தார். அதில் ஏசாயாவின் குணத்திலுள்ள வலிமையைக் காணலாம். பிதாவாகிய தேவன் இராஜாவாகிய எசேக்கியாவின் ஜெபத்திற்கு ஏசாயாவின் வாயின் வழியாகப் பதிலளித்தார். தீர்க்கத்தரிசியாகிய ஏசாயாவுக்கு முன் காணப்பட்ட எசேக்கியாவின் கீழ்ப்படிதல், ஏசாயாவின் அருமையான குணத்திற்குச் சான்று பகருகிறது.

ஏசாயா அறிவித்த தீர்க்கத்தரிசன செய்திகளின் அளவை நாம் காணும்போதும் மற்றும் தேவன் ஒரு சுத்திகரிக்கப்பட்ட வாழ்க்கையை அவர் வாழ வேண்டுமென்று சொல்லப்பட்டதைக்குறித்தும் நாம் ஆராய்ந்துப்பார்க்கும்போதும், நம்முடைய சொந்த வாழ்க்கையில் நாம் பெற்ற அளவில்லாத சத்தியத்தினால் கிடைத்த மகிழ்ச்சியை ஒப்பிட முடியாது. ஏசாயாவின் வேலையினிமித்தமாக நாம் ஓரளவிற்கு அறிவிலும் புரிந்துகொள்ளுதலிலும், ஐசுவரியவான்களானோம். ஏசாயாவின் நாட்களில் அவரால் நிறைவேற்றப்பட்ட மிகப்பெரிய வேலையினால் நாம் தாழ்மைப்படுகிறோம்.

ஏசாயா என்ற பெயருக்கு, "யேகோவாவின் இரட்சிப்பு" என்று பொருள். "யோசுவா" மற்றும் "இயேசு" என்ற நாமங்களுக்கும் இதே பொருள் கூறப்படுகிறது. மேலும் இயேசுவைக்குறித்து தீர்க்கதரிசனம் உரைப்பதற்கான பாக்கியத்தை ஏசாயா பெற்றிருந்தார் (ஏசாயா 53). இந்நாளில் காலம் கடந்திருந்தாலும் ஏசாயாவின் ஆயிரவருட ஆட்சியின் தீர்க்கதரிசனங்களைப் புரிந்துகொள்வதற்கான வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம். ஆக இப்பொழுது நம்முடைய கண்களுக்கு முன்பாக பல நிறைவேற்றங்களை கண்டுகொண்டிருக்கிறோம்.

ஏசாயா, யூத மேசியாவைக்குறித்தும், வருங்காலத்தில் கிறிஸ்துவின் பூமிக்குரிய அந்த இராஜ்யத்தில் இஸ்ரயேலர்களின் பங்கைக்குறித்தும் தீர்க்கத்தரிசனம் உரைத்திருக்கிறார். தேவனுடைய வாக்குத்தத்தங்களை மிக அழகாக கவிதை நயத்தில் தீர்க்கத்தரிசனம் உரைத்திருக்கிறார் (ஏசாயா 1:29, 7:14, 9:1-6, 26:9, 35, 53). உண்மையில் ஏசாயாவின் காலத்தில் வாழ்ந்த பல அறிஞர்கள் அவரை வேதாகமத்தின் ஷேக்ஸ்பியர் என்று அழைத்தார்கள்.

ஏசாயாவின் தனிப்பட்ட வாழ்க்கையைக் குறித்து சில காரியங்களை மட்டுமே நாம் அறிந்திருக்கிறோம். அவர் ஆமோத்சின் குமாரன்

(ஏசாயா 1:1, 2:1), அவருடைய மனைவி "தீர்க்கதரிசியானவள்" என்றும் அழைக்கப்பட்டாள் (ஏசாயா 8:3). உசியா இராஜாவின் மரணத்திலிருந்து யோதாம், ஆகாஸ் மற்றும் எசேக்கியா வரையில் அவருடைய ஊழியம் தொடர்ந்தது (ஏசாயா 1:1, 6:1). அசீரியர்கள், பாபிலோனியர்கள் மற்றும் பெர்சிய இராஜ்யங்கள், பாபிலோன் மற்றும் யூதேயாவில் சிறைபிடிக்கப்பட்ட இஸ்ரயேலர்கள் பெர்சியரின் காலத்தில் தேசம் திரும்பியதைக்குறித்தும் பல முக்கியமான வரலாற்று ஆதாரங்களை ஏசாயாவின் தீர்க்கதரிசனங்களில் காணலாம்.

யூதேயா மற்ற தேசங்களுக்கு விரோதமாக நடத்தின யுத்தங்களைப்பற்றியும் அதின் விளைவுகளைப்பற்றியும் ஏசாயா ஆர்வமூட்டும் விவரங்களைக்கொடுத்துள்ளார். எடுத்துக்காட்டாக எப்பிராயீமோடு நடந்த யுத்தம் (ஏசாயா 7:1-8:18), அஸ்தோத்துக்கு எதிரான முற்றிக்கை (ஏசாயா 20) மற்றும் சனகெரிப்பினால் படையெடுப்பு (ஏசாயா 36-39 அதிகாரங்கள்). இராஜாவாகிய எசேக்கியா அசீரியர்களை எதிர்த்து நிற்கும்படி ஏசாயா அவரை ஊக்குவித்தபோது, அந்த அபாயத்தை எதிர்நோக்கக்கூடிய திராணியையும், தைரியத்தையும் குறித்த ஒரு கவர்ச்சிகரமான தனிப்பட்ட சாட்சியை ஏசாயா நமக்குக்கொடுத்திருக்கிறார் (ஏசாயா 37:1-7,14). அவருடைய மரணத்தைக்குறித்து நேரடியான பதிவுகள் நம்மிடம் இல்லை. [எபிரெயர் 11:37-ஆம் வசனத்தில், "வாளால் அறுப்புண்டார்கள்" என்று ஏசாயாவைக்குறித்து பவுல் விவரிக்கிறார் என்று வழக்கமாகக் கருதப்படுகிறது. இது மனாசேயின் ஆட்சியின்போது நடைபெற்றது].

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளில், ஏசாயாவின் புத்தகமே அதிகபட்சமாக 40 முறைகளுக்கு மேலாக புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்களால் கோடிட்டு காண்பிக்கப்பட்டுள்ளது. இயேசுதாமே ஏசாயா புத்தகத்திலிருந்து ஏழு முறைகள் மேற்கோள்காட்டினார். மற்றும் தம்மைக்குறித்தும் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களைப் பொருத்தி காண்பித்தார் (ஏசாயா 61:1-2; லூக்கா 4:16-22; லூக்கா 22:37; ஏசாயா 53:12). எத்தியோப்பியா மந்திரியிடம், இயேசுதான் மேசியா என்பதைக் கற்பிக்கும்போது பிலிப்பு, ஏசாயா 53-ஆம் அதிகாரத்தை மேற்கோள் காட்டினார் (அப்போஸ்தலர் 8:32; ஏசாயா 53:7). பவுல் புறஜாதிகளுக்குப் போதிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை, தீர்க்கதரிசியாகிய ஏசாயாவின் வாக்கியங்கள் ஆதரவளித்தது (அப்போஸ்தலர் 13:47; ஏசாயா 49:6). உயிர்த்தெழுதலைப்பற்றி கற்பிப்பதற்கு பவுல் ஏசாயா தீர்க்கதரிசனத்தைப் பயன்படுத்தினார் (1 கொரிந்தியர் 15:54; ஏசாயா 25:8). மற்றும் வருங்காலத்தில் இஸ்ரயேலர்கள் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள் என்ற வாக்குத்தத்தத்தை ஏசாயா பதிவு செய்திருக்கிறார் (ரோமர் 11:26; ஏசாயா 59:20).

தனக்குச் சரியென்று தோன்றிய எந்தக் காரியத்தையும் செய்வதற்கு ஏசாயா ஒருபோதும் பின்வாங்கவில்லை. அவருடைய சொந்த சந்தேகங்கள் மற்றும் விளக்கவுரையினால் வழி நடத்தப் படுவதைக் காட்டிலும் தேவன்மேல் அவர் நம்பிக்கை உள்ளவராக இருந்தார். நம்மில் யாரொருவர் சுவிசேஷ யுக தீர்க்கதரிசன வரத்தைப் பெற்றிருந்தாலும் யூத யுகத்தின் ஊழியத்தில் காணப்படும் ஏசாயாவின் விசுவாசத்தை தங்களுடைய ஊழியத்திற்கு ஒரு மாதிரியாக முன் வைக்கலாம். தொடர்புகொள்ளக்கூடிய வரத்தை நாம் பெற்றிருந்தால் ஏசாயாவைப்போல தளரா உழைப்போடு அதைப் பயன்படுத்த வேண்டும். மேலும் நாம் பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். அதற்குப் பின் உண்மையில் நாம் விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் அறிவிலும் எவ்வளவு ஐசுவரியமுள்ளவர்கள் என்பதை நாம் காணலாம். நாம் உணர்ச்சி வசப்படும் நிலையில் எதிலும் நன்மையையே காணும் மனநிலையைப் பெறாதவர்களாக இருந்தால் அடிக்கடி விரக்தியான சூழ்நிலையைச் சந்தித்த ஏசாயாவோடு ஒப்பிட்டு நாம் பெற்றுள்ள விசுவாசம், நம்பிக்கை, அறிவில் எந்தளவுக்கு உண்மையாக ஐசுவரியமுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை கற்றுக் கொள்ளலாம். நாம் தேவனுடைய வேலையைச் செய்வதற்கு அனுமதி பெறும்படியாக, சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இதின்விளைவாக நம்முடைய சொந்த சுத்திகரிப்பு நிறைவேறுகிறது. நாம் செய்ய வேண்டிய ஒரு காரியம் - ஏசாயாவின் proactive எடுத்துக்காட்ட வேண்டும்.

### எரேமியா, அவருடைய எலும்புகளுக்குள் தேவனுடைய வார்த்தை

எரேமியா என்ற பெயருக்கு, "யேகோவாவால் உயர்த்தப்பட்டவர்" என்று பொருள். பிறப்புக்கு முன் (எரேமியா 1:5), தேவனால் பிரித்தெடுக்கப்பட்ட இந்த தீர்க்கதரிசிக்கு இது பொருத்தமான பெயராகும். தீர்க்கதரிசன வேலைகளினிமித்தமாக எரேமியா பல உடல் ரீதியான மற்றும் மன ரீதியான கடினமான அனுபவங்களினால் சூழப்பட்டார். ஆனால் எரேமியா சகலத்தையும் அனுபவிக்க வேண்டுமென்று விரும்பினார். ஆகவே அவருக்கு தீர்க்கதரிசன பொறுப்புகளும், பாபிலோன் சிறையிருப்பின் கால கணக்கு களோடுங்கூட இன்னும் பல காரியங்கள் அவரிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. தீர்க்கதரிசன

தொடர்புகளில் இந்தத் தீர்க்கதரிசனம் ஒரு முக்கியமான இணைக்கும் சங்கலியாக இருக்கும் என்பதை அவர் அறியாதிருந்தார். எரேமியாவின் கால தீர்க்கதரிசனத்தைக்குறித்து, இன்னும் அதிகமாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்று தீர்க்கதரிசியாகிய தானியேல் அதற்குப் பின் ஜெபித்தார்.

ஏசாயா, மற்ற தீர்க்கதரிசிகளைப்பார்க்கும்போது, எரேமியா தன்னைக்குறித்து அவருடைய புஸ்தகத்தில் அதிகமான விவரங்களைக் கொடுத்திருக்கிறார். எரேமியா ஒரு கதை புத்தகம் எழுதி இருந்தால், அந்தக் கதைக்கு அவரே கதாநாயகனாக இருந்திருப்பார். எரேமியாவின் தீர்க்கதரிசனங்கள் ஏறத்தாழ அவரைப்பற்றி எழுதப்பட்ட வரலாறாக காணப்படுகிறது. அதில் அவருடைய தனிப்பட்ட அனுபவங்களும், தடங்கல்களும் மற்றும் உபத்திரவங்களையும்பற்றி காணலாம். இதை மற்ற தீர்க்கதரிசிகளின் மனநிலையுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் ஓர் சுவாரசியமான வேறுபாடு அமைந்துள்ளது. ஒருவேளை (இந்தப் புத்தகம்) இது தேவன் தனது வேலைக்காக பணியமர்த்திய ஜனங்களுக்கு ஊக்குவிக்கும் உணர்வை வழங்குவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

எரேமியாவின் தீர்க்கதரிசன ஊழியம், அவர் இளைஞனாக இருக்கும்போது துவங்கியது. கிட்டதட்ட 20 வயதாக இருந்திருக்க வேண்டும் (எரேமியா 1:6). துவக்கத்தில் எரேமியா ஆர்வமற்றவராக இருந்த போதிலும், அவருடைய தயக்கங்களை தேவனுடைய பெலத்தினால் மேற்கொண்டு வெற்றியடைந்தார். எரேமியா தன்னுடைய இளமையை காரணம் காட்டித் தன்னை இந்த ஊழியத்திலிருந்து விலக்கிக்கொள்ள முயற்சித்தார். ஆயினும் பின் தொடர்ந்துவந்த பல்வேறுபட்ட அனுபவங்களில் பல தேவனுடைய மேற்கொள்ளக்கூடிய செயல்கள் தீர்க்கதரிசியாக அவர் செயல்படுவதற்கு ஊக்குவித்தது (எரேமியா 1:9, 23:18). தேவன் எந்த நோக்கத்திற்காக நம்மை அழைக்கின்றாரோ, அந்தப் பங்கை ஏற்றுக்கொள்வதில் நமக்குள் எவருக்காவது சிரமம் இருப்பவர்களுக்கு இது ஒரு முக்கியமான பாடமாகும்.

எரேமியாவின் முதல் வாழ்க்கையின் நிலைக்குப் பின் அவருடைய ஊழியம் மிகக் கடுமையாக இருந்தது. அவருடைய சொந்தப் பட்டணத்தின் ஜனங்களே அவரைக் கொல்ல திட்டமிட்டார்கள் (எரேமியா 11:19, 21). அவருடைய தகப்பன் வம்சத்தாரும் அவருக்குத் துரோகம்பண்ணினார்கள் (எரேமியா 12:6). அவர் திருமணம் செய்துகொள்ளவில்லை (எரேமியா 16:2). மற்றும் வெகு சில நண்பர்கள் மட்டுமே அவருக்கு இருந்தார்கள் (எரேமியா 20:7). இதன் விளைவாக அவர் சோர்வடைந்து மௌனமானார் (எரேமியா 8:18). மற்றும் அவர் கொடூரமாக உபத்திரவப்படுத்தப்பட்டார் (எரேமியா 15:10, 11, 15-21).

எரேமியா கடைசியாக மூன்று யூத இராஜாக்களின் ஆட்சியின்போது, தீர்க்கதரிசனம் உரைத்தார். அவர் தீர்க்கதரிசியாகிய செப்பனியாவின் காலத்தில் வாழ்ந்தார். யோசியாவின் சீர்திருத்த காலங்களின் போது, எரேமியா மௌனமாக இருந்தாலும், யோயாகீம் மற்றும் சிதேக்கியா ஆட்சி செய்த காலங்களில் இஸ்ரயேலுக்கும், யூதாவுக்கும் எதிராக மிகக் கடினமான அடிகளைக் கொடுக்கக்கூடிய தண்டனைகளை தீர்க்கதரிசனங்களாக உரைத்தார் (எரேமியா 1:1-4). ஆலயம் புதுப்பிக்கப்பட்ட பின்னும், யூதேயாவில் நியாயப்பிரமாணங்களை மீறக்கூடிய தவறுகள் அதிகபட்சமாகக் காணப்பட்டது. இதினிமித்தமாக எரேமியா அவிசுவாசமுள்ள இஸ்ரயேல் தேசத்தாருக்கு இதை ஒப்பிட்டு காண்பித்தார். "பின்னும் கர்த்தர் என்னை நோக்கி: யூதா என்கிற துரோகியைப்பார்க்கிலும் சீர்கெட்ட இஸ்ரவேல் என்பவள் தன்னை நீதியுள்ளவளாக்கினாள்" (எரேமியா 3:11).

எரேமியா, இஸ்ரயேலின் இரு வீடுகளைக்குறித்துச் சிந்தித்துக்கொண்டிருந்தார். மேலும் நேரடியாக இவ்விரு வீட்டாருக்கும் அவர் தீர்க்கதரிசனம் உரைத்தார். அவர் சொன்ன தீர்க்கதரிசனங்களின் தன்மையினிமித்தம் அவர் ஒருமுறைக்கு மேற்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் (எரேமியா 32:2, 37:15, 37:20, 21, 38:1-6,13, 28). பாபிலோன் இராஜா அவருக்கென்று ஒரு இருப்பிடத்தைக் கொடுத்தப் போதிலும், எஞ்சியுள்ள யூதர்களோடு தங்கியிருப்பதையே எரேமியா தெரிந்துகொண்டார் (2 இராஜாக்கள் 25:22; எரேமியா 39:13, 14, 40:4-6).

ஆனால் பாபிலோனில் சகல வசதிகளோடு குடியிருப்பதற்குப்பதிலாக, கலகக்காரர்களான யூதர்களால் எரேமியா சிறைபிடிக்கப்பட்டு எகிப்துக்குக் கொண்டுச்செல்லப்பட்டார். அங்கு அவர் மரணபரியந்தம் தொடர்ந்து தீர்க்கத்தரிசனம் உரைத்தார் (2 இராஜாக்கள் 25:26; எரேமியா 42:1-43:7). எகிப்துக்கு விரைந்தோடுவதினால் தேவனுடைய தண்டனைக்குத் தப்புவது இல்லையென்று எரேமியா அவருடைய யூத சகோதரர்களை எச்சரித்தார். ஆனால் ஒருவரும் அவருடைய வார்த்தைகளுக்குச் செவி கொடுக்கவில்லை (எரேமியா 43:8-44:30). ஏசாயாவைப்போல, எரேமியாவின் மரணத்தைக்குறித்த நேரத்தையோ அல்லது

சூழ்நிலைகளையோ வசனங்கள் குறிப்பிடவில்லை. ஆசாரியராகிய எரேமியாவின் தீர்க்கதரிசனத்தின் துவக்கம், மிகக் கவனமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அவர் எழுதின இரு புத்தகங்களிலுமே அவருடைய மரணம் பதிவு செய்யப்படாமல் இருப்பது விநோதமானது.

விடா முயற்சியோடு உபத்திரவங்களை எதிர்நோக்க வேண்டுமென்று நாம் எரேமியாவினிடமிருந்து கற்றுக்கொள்ளலாம். எரேமியாவைப்போல நம்முடைய கடினமான அனுபவங்களையும், தோல்விகளையும் கற்றுக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பாக அவைகளை வடிவமைக்க வேண்டும். அதற்குப் பின் அவைகளைக் கற்பிக்கக்கூடிய கருவிகளாகப் பயன்படுத்தி மற்றவர்களை ஊக்குவிக்க வேண்டும். எரேமியாவைப்போல நம்முடைய அனுபவங்களின் மதிப்பும் தலைமுறைகளுக்கு ஒரு தாக்கத்தை ஏற்படுத்தலாம். தனிப்பட்ட, நம்பிக்கையான ஆலோசகராக மற்றும் சாட்சிகொடுக்கக்கூடிய கூடுகையில் நம்முடைய அனுபவங்களின் மதிப்பைப் பகிர்ந்துகொள்வதற்கான ஒரு வாய்ப்பைப் பெறுகிறோம். நமக்கு எரேமியாவின் மாதிரி முன் வைக்கப்பட்டிருப்பதுபோல, வாடி வதங்கும் இருதயங்களை ஊக்கப்படுத்தலாம் அல்லது நம்முடைய வாழ்க்கையில் தேவன் செய்திட்ட இரட்சிப்பின் வேலைகளைக்கூறி கவலையுள்ளவர் களை உற்சாகப்படுத்தலாம். எரேமியா தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையைச் செயலாற்றியதுபோல நாமும் செயலாற்றலாம்!

## தானியேலின் நேர்மை மற்றும் சத்தியத்தில் நிலைத்திருத்தல்

தானியேல் என்பதற்கு "தேவனே என்னுடைய நியாயாதிபதி" அல்லது "தேவனால் நியாயத்தீர்க்கப்படுதல்" அல்லது "தேவனுடைய நியாயத்தீர்ப்பு" என்று பொருளாகும். தானியேலுடைய தீர்க்கதரிசனத்தில், இஸ்ரயேல் மற்றும் புறஜாதி தேசத்தார்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றிய திறவுகோலான பாடங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. தானியேலின் துவக்க வாழ்க்கையைப்பற்றி நமக்கு எந்த அறிவும் இல்லை. ஆனால், வாலிப வயதில் அவர் சிறைபிடிக்கப்பட்டு கொண்டுச் செல்லப் பட்டார் என்று அறிந்திருக்கிறோம் (தானியேல் 1:4). பாபிலோனுக்கு இராஜாவாக பிரதிஷ்டைப் பண்ணப் படுவதற்குச் சற்று முன் நேபுகாத்நேச்சார் எருசலேமை முதன்முதலில் முற்றிக்கையிட்டபோது இது நடந்தது. [இவருடைய தந்தை நெபோபொலாசார் ஆட்சியின் கடைசி வருடத்தில் இது நிகழ்ந்தது என்று ஜோசபஸ் பதிவு செய்திருக்கிறார். நேபுகாத்நேச்சார் தன்னுடைய தந்தையின் மரணத்தைக்குறித்தச் செய்தியைக் கேட்டபோது, பிடிக்கக்கப்பட்ட கைதிகளை நாடு கடத்திவிட்டு தானும் பாபிலோனின் சிங்காசனத்தைக் கைப்பற்றும்படிக்கு ஒரு சிறிய கூட்டத்தாரோடு பாலைவனத்தைக் கடந்துச் சென்றார்]. (எரேமியா 25:1, 46:2; தானியேல் 1:1). தானியேல் அரச குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்ததினாலும், பாபிலோனில் பயன்படும்படியாக அவரிடம் வாக்களிக்கப்பட்ட தாலந்துகள் இருந்தபடியினாலும், அவர் கைதியாகக்கொண்டுச் செல்லப்பட்டு, அவருக்குப் பல பயிற்சிகள் கொடுக்கப்பட்டது (தானியேல் 1:3).

சிறு வயது முதல் தானியேலின் மனகட்டுப்பாடு, இராஜாவின் மேஜையிலிருக்கும் உணவைத் தவிர்ப்பதற்கான ஆற்றலைக் கொடுத்தது. அவர் குணத்தில் காணப்பட்ட வலிமை, விக்கிரகங்கள் தன்னைக் கறைப்படுத்தாதபடிக்குக் காத்துக்கொண்டது. தானியேல் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் நிலை நின்றதின் விளைவாக, தானியேல் பலத்திலும், ஞானத்திலும் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும் (தானியேல் 1:8-16). இதினிமித்தமாக தேவன் தீர்க்கதரிசியாகிய தானியேலுக்கு, குறிப்பிடத்தக்க ஞானம், அறிவு, பலமொழிகளைக் கற்றுக்கொள்ளக்கூடிய ஆற்றல் போன்றவைகளை பரிசளித்தார், "அப்பொழுது இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ராஜகுலத்தார்களிலும் துரைமக்களிலும் யாதொரு மாசும் இல்லாத வர்களும், அழகானவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்களுமாகிய சில வாலிபரைக் கொண்டுவரவும், அவர்களுக்குக் கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக் கொடுக்கவும் ராஜா தன் பிரதானிகளின் தலைவனாகிய அஸ்பேனாசுக்குக் கற்பித்தான்" (தானியேல் 1:3-4).

தானியேலின் தீர்க்கதரிசனங்கள் மிகவும் துல்லியமானது. மேலும் இதன் விளைவாக அவைகளின் நம்பகத்தன்மையைக்குறித்து புலமைவாய்ந்த விவாதங்கள் நவீன நாட்களில் நடைபெறுகிறது. வரலாற்றுச் சம்பவங்கள் உண்மையில் நடந்து முடிந்தப்பின் தானியேலின் தீர்க்கதரிசனங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று சில அறிஞர்கள் நம்பி, தானியேலின் வழியாக தேவனுடைய ஊக்குவிக்கும் வல்லமையைக் குறைக்கிறார்கள். ஆனால் தானியேல் தீர்க்கதரிசனம் ஆதியில் கல்தேயர் மொழியில் எழுதப்பட்டது என்ற உண்மையை ஒருவரும் மறுக்க இயலாது (தானியேல் 1:4-7:28). இதுவே

அவருடைய எழுத்துக்களின் நம்பகத்தன்மையை ஆதரிக்கிறது. தானியேலின் தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் நிச்சயமாக நம்பத்தக்கது என்பதை நாம் உறுதியாகக் கூறலாம். ஏனெனில் நம்முடைய நாட்களிலும் அவைகளின் நிறைவேற்றத்தைக் காண்கிறோம்!

தானியேலின் அறிவு, ஞானம், சொப்பனங்களுக்கு விளக்கம் கூறும் திறமையைப்பற்றி இராஜாவுக்குத் தெரியவந்தது. ஆகவே இராஜா தானியேலை அயல்நாடாகிய பாபிலோன் சாம்ராஜ்யத்திற்கு ஒரு மந்திரியாகவும், மாகிகளின் (தானியேல் 2:48) தலைவராகவும் ஏற்படுத்தினார். ஒருவேளை இதே மாகியின் பள்ளி, பல நூற்றாண்டுகளுக்குப்பின் பெத்லகேமின் நட்சத்திரத்தைப் பின் தொடர்ந்து, யூதர்களுக்கு இராஜாவாகப் பிறந்தவரை கண்டுபிடித்திருக்க வேண்டும் (மத்தேயு 2:1, 2, 7-12). இப்படியிருக்கையில், நிகழ்காலத்தில் வாழ்ந்துகொண்டே வேதம் முழுவதிலும் மிகுந்த வெற்றிகரமான தொலைதூர தாக்கத்தை விளைவிக்கும் வித்துக்களை எதிர்கால தலைமுறையினருக்காக விதைக்கும் திறனை தானியேல் கொண்டிருந்ததை நாம் காணலாம். இராணியின் கருத்துப்படி எவரும் பெற்றிராத உத்தமும், திறமையும் தானியேல் பெற்றிருந்தார். (தானியேல் 5:11:12).

பெர்சியர்கள் பாபிலோனைக் கைப்பற்றினதற்குப் பின் பெர்சிய சாம்ராஜ்யத்தில் மூன்று தலைமை ஆளுநர்களில் ஒருவராக தானியேல் உயர்த்தப்பட்டார் (தானியேல் 6:2). பகைமையான இரகசிய திட்டங்கள் மற்றும் வஞ்சனைகளின் விளைவாக தானியேல் சிங்கங்களின் கெபியில் போடப்பட்டபோது அவருடைய விசுவாசமும், மனோபலமும் அவரைக் காத்துக்கொண்டது. அவர் செய்த குற்றம் என்ன? தேவனை நோக்கி மூன்று முறை தினமும் ஜெபித்தார் (தானியேல் 6:10-23). தானியேலைப்போல நாம் சிங்கங்களின் கெபிக்குள் நடந்துச்செல்ல முடியுமா? நீதியினிமித்தம் அநீதியான உபத்திரவத்தை விசுவாசத்தோடு எதிர் நோக்குவதற்கு இது எவ்வளவு மேன்மையான எடுத்துக்காட்டாகும்!

எசேக்கியேல் தீர்க்கதரிசி தானியேல் காலத்தில் வாழ்ந்தவர். இந்த தானியேல் நீதி மற்றும் ஞானத்திற்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டு என்று தானியேலைக்குறித்து எசேக்கியேல் கூறுகிறார் (எசேக்கியேல் 4:14, 20, 28:3). தானியேல் அவருடைய எந்தத் தீர்க்கதரிசனங்களையும் எழுதுவதற்கு முன்னதாகவே எசேக்கியேல் இந்த மதப்பீட்டை எழுதியிருக்க வேண்டும் என்பதை நாம் பார்க்கும்போது, மேலும் திகைப்பூட்டக்கூடியதாய் இருக்கிறது. "பாழாக்கும் அருவருப்பு" குறித்த தானியேலின் தீர்க்கதரிசனத்தை இயேசு மேற்கோள் காட்டினார் (மத்தேயு 24:5; தானியேல் 11:31, 12:11).

பெர்சியா இராஜாவாகிய கோரேஸ் ஆட்சிபொறுப்பில் அமரும்வரை தானியேல் உயிரோடிருந்தர் (தானியேல் 6:38). கோரேசின் மூன்றாவது வருடத்தில் தானியேல் இறுதி தீர்க்கதரிசனத்தை உரைத்து (தானியேல் 10:1, 4) தம்முடைய சக யூதர்களின்மேல் தொடர்ந்து அவர் கொண்டிருந்த பாசத்தையும், அக்கறையையும் வெளிப்படுத்தினார் (தானியேல் 9:2-20).

இப்பொழுது நாம் வரலாற்றைத் திருப்பிப்பார்த்து, தானியேலின் தீர்க்கதரிசனங்கள் நிறைவடைந்ததைக் காண்கிறோம். முன்னதாகவே நிறைவேறின தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் கண்டு, இனி நிறைவேறக்கூடிய வாக்குத்தத்தங்களை முழு விசுவாசத்தோடு எதிர் நோக்குவதற்கு, தீர்க்கதரிசயாகிய தானியேலின் விசுவாசமும், மனோபலமும் நம்மை உற்சாகப்படுத்த வேண்டும்.

**முடிவுரை**

இந்தச் சிறப்பு மிக்க தேவனுடைய மனுஷரின் விசுவாசமுள்ள எடுத்துக்காட்டுகளை நாம் காணலாம். அவர்கள் இஸ்ரயேலுக்கு மட்டுமல்ல, நமக்கும் தேவனுடைய பேச்சாளர்களாக இருந்தார்கள். இஸ்ரயேல் மனந்திரும்பும்படிக்கு அவர்களிடம் மன்றாடினார்கள். ஆனால் இஸ்ரயேல் மறுத்துவிட்டார்கள். இஸ்ரயேலர்கள் செய்த தவறை நாம் செய்யாதிருப்போமாக.

இஸ்ரயேலின் கதை இன்னும் முடிவடையவில்லை. நம்முடைய கதையும் இன்னும் முடிவடையவில்லை. "என் தாசனாகிய இஸ்ரவேலே, நான் தெரிந்துகொண்ட யாக்கோபே, என் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததியே, நான் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து, உன்னை எடுத்து, அதின் எல்லைகளிலிருந்து அழைத்துவந்து: நீ என் தாசன், நான் உன்னைத் தெரிந்து கொண்டேன், நான் உன்னை வெறுத்துவிடவில்லை என்று சொன்னேன். நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்" (ஏசாயா 41:8-10).

அப்போஸ்தலனாகிய பேதுருவைப்போல, அவர்களின் செய்திகளிலிருந்து நாம் கற்றறிந்து, நம்முடைய வாழ்க்கையில் ஆர்வத்தோடு

தேவனுடைய சித்தத்தை தேட வேண்டும். "இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என் கூடாரத்தைவிட்டுப்போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து, இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது நியாயமென்று எண்ணுகிறேன். மேலும், நான் சென்றுபோனபின்பு இவைகளை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொள்ள ஏதுவுண்டாயிருக்கும்படி பிரயத்தனம்பண்ணுவேன். நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக்கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது, அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக்கேட்டோம். அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" (2 பேதுரு 1:12-19).

ஒரே தேவனுடைய பிள்ளைகளாக நாம் இருப்பதினால், கடந்த காலத்து விசுவாசிகளின் எடுத்துக் காட்டை நாம் மறு ஆய்வு செய்யலாம். "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17). இந்நாளில் நம் மத்தியில் காணப்படும் விசுவாசமுள்ள சகோதரர்களின் எடுத்துக்காட்டுகளிலிருந்து கற்றுக்கொள்வதற்கு நாம் மறந்துவிடக் கூடாது. அவர்களையும் தேவனுடைய பேச்சாளர்களாக மதிக்க வேண்டும்.


நம்மை வலுபடுத்துவதற்காக, தேவன் தீர்க்கதரிசிகளின் வாழ்க்கை முறைமையை பதிவு செய்தார். ஒருவேளை தீர்க்கதரிசகளுக்கு நிகழ்ந்ததுபோல, நமக்கும் சில நேரங்களில், நாம் செல்லும் பாதை கடினமாக தோன்றலாம். அல்லது நம் எதிரி நம் பாதையை விட்டு அகலும்படி வற்புறுத்தலாம். அல்லது நாம் தற்காலிக சுகத்திற்காக நம் உத்தமத்தை இழக்க முற்படலாம் என்று தேவன் அறிந்திருக்கிறார் (எபிரேயர் 12:3).

கடந்த காலத்தில் வாழ்ந்த விசுவாசமுள்ள ஸ்திரீகள் மற்றும் புருஷர்களைப்போல நாமும் மீண்டும் மீண்டும் ஊக்குவிக்கப்படுகிறோம். அவர்களைப்போல நாமும் எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் நாம் தேவனுக்குப் பணியாற்றும்படி அழைக்கப்பட்டோம் என்பதை உணருகிறோம். அவர்களைப்போல, அவர்களின் மாதிரிகளின் வழியாக, தேவனுடைய பிரமாணங்களும், போதனைகளும் எரிகின்ற அக்கினியைப்போல் நம்முடைய எலும்புகளுக்குள் அடைபட்டிருப்பதை நினைப்பூட்டப்படுகிறோம் (எரேமியா 20:9). அவருடைய அன்பு நம்மை முழுமையாக ஆட்கொண்டதினால் இந்த வாழ்க்கையின் சோதனை களை வருங்கால கிறிஸ்துவுக்குள்ளான ஐசுவரியங்களோடு ஒப்பிட முடியாது என்பதை நாம் உணருகிறோம் (ரோமர் 8:18).

வசனங்களில் காணப்படும், "தேவ ஆவியால் அருளப்பட்டது" (inspired by God), என்ற சொற்றொடர் தியோநியுஸ்டாஸ் (theopneustos) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு, "தேவன் சுவாசித்தார்" அல்லது "ஊதினார்" (God breathed) என்று பொருள். இந்த முழு வேதமும் தேவனால் அருளப்பட்டதென்று அப்போஸ்தலனாகிய பவுல் உறுதியளிக்கிறார். நமது நன்மைக்காக, நம்மைச் சத்தியத்திற்குள் வழி நடத்துவதற்கு நம்முடைய சார்பாக கிரியைச் செய்யக்கூடிய வசனங்களின் திகைப்பூட்டும் வல்லமையை இது சிறப்பிக்கிறது (சங்கீதம் 119:105; எபிரெயர் 4:12). தீர்க்கதரிசிகளைப்போல, நாம் அவர்களால் அருளப்பட்ட வார்த்தைகளை நாம் வாசிக்கும் போது தேவன் புரிந்து கொள்ளக்கூடிய ஆவியை நம்முடைய வாழ்க்கையிலும் ஊற்றுவார். வசனங்களில் நாம் கற்றுக்கொள்வதற்கு ஏற்றவாறு நம்முடைய வாழ்க்கையை வாழ்ந்தால் தேவன் நமக்கு மீட்பை பரிசளிப்பதாக வாக்களித்துள்ளார் (ஏசாயா 52:11, 12). நம்முடைய அன்றாட வாழ்க்கையில் ஆவிக்குரிய பிரயோஜனத்தைப் பெறும்படிக்கு உதவி செய்யக்கூடிய தேவனுடைய தனிப்பட்ட துணைக்குத் தொடர்ந்து வரும் நம்முடைய புதிய ஜீவனே ஆதாரமாய் உள்ளது (எபேசியர் 4:15, 16). தேவன்தாமே உங்களை சகல ஐசுவரியத்தோடும் ஆசீர்வதிப்பாராக!

இலேசாக தொடுதல்

# எசேக்கியேல், ஒரு வரலாற்றுப் பாடம்



ouglas Rawson

"முப்பதாம் வருஷம் நாலாம் மாசம் ஐந்தாந்தேதியிலே, நான் கேபார் நதியண்டையிலே சிறைப்பட்டவர்கள் நடுவில் இருக்கும்போது, சம்பவித்தது என்னவென்றால், வானங்கள் திறக்கப்பட, நான் தேவதரிசனங்களைக் கண்டேன்" (எசேக்கியேல் 1:1).

எசேக்கியேல் புத்தகம், பாடங்கள், வரலாறு, தீர்க்கதரிசனம் மற்றும் வளமான அடையாளங்கள் நிறைந்த ஒரு தனிச்சிறப்பு பெற்ற புத்தகமாகக் காணப்படுகிறது. உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு மற்றும் கோகு மாகோகு பற்றிய முடிவு கால தீர்க்கதரிசனங்களினிமித்தமாக இந்தப் புத்தகம் வேத மாணவர்களுக்கும், உலகத்தின் பலருக்கும் பரிட்சயமாய் உள்ளது.

இஸ்ரயேல், பாபிலோனுக்குச் சிறைபிடிக்கப பட்டுப்போன சமயத்தில் எசேக்கியேல் தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்தார். அக்காலத்தில் எசேக்கியேல் மட்டுமல்ல, தானியேல் மற்றும் எரேமியாவும் வாழ்ந்து வந்தார்கள். புறஜாதிகளின் விக்கிரகங்களை வழிபட்ட, வணங்கா கழுத்துள்ள ஜனங்களிடம்கூட, தேவன் தம்முடைய கிருபையையும், இரக்கங்களையும் காண்பிக்கும் படியாக, ஒரே காலத்தில் மூன்று பெரிய தீர்க்கதரிசிகளை இஸ்ரயேலுக்கு அனுப்பினார்.

எப்போதும்போல இந்த உலகத்தில் அநேகர் வேதாகமத்தின் நம்பத்தக்க நிலையைக்குறித்து கேள்வி எழுப்புகிறார்கள். எசேக்கியேல் புத்தகத்தில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களின் நிறை வேற்றங்களும் மற்றும் வரலாற்று பதிவுகளினாலும் மேற்கூறப்பட்ட கருத்துக்கள் மறுக்கப்படுகிறது. கடந்த நாட்களில் ஏதோம் மற்றும் தீருவைப்பற்றிய தீர்க்கதரிசனங்களையும் இன்றைய நாளில் இஸ்ரயேலைப்பற்றிய தீர்க்கதரிசனங்களையும் நாம் பார்க்கலாம். எசேக்கியேல் தெய்வீக தூண்டுதலைப் பெற்றார் என்பதற்கான தெளிவான ஆதாரத்தை இது தருகிறது. மேலும் தொல்பொருள் ஆராய்ச்சி யாளர்கள் எசேக்கியேலின் வரலாற்றை உறுதிபடுத்தியுள்ளார்கள். நடந்த சம்பவங்களையும் அவைகளின் வரிசைகளையும் மெய்ப்பித்திருக்கிறார்கள்.

நம்மைப் பொறுத்தவரையில், நம்முடைய தேவன் வரலாற்றுக்குரிய தேவன் என்பதை இது காட்டுகிறது. வரலாறு சம்பவிப்பதற்கு முன்னதாகவே தேவன் நமக்கு அவைகளை அறிவிக்கிறார். அந்த வரலாறு இன்னும் நிறைவேறவில்லையென்றால் அதை நாம் தீர்க்கதரிசனம் என்று அழைக்கிறோம். தேவன் மனுஷருடைய வருங்காலத்தை நடந்து முடிந்த நிகழ்வாகக் காண்கிறதினால் தேவனுடைய கண்களில் இது வரலாறாய் உள்ளது. இதன் காரணமாக எசேக்கியேல் மற்றும் இந்த முழு வேதாகமத்தில் காணப்படும் தீர்க்கதரிசன வார்த்தைகளின்மேல் நாம் முழு நம்பிக்கை வைக்கலாம்.

### இறுதி இராஜாக்களைச் சுற்றியுள்ள வரலாறு

தானியேல், எசேக்கியேல் மற்றும் எரேமியாவின் வாழ்க்கைகளைக்கொண்டுள்ள காலபகுதியைச் சுற்றியுள்ள வரலாறு என்ன?

யோசியா துவங்கி சிதேக்கியா வரையில் 22 வருடங்களுக்குள் யூதாவில் ஐந்து இராஜாக்கள் ஆட்சி செய்ததாக இந்த வரலாறு கூறுகிறது. அதில் யோசியா ஒரு நல்ல இராஜாவாக ஆட்சி புரிந்தார். மற்றவர்கள் அப்படி இருக்கவில்லை. யோசியாவுக்குப் பின் வந்த நான்கு இராஜாக்கள் யோவாகாஸ், யோயாகீம், யோயாகீன் மற்றும் சிதேக்கியா.

இந்த காலபகுதியில் பாபிலோன் ஒரு மிக வல்லமையுள்ள ஆதிக்கமாக வளர்ச்சியடைந்து, எருசலேமை வென்ற உலகத்தின் முதல் மிகப் பெரிய வல்லரசாக இருந்தது. துவக்கத்தில் எகிப்துக்குப் பாபிலோன் ஒரு அச்சுறுத்தலாய் இருந்தது. தொடர்ந்து இவர்களுக்கு இடையில் யுத்தங்கள் நடந்து வந்தது. அதில் பாபிலோன் வெற்றியடைந்தது. புத்தியில்லாத மற்றும் மதியற்ற தலைமையினால் இஸ்ரயேல் பல பிரச்சனைக்குரிய நேரங்களில் எகிப்தை ஆதரித்து அதின் விளைவாக, பாபிலோனி யர்களால் துன்புறுத்தப்பட்டார்கள்.

இந்த ஐந்து இராஜாக்களைப் பொறுத்தவரையில் தொடர்ந்து நடந்த சம்பவங்களில் நேபுகாத்நேச்சாரின் நான்கு முக்கியமானப் படையெடுப்புகள் காணப்படுகிறது. எகிப்துக்குத் தப்பிச் சென்ற யூதர்களை நேபுகாத்நேச்சார் சிறைப்பிடித்ததை நான்காவது படையெடுப்பாகக் கருதினால், (1) தானியேல் மற்றும் அவருடைய சிநேகிதர்கள் யோயாகீமின் மூன்றாம் வருடத்தில் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். (2) யோயாக்கீன் இராஜாவாக இருந்த மூன்று மாதங்களுக்குப் பின் எசேக்கியேல், இரண்டாவது

படையெடுப்பில் எடுத்துச் செல்லப்பட்டார். (3) சிதேக்கியாவின் ஆட்சியின் முடிவில் அவர் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்பட்டார். யூதா இராஜ்யம் முடிவடைந்தது. அடுத்து, எரேமியா தப்பித்துச் சென்று மற்ற யூதர்களோடு எகிப்துக்குப்போய் அங்கு மரித்தார். (4) அகதிகளாய் இருந்த யூதர்களை நான்காவது முறையாக சிறைப்பிடிப்பதைப்பற்றி எரேமியா 43:8-11, 52:30 வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வரலாறு எசேக்கியேலினால் எவ்வாறாகப் பதிவு செய்யப்பட்டது என்பதைச் சிந்திக்கும்போது ஆச்சரியமாக உள்ளது. ஆம், எசேக்கியேல் நம்முடைய வரலாற்று ஆசிரியர். கண்டிப்பாக பிதாவாகிய தேவனே, உண்மையான வரலாற்று ஆசிரியர். இந்தச் சம்பவங்களைச் சித்திரக் கலையினாலும் (graphic), நாடக உவமைகளின் மூலம் எசேக்கியேலுக்கு காண்பித்தார். தேவன் எசேக்கியேலை ஊமையாக்கினதே இந்தக் குறிப்பின் அடிகோலாய் உள்ளது. ஒரு சம்பவத்தை வெளிப்படுத்துவதற்காவது அல்லது முன் அறிவிப்பதற்காவது தேவன் விரும்பும்போது மட்டுமே எசேக்கியேல் பேசினார் (எசேக்கியேல் 3:26, 27).

இஸ்ரயேல் எகிப்து மற்றும் பாபிலோன்பற்றிய சம்பங்களின் காலங்களைக்குறித்து எசேக்கியேல் 4 முதல் 32 அதிகாரங்கள்வரை பதிவு செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். இவைகளைக்குறித்த ஒரு பதிவை 19-ஆம் அதிகாரத்தில் காணலாம். இஸ்ரயேல் தேசம் மற்றும் அவருடைய இராஜாக்களைக்குறித்த ஒரு சோகக் கதையை இந்த அதிகாரத்தில் பார்க்கலாம்.

**ஒரு புலம்பல்**

"நீ இஸ்ரவேல் பிரபுக்களின்பேரில் ஒரு புலம்பல் பாடி, சொல்லவேண்டியது என்னவென்றால்: உன் தாய் எப்படிப்பட்டவள்? அவள் ஒரு பெண்சிங்கம், அவள் சிங்கங்களுக்குள் ளே படுத்திருந்து, பாலசிங்கங்களின் நடுவிலே தன் குட்டிகளை வளர்த்தாள். தன் குட்டிகளில் ஒன்று வளர்ந்து, பாலசிங்கமாகி, இரைதேடப் பழகி, மனுஷரைப் பட்சித்தது. புறஜாதிகளும் அதின் செய்தியைக்கேட்டார்கள், அது அவர்களுடைய படுகுழியில் அகப்பட்டது; அதைச் சங்கிலிகளினால் கட்டி, எகிப்துதேசத்திற்குக்கொண்டுபோனார்கள்" (எசேக்கியேல் 19:1-4).

எசேக்கியேல் ஒரு புலம்பலைப் பாடுவதாக முதலாம் வசனம் குறிப்பிடுகிறது. அந்தப் புலம்பல் ஒரு சோகக் கதையாகும். இது இஸ்ரயேல் தேசத்திற்கும் அவர்களுடைய இராஜாக்களுக்கும் பாடப்பட்ட இறுதி புலம்பலாகும். இந்தப் புலம்பலில் ஒரு தாய் சிங்கம், ஒரு பெண் சிங்கம், பால சிங்கங்கள் மற்றும் சிங்கக்குட்டிகள் அடங்கியுள்ளது. பால சிங்கம் யூதாவின் இராஜாக்கள். தாய் சிங்கம் இஸ்ரயேல் தேசம். சிங்கக்குட்டிகள் மற்ற அண்டை தேசங்களாகும். தாய் சிங்கத்தினால் வளர்க்கப்பட்ட பால சிங்கங்கள், வருங்காலத்தின் யூதா இராஜாக்கள் அல்லது உரிமையாளர்கள்.

இஸ்ரயேல் தேசம் ஒரு சிங்கத்தால் அடையாளப்படுத்துவதை இயல்பாக நம்மால் சிந்திக்க இயலாது. ஆனால் இந்த விஷயத்தில் இஸ்ரயேல் தேசம் தன்னைச் சுற்றியுள்ள புறஜாதி தேசங்களின் இயல்பை எடுத்துக்கொண்டது. அவள் சுற்றியுள்ளவர்களைப்போல இருக்க விரும்பினாள். அவர்களுடைய பழக்க வழக்கங்களை அவள் தனக்குரியவைகளாக ஏற்றுக்கொண்டாள்.

வளர்க்கப்பட்ட பால சிங்கங்களில் ஒன்றுக்கு ஏதோ நடந்தது. அந்தப் பால சிங்கம் வளர்ந்தபோது அவர்களின் படுகுழியில் அகப்பட்டு எகிப்துக்குக்கொண்டுச் செல்லப்பட்டது. யோசியாவுக்குப் பின் வந்த முதல் இராஜாவாகிய யோவாகாசை இது துல்லியமாக விவரிக்கிறது. இராஜாவாகிய யோவாகாஸ் எந்தவித ஒரு குறிப்பிட்ட காரணமும் இல்லாமல் தன்னுடைய சொந்த விருப்பத்திற்காக மற்ற தேசங்களைச் சூறையாடினான். அவன் மனுஷர்களைப் பிடித்தான். அவன் மூன்று மாதங்களுக்கு மட்டுமே இராஜாவாக இருந்தபோதிலும், தீய பழக்கவழக்கங்களை உடனடியாகப் பயிற்றுவிக்கத் துவங்கினான்.

எகிப்துக்கு எதிராகக் கலகம் செய்து சாவுக்கேதுவான ஒரு தவறை யோவாகாஸ் செய்தான். இந்தக் கலகம் அவனை சங்கிலிகளினால் கட்டி எகிப்துக்குத் திரும்பி இழுத்துச் சென்றது. 2 இராஜாக்கள் 23:24 வசனத்தில் அங்கு அவன் மரித்தான் என்பதற்கான பதிவை காணலாம்.

**யோயாக்கீன்**

அடுத்து, ஐந்தாம் வசனத்தில் யோயாக்கீனைப்பற்றி எசேக்கியேல் கூறுகிறார். "தாய்ச்சிங்கம் காத்திருந்து, தன் நம்பிக்கை அபத்தமாய்ப் போயிற்றென்று கண்டு, அது தன் குட்டிகளில் வேறொன்றை எடுத்து, அதைப் பாலசிங்கமாக வைத்தது" (எசேக்கியேல் 19:5).

இவரை ஜனங்கள் அதிகாரப்பூர்வ இராஜாவாக நோக்குவதைவிட, ஒரு அபகரிப்போனாக

நோக்கினர். உண்மையில் எசேக்கியேல் யோயாக்கீமை இங்குத் தவிர்த்திருக்க வேண்டும்.

யோவாகாஸ் எகிப்திலிருந்து திரும்பி வருவதற்கு தேசம் காத்திருந்ததாக ஐந்தாம் வசனம் கூறுகிறது. யோவாகாஸ் தங்களுடைய இராஜாவாக இருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். ஆனால் அது கூடாது. அவர்கள் தங்களுடைய நம்பிக்கையை இழந்ததினால் யோயாக்கீன் அவர்களின் இராஜாவானான். யோயாக்கீன் வளர்க்கப்பட்ட சிங்கங்களின் ஒன்றான பால சிங்கமானான். இந்த இராஜாவும் அவனுக்கு முன்னிருந்த இரண்டு இராஜாக்களைக் காட்டிலும் எவ்விதத்திலும் குறைவுபடவில்லை. ஒன்பதாம் வசனத்தில் குறிப்பிட்டபடி அவன் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்பட்டான். "அவர்கள் அதைச் சங்கிலிகளினால்கட்டி, ஒரு கூட்டுக்குட்படுத்தி, அதைப் பாபிலோன் ராஜாவினிடத்துக்குக்கொண்டு போனார்கள்; இனி அதின் சத்தம் இஸ்ரவேலின் பர்வதங்களின்மேல் கேட்கப்படாதபடிக்கு அதை அரணான இடங்களில் கொண்டுபோய் அடைத்தார்கள்" (எசேக்கியேல் 19:9).

யூதாவின் கடைசி இராஜாவாக சிங்காசனத்தில் அமர்ந்த சிதேக்கியாவைக் காட்டிலும் யோயோக்கின் சிறப்பாகச் செயல்பட்டார். சிதேக்கியா பிடிபட்டபோது, தன்னுடைய இரண்டு குமாரர்களும் தன்னுடைய கண்களுக்கு முன்பாகக் கொல்லப்பட்டதை கண்டான். அதற்குப் பின் அவன் கண்கள் பிடுங்கப்பட்டு சங்கிலிகளினால் பாபிலோனுக்கு இழுத்துச் செல்லப்பட்டான். அங்குச் சிறையில் அவன் மரித்தான். "யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனுடைய சிறையிருப்பின் முப்பத்தேழாம் வருஷம் பன்னிரண்டாம் மாதம் இருபத்தேழாந்தேதியிலே, ஏவில் மெரொதாக் என்னும் பாபிலோன் ராஜா, தான் ராஜாவான வருஷத்திலே, யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனைச் சிறைச்சாலையிலிருந்து புறப்படப்பண்ணி, அவன் தலையை உயர்த்தி, அவனோடே அன்பாய்ப் பேசி, அவனுடைய சிங்காசனத்தைத் தன்னோடே பாபிலோனிலிருந்து ராஜாக்களின் சிங்காசனங்களுக்கு உயரமாக வைத்து, அவனுடைய சிறைச்சாலை வஸ்திரங்களை மாற்றினான்; அவன் உயிரோடிருந்த சகல நாளும் நித்தம் தனக்கு முன்பாகப் போஜனம்பண்ணும்படி செய்தான்" (2 இராஜாக்கள் 25:27-29).

**சித்திரமான அடையாளங்கள்**

இப்படியாக, இஸ்ரயேலின் கடைசி நான்கு இராஜாக்களில் மூன்று இராஜாக்களைப்பற்றி ஒரு புலம்பலைப் பெற்றுள்ளோம். எசேக்கியேல் புஸ்தகத்தில், முதல் 32 அதிகாரங்களில் சித்திரமான அடையாளங்களோடு நாடக பாணியில் நடிக்கப்பட்ட கதாபாத்திரங்கள் மூலம் யூதாவின் வீழ்ச்சி விவரிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய ஆலோசனைகளையும், இரக்கத்தையும் தேடாமல், தங்களுடைய ஒழுக்கமற்ற சீர்கெட்ட நடத்தையினிமித்தம் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு எதிராக நடப்பதை இஸ்ரயேல் உணர வேண்டுமென்று தேவன் விரும்பினார். தேவனுடைய வார்த்தைகளைக் கருத்தாய்ச் செவி கொடுக்க வேண்டும். அவைகள் புறக்கணிக்கப்படக்கூடாது.

**உகந்த குறிப்பு**

ஆனால் எப்பொழுதும்போல நம் தேவன் அழிவின் தேவனல்ல. அவருடைய செய்திகளில் சாதகமற்ற குறிப்புகளின் மத்தியில் பல சாதகமுள்ள குறிப்புகளையும் கொடுத்திருக்கிறார். எப்போதும் நம்பிக்கை உண்டு. இந்தச் சாதகமானக்குறிப்புகள் எசேக்கியேல் புத்தகம் முழுவதிலும் மட்டுமல்ல, முழு வேதாகமத்திலும் காணலாம். இப்படிப்பட்ட ஒரு குறிப்பை எசேக்கியேல் 34:23-31 வசனங்களில் உள்ளது.

"அவர்களை மேய்க்கும்படி என் தாசனாகிய தாவீது என்னும் ஒரே மேய்ப்பனை நான் அவர்கள்மேல் விசாரிப்பாயிருக்க ஏற்படுத்துவேன்; இவர் அவர்களை மேய்த்து, இவரே அவர்களுக்கு மேய்ப்பனாயிருப்பார். கர்த்தராகிய நான் அவர்களுக்குத் தேவனாக இருப்பேன், என் தாசனாகிய தாவீது அவர்கள் நடுவில் அதிபதியாயிருப்பார்; கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன். நான் அவர்களோடு சமாதானஉடன்படிக்கைசெய்து, துஷ்ட மிருகங்களைத் தேசத்தில் இராதபடிக்கு ஒழியப்பண்ணுவேன்; அவர்கள் சுகமாய் வனாந்தரத்தில் தாபரித்து, காடுகளில் நித்திரைபண்ணுவார்கள்" (எசேக்கியேல் 34:23-25).

அது எப்படிப்பட்ட நாளாயிருக்கும்! இவர் தாவீது இராஜாவின் வழியாக வந்த நம்முடைய ஆண்டவர் என்பதை அறிந்துள்ளோம். அவர் நல்ல மேய்ப்பனாகவும் அதே நேரத்தில் பரலோகத்தின் பிதா பெரிய மேய்ப்பராய் இருக்கிறார். இனி ஒருபோதும் இஸ்ரயேல் அல்லது இந்த உலகத்தை இப்படிப்பட்ட மோசமான இராஜாக்கள் ஆட்சி செய்ய மாட்டார்கள். ஏனெனில் இயேசு கிறிஸ்து எல்லாவற்றையும் மேற்கொள்வார். அவர் ஒரு சமாதானத்தின் உடன்படிக்கையையும், ஒரு புதிய உடன்படிக்கையையும் ஸ்தாபித்து இந்தப்

பூமியின்மேல் ஜீவனையும், நீதியையும் சமாதானத்தையும், அன்பையும் கொண்டுவருவார்.

அருகில் உள்ளவைகளில் மட்டுமல்ல, தொலைவில் உள்ளவைகளையும் எசேக்கியேல் காணும்படி தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றிருந்தார். இஸ்ரயேலைப்பற்றி பல காரியங்களை அவர் கண்டார். அவர் வரையறுக்கப்பட்ட தீமையானவைகளையும் இனி வரக்கூடிய நன்மைகளையும் கண்டார். இஸ்ரயேல் இராஜாக்களைக்குறித்த வியக்கத்தக்க விவரங்கள் மட்டுமல்ல, பாஸ்டர் ரஸல் குறித்த காரியம், உபத்திரவ காலம், இஸ்ரயேலின் திரும்பக்கொடுக்கும் காலம் மற்றும் மகிமையான இராஜ்யத்தைக்குறித்த வியக்கத்தக்கக் காரியங்களையும் கண்டார். அவருடைய புத்தகம் உண்மையில் பழைய ஏற்பாட்டின் வெளிப்படுத்தின விசேஷமாகும் (எசேக்கியேல் 9, 37-48 அதிகாரங்கள்).

சிலர் கடந்த காலத்தின் வரலாற்றின் அறிவை நீக்கிவிடலாம். ஆனால் கொதிக்கும் தண்ணீர், ஆகாயத்தில் பறக்கும் பட்டயங்கள் போன்ற நாடக வடிவமானக் காட்சிகளை நமக்கு முன் வைத்திருப்பதை நாம் சிந்திக்கும்போது, எசேக்கியேலின் வரலாற்றுப் பாடங்கள் நமக்குச் சலிப்பாக இருப்பதில்லை (எசேக்கியேல் 24 மற்றும் எசேக்கியேல் 5-ஆம் அதிகாரங்கள்).


**நமக்கான பாடங்கள்**

இந்த உலகத்தின் காரியங்களை மிக இலேசாக தொட வேண்டுமென்ற உண்மையானப் பாடத்தை இதில் காணலாம். இந்த உலகம் மற்றும் புறஜாதியின் மதங்களின் ஆவி – சமயம் சார்ந்த உலகத்தோடு இஸ்ரயேலர்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டதுபோல நாம் நம்மைக் கெடுத்துக்கொள்ள அனுமதிக்க முடியாது.

தானியேல் எரேமியா மற்றும் எசேக்கியேலைப்போன்ற தீர்க்கதரிசிகளை அனுப்பி, இஸ்ரயேலர்களிடம் தேவன் மிகுந்த பொறுமையாகவும் அக்கறை உள்ளவராகவும் இருந்தார். நம்மேல் இன்னும் அதிகமான அக்கறைக்கொண்டவராய் இருக்கிறார். நாம் வெற்றிபெற வேண்டுமென்று விரும்புகிறார்.

நினிவேயின் அழிவு

# நாகூம்



"அவர் தமது கையை வடதேசத்துக்கு விரோதமாய் நீட்டி, அசீரியாவை அழித்து, நினிவேயைப் பாழும் வனாந்தரத்துக்கொத்த வறட்சியுமான ஸ்தலமாக்குவார்" (செப்பனியா 2:13).

பன்னிரண்டு சிறிய தீர்க்கதரிசிகளில் நாகூம் ஏழாவது தீர்க்கதரிசி ஆவார். இவர்களின் வரிசையில் இவர் பெறக்கூடிய நிலை, அந்த பன்னிரண்டு சிறிய தீர்க்கதரிசிகளையும் இரண்டு அடுக்குகளாகப் (பரிசுத்த ஸ்தலத்திலுள்ள இரண்டு அடுக்குகளாக காணப்படும் சமுகத்து அப்பங்களைப்போல) பிரித்து காணும்போது, ஒவ்வொரு வரிசையிலும் கடைசியாக காணப்படக் கூடியவர்கள் மீகா மற்றும் மல்கியா. 'M' என்று தொடங்கக்கூடிய இந்த இரண்டு பெயர்கள் இருப்பினும், அதில் மீகாவைத் தொடர்ந்துவரும் நாகூம் என்ற ஆங்கில எழுத்துகளின் வரிசையில் (MN) அடுத்தடுத்து வருவதினால் மீகாவுக்குப் பின் நாகூம் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளலாம்.

### பின்னணி

நாகூம், கலிலேயாவிலுள்ள கிராமமாகிய "எல்கோஸ் அல்லது எல்கோசியை சேர்ந்தவராக இருக்கலாம் என்பதால் அவரை "எல்கோஷைட்" என்று அழைத்தார்கள் என்று பரிந்துரைக்கப்படுகிறது. இந்த இடம் யோராமுக்கு பந்தய கட்டிடங்களின் தடையங்களைக்கொண்டுள்ள யூதர்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க இடமாகச் சுட்டிக்காட்டப்பட்டது" (Jamieson Fausset, and BrownCommentary, page821). கலிலேயாவிலுள்ள மற்றொரு இடமாகிய கப்பர்நகூம் என்பதற்கு நாகூமின் கிராமம் என்பது பொருளாகும், இதன் பெயர் தீர்க்கதரிசியின் பெயரிலிருந்து பெறப்பட்டதுபோல் உள்ளது (McClintock and Strong, Volume Six, page827). இந்த இரண்டு நகரமும் ஒரே பகுதியில் இருந்தன என்பதற்கு முரண்பாடற்ற தீர்மானமாகும்.

இந்தக் கருத்து முன்மதிக்கப்படுகிறது. நாகூம், அல்கோஷ் என்னும் அசீரியாவிலுள்ள கிராமத்தில் பிறந்திருக்க வேண்டும் அல்லது அங்கு கைதியாக அழைத்துச் செல்லப்பட்டிருக்க வேண்டும் என்பது இதன் மாற்று கருத்தாகும். "அசூர் என்னும் நகரத்தில் ஒபதியா, யோனா மற்றும் நாகூமின் தேவாலயத்தை முகமதியர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் குறிப்பாக யூதர்கள் பெருமதிப்புக் கொடுத்து வந்தார்கள். இதன் பச்சைநிற துணியால் மூடப்பட்ட ஒரு சாதாரண அரைச்சாந்து பெட்டியாகும். மற்றும் இது ஒரு பெரிய அறையில் மேற்பகுதியிலுள்ள ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்தது. இந்த இடத்தைப் பற்றியறிய உதவும் பண்டைய சின்னமாக எந்தவிதமான கல்வெட்டுகளோ துண்டுகளோ காணப்படவில்லை. இந்த மரபு எங்குத் துவங்கியது என்பதையும், அல்கோஷ் கிராமத்தோடு எத்தனை காலமாக இணைந்திருக்கிறது என்பதையும் அறிந்துகொள்ள முடியவில்லை."

ஒருவேளை, நாகூம் யூதாவின் பிரதேசத்திற்குத் தப்பியோடிய இஸ்ரயேலின் பத்து கோத்திர இராஜ்யத்தின் மீதியுள்ளவர்களைச் சேர்ந்தவராக இருக்கலாம். அதுபோல இவர் எருசலேமில் குடிபெயர்ந்தார். "அங்கிருந்து எசேக்கியாவின் ஆட்சி காலத்தில் சனகெரிப் அந்த நகரத்தை முற்றிக்கை இட்டதையும், அசீரிய புறவலன்களின் அழிவையும் கண்டார்" (McClintock and Strong, Volume 6, page 829). ஒருவேளை நாகூம், இதேபோன்ற காட்சிகளைக் கண்ட தீர்க்கதரிசிகளாகிய ஏசாயா மற்றும் மீகாவின் காலத்தில் வாழ்ந்த இளைய தீர்க்கதரிசியாக இருக்கலாம்.

### தீர்க்கதரிசியின் எழுத்தாணி

நாகூம் புத்தகத்தை மொழிபெயர்த்ததினிமித்தம் அந்த மொழியில் பயன்படுத்தப்பட்ட நேர்த்தியான மற்றும் உணர்ச்சியூட்டக்கூடிய மொழி காணாமல் போய்விட்டது. உண்மையில் இந்த ஆசிரியர் எபிரெய மொழியைக் கற்றறியவில்லை. எபிரெய பள்ளியில் பயின்றவர்களிடம் கீழே காணப்படும் குறிப்புகள், நாகூமின் எழுத்தாணி அதிகமாகப் புரிந்துகொள்ள உதவுகிறது.

"ஒரு கவிஞனான நாகூம் எபிரெய இலக்கியத்தில் முதல் அணிவரிசையில், உயர்வான இடத்தைப் பெற்றுள்ளார்... அவருடைய எழுத்தாணி ஆற்றலுடையதும் கருத்து வளமிக்கதாக இருந்தாலும் அவை தெளிவாகவும், எதையும் உள்ளடக்காததுமாகவும் இருக்கிறது. மேலும் அவருடைய சொல்நடை முழங்கி ஒலிக்கிற ஓசை எழுப்பும் சத்தம் உடையதாக உள்ளது. அவருடைய வார்த்தைகள் உணர் வாற்றலை மறு எதிரொலிக்கக் கூடியவைகள் (நாகூம் 2:4, 3:3 வசனங்களை ஒப்பிட்டுக் காண்க)." பல கட்டங்களாகக் கூறப்படும் யோசனைகளை மிகச் சுருக்கமான வாக்கியத்திற்குள் சுட்டிக்காட்டுவதன் வல்லமையே அவருடைய எழுத்தாணியின் ஆற்றலாகும் என்று இக்ஹார்ன் (Eichhorn) கருதுகிறார். நினிவே

சிறைபிடித்தல், நோ ஆமோனின் அழிவு மற்றும் தேவனைப்பற்றி விவரிக்கக்கூடிய அவருடைய எழுத்துக்களில் இதைக் காணலாம். 'நெகிழ்வான ஒலி நடையின் வழியாகக் கருத்துக்களை ஒத்துக்கொள்ளும்விதத்தில் முன்வைக்கக்கூடிய அவருடைய ஆற்றல் மற்றும் தடயம் வழியாக வடிவமைப்பதற்கு அவர் கொடுக்கும் கூர்மதி வாய்ந்த விவரங்களை நேர்த்தியாகக் கொடுப்பதைக் காணும், சுவை உணர்வு மற்றும் மெய் உணர்வோடு இருக்கும் எந்த வாசகரையும், கவிதையின் இப்படிப்பட்ட கட்டமைப்பு நிச்சயமாக உள்ளத்தைத் தொடுகிறது' " (McClintock and Strong,Volume 6, page830).

**நினிவேயின் பாரம்**

யூதாவின் பாவங்களினிமித்தம் மீகா அவர்களைக் கடிந்துகொண்டு மனந்திரும்ப வேண்டுமென்று அறிவுறுத்தி, அவர்களின் விடுதலையை முன் அறிவித்திருந்தாலும் அதேசமயம் நாகூம் தம்முடைய தீர்க்கதரிசனத்தை அசீரியாவுக்கு எதிராக உரைத்தார். "நினிவேயின் பாரம்" என்ற தலைப்பில் அவர் கண்ட தரிசனம் துவங்குகிறது. நினிவே அசீரியா பட்டணத்தின் தலைநகரமாக இருந்தது.

அசீரியாவின் இராஜா சல்மனாசார் V ஆட்சியின்போது, மூன்று வருடங்கள் முற்றிக்கைப் போட்ட பின் கிமு 723 வருடத்தில், சமாரியாவில் ஆட்சி புரிந்த இஸ்ரயேல் தேசத்தின் வட பகுதியை அசீரிய சாம்ராஜ்யம் அழித்துவிட்டது. இந்தச் சரித்திரம், 2 இராஜாக்கள் 17:3-6, 18:9-10 வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பதிவுகள் அசீரியர்களின் முன்னோர்கள் வடிவமைத்த பட்டை தகடுகளில் காணப்படுபவைகளுக்கு ஒப்பாய் உள்ளது. சல்மனாசாரின் ஆட்சியின்போது, ஒரு இராஜ்யத்திற்கு எதிராக முற்றிக்கைப் போடப்பட்டதாக பதிவுகள் காணப்படுகிறது. அந்த இராஜ்யத்தின் பெயர் அங்கு இல்லாவிட்டாலும் அது சமாரியாவாக இருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. (Text from Cuneiform Sources, Volume 5, Grayson, 1975).

அடுத்ததாக சார்கானால் (Sargon) அசீரியாவை 17 வருடங்கள் ஆட்சி புரிந்தான். பெலிஸ்தியர்களை அவன் வெற்றியடைந்ததைக் குறித்தும், எகிப்தியர்களை அவன் வெற்றி பெறுவான் என்றும் ஏசாயா 20-ஆம் அதிகாரம் முன் அறிவித்தது. ஒருவேளை அந்த சமயந்தான் அசீரியர்கள், "நதிகள் மத்தியிலிருந்த நோ அம்மோனைப்பார்க்கிலும் நீ சிரேஷ்டமோ?" (நாகூம் 3:8) என்ற இந்தச் சூழ்நிலையில் அசீரியர்கள் அவர்களை எடுத்துச் சென்றிருக்க வேண்டும் (நாகூம் 3:8). நைல் நதியின் கரையிலுள்ள நோ அம்மோன், தெபெஸ்(Thebes) என்று அதிகமாக அறியப்பட்டுள்ளது.

அடுத்ததாக, அசீரியாவின் சிங்காசனத்தில் சனகெரிப் வீற்றிருந்து 24 வருடங்கள் ஆட்சி புரிந்தான். கிமு 701-இல், எசேக்கியா இராஜாவின் 14-ஆம் வருட ஆட்சியில், சனகெரிப்பின் 4-ஆம் வருடத்தில் இந்த அச்சம் தரும் வெற்றியாளர் எருசலேமை முற்றிக்கைப் போட்டார் (2 இராஜாக்கள் 18:13-19; 2 நாளாகமம் 32-ஆம் அதிகாரம்; ஏசாயா 36, 37-ஆம் அதிகாரங்கள்). நாகூம் மற்றும் மீகாவின் தீர்க்கதரிசனங்கள் இந்தப் படையெடுப்பின் தீமையான பின்விளைவுகளை அறிவித்தது. பெருமையுள்ள இந்த அடுக்கடுக்கான தாக்குதல்கள் தோல்வியடையும் என்றும், அதைத் தொடர்ந்து அசீரியா தாமே வீணாய்ப் போய்விடும் என்றும் தேவன் நாகூம் வழியாக முன் அறிவித்தார்.

**நாகூம் தீர்க்கதரிசியின் மூன்று பகுதிகள்:**

நாகூமின் தீர்க்கதரிசனம் வழக்கமாக மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. இவைகள் மூன்று அதிகாரங்களால் அடையாளப்படுத்தப்படுகிறது. (1) முன்னுரை மற்றும் உட்பொருள், (2) அசீரியாவின்மேல் வரும் பேராபத்துக்களை அறிவிப்பது மற்றும் (3) நியாயத்தீர்ப்புக்கான காரணங்கள்.

(1) இங்கு தேவன் யூதாவின்மேல் கொண்டுள்ள அக்கறையையும், வைராக்கியத்தையும் உறுதிபடுத்துகிறார். "அவர் தம்முடைய கோபத்தில் பொறுமையாக இருந்தாலும்," "கர்த்தர் மிகுந்த வல்லமையுள்ளவர், கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர்" (நாகூம் 1:2-3). அவருடைய சிறப்பு வாய்ந்த மாட்சிமைமிக்க வல்லமையும் 3-8 வசனங்களில் கவிதை நடையில் தொகுத்து எழுதப்பட்டுள்ளது. தேவன் சுழற்காற்றையும், புயலையும் கட்டுப்படுத்துபவர். மேகங்கள் அவர் காலடியில் இருக்கும் தூசிபோன்றது. அவர் சமுத்திரத்தையும், நதிகளையும் பூமியையும் வறட்சியாக்குகிறார். பர்வதங்களை அசைக்கிறார். அவருடைய வல்லமையை எதுவும் எதிர்த்து நிற்க முடியாது.

தேவன் பாதுகாக்கக் கூடியவர்களை உண்மையில் ஒன்றும் சேதப்படுத்த முடியாது. தேவனை எதிர் நோக்கிய யூதாவின் ஜனங்களுக்கு இதுவே ஆறதலாய் இருந்தது. "கர்த்தர் நல்லவர், இக்கட்டுநாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்" (நாகூம் 1:7).

ஆனால், "நீங்கள் கர்த்தருக்கு விரோதமாகச் செய்ய நினைக்கிறதென்ன? அவர்

சர்வசங்காரம்பண்ணுவார்; இடுக்கம் மறுபடியும் உண்டாகாது. அவர்கள் சன்னபின்னலாயிருக்கிற முட்செடிகளுக்கு ஒப்பாயிருக்கையிலும், தங்கள் மதுபானத்தினால் வெறிகொண்டிருக்கையிலும், அவர்கள் முழுதும் காய்ந்துபோன செத்தையைப்போல எரிந்துபோவார்கள்" என்று தேவன் அசீரியர்களைக்குறித்துக் கூறினார் (நாகூம் 1:9-10).

உண்மையில் அடுத்த வசனத்தில் குறிப்பிடப்படும் சனகெரிப்பை, அருகாமையிலுள்ள பல தேசங்கள் பயத்தினாலும் கடுமையான வேதனையினாலும் அவமதித்து வெறுக்கக் கற்றுக் கொண்டனர். "கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாத நினைவுகொண்டிருக்கிற துராலோசனைக்காரன் ஒருவன் உன்னிடத்திலிருந்து புறப்பட்டான்... அவர்கள் சம்பூரண மடைந்து அநேகராயிருந்தாலும் அறுப்புண்டு போவார்கள்; அவன் ஒழிந்துபோவான்; உன்னை நான் சிறுமைப்படுத்தினேன், இனி உன்னைச் சிறுமைப்படுத்தாதிருப்பேன். இப்போதும் நான் உன்மேல் இருக்கிற அவன் நுகத்தை முறித்து, உன் கட்டுகளை அறுப்பேன். உன்னைக்குறித்துக் கர்த்தர் கட்டளைகொடுத்திருக்கிறார்; இனி உன் பேருக்கு வித்துவிதைக்கப்படுவதில்லை; உன் தேவர்களின் கோவிலில் இருக்கிற வெட்டப்பட்ட விக்கிரகத்தையும், வார்க்கப்பட்ட விக்கிரகத்தையும் நான் நிர்மூலம்பண்ணுவேன்; நீ கனவீனனானபடியால் அதை உனக்குப் பிரேதக்குழியாக்குவேன்" (நாகூம் 1:11-14).

பல வருடங்களுக்குப் பின் சனகெரிப் தன்னுடைய தேவனுடைய வீட்டிற்கு வந்தபோது கொல்லப்பட்டான். "அவன் தன் தேவனாகிய நிஸ்ரோகின் கோவிலிலே பணிந்துகொள்ளுகிற போது, அவன் குமாரராகிய அத்ரமலேக்கும் சரேத்சேரும் அவனைப் பட்டயத்தினால் வெட்டிப்போட்டு, ஆரராத் தேசத்திற்குத் தப்பி ஓடிப்போனார்கள்" (2 இராஜாக்கள் 19:37).

இந்நாள்வரையில் சனகெரிப்பின் முற்றிக்கையிலிருந்து, தேவன் யூதாவை விடுவித்தக் காரியம் தேவனுடைய வல்லமைக்கும், மனுஷரை பொறுத்தவரைக்கும் அவருடைய வழிநடத்துதலுக்கும் குறிப்பிடத்தக்க சாட்சியாக உள்ளது. ஒரே இரவில் சனகெரிப்பின் 185,000 மனுஷர், சங்கார தூதனால் சங்கரிக்கப்பட்டார்கள். அவனுடைய சாம்ராஜ்யத்தின் சர்வ வல்லமை நீடித்திருக்கவில்லை. அந்த சாம்ராஜ்யம் மத்திய கிழக்கிலுள்ள மற்ற அனைத்து இராஜ்யங்களையும் தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த போதிலும் மிகச்சிறிய தேசமாகிய யூதாவை அதனால் என்றுமே கைப்பற்ற முடியவில்லை. அதுவுமின்றி அதற்குப் பின் வந்த இராஜ்யங்களாகிய பாபிலோன், பெர்சியா, கிரீஸ் அல்லது ரோம சாம்ராஜ்யம் கைப்பற்ற முடியவில்லை. ஆனால் தேவனுடைய அனுமதியினால் இந்த சாம்ராஜ்யங்கள் அவர்களை ஆட்சி செய்தனர். "உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுத்து... அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும்" (தானியேல் 4:17, 37) என்ற இந்தப் பாடத்தைப் பாபிலோன் சாம்ராஜ்யத்தின் முதல் சக்கரவர்த்தி கற்றுக்கொண்டான்.

### அசீரியாவின் மேல் வந்த கடும் துயரம்

அடுத்ததாக, இந்தத் தீர்க்கதரிசி நூறு வருடங்களுக்குப் பின் நினிவே பட்டணம் நிலைகுலைவதைக்குறித்து முன் அறிவித்தார். இதே பட்டணம், யோனாவின் விருப்பமற்ற ஊழியத்தினிமித்தம் ஒருமுறை காக்கப்பட்டது. அப்பொழுது அசீரியா இராஜாவும் அவருடைய பிரஜைகளும் தேவனுடைய இரக்கத்திற்காக அவரிடம் மன்றாடி அதைப் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் அந்தத் தலைமுறை கடந்துச் சென்றபோது தீமைகள் அதிகரித்து, "அசீரியர்கள் நிச்சயமாக அழிக்கப்பட வேண்டும்" என்ற முடிவைப் பெற்றது.

கிமு 612-ஆம் வருடத்தில் நினிவே, மேதியர்கள் மற்றும் பாபிலோனியர்களால் வீழ்த்தப்பட்டதென்று வரலாற்றிலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம். மேதியர்கள் சிவப்பு நிறத்தை அதிகமாக விரும்பினார்கள் என்று சைனோபோன் (Xenophon) கூறுகிறார். மேலும் இந்த நிறத்தைக்குறித்து மூன்றாம் வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. "அவனுடைய பராக்கிரமசாலிகளின் கேடகம் இரத்தமயமாகும்; அவனுடைய யுத்தவீரர் இரத்தாம்பரந்தரித்துக் கொண்டிருக்கிறார்கள்; அவன் தன்னை ஆயத்தம்பண்ணும் நாளிலே இரதங்கள் ஜுவாலிக்கிற கட்கங்களை உடையதாயிருக்கும்; ஈட்டிகள் குலுங்கும்" (நாகூம் 2:3, NASB, and Jamieson, Fausset, Brown Commentary, page 824).

இதன் விளைவு, பட்டணம் முழுமையாக நொறுக்கப்பட்டது. இரதங்கள் வீதிகள் தோறும் மதிகெட்ட விதத்தில் வேகமாய் ஓடி, பயத்தினால் ஒன்றோடொன்று மோதியது. ஒழுங்காக நடக்கக்கூடியவர்களின் நடை இடறியது. தங்களுடைய பாதுகாப்பை ஒழுங்கு செய்யப்படுவதற்கு அவர்கள் துரிதப்பட்டபோது அவர்களால் அதைச் செய்ய இயலவில்லை.

டைகிரிஸ் (Tigris) நதியின் வாசல்கள் வழிவிட்டது. அரமனை கைப்பற்றப்பட்டது. "ஹஸ்ஸாப்" (Huzzab) ("அருகில் நின்றவர்," ஒருவேளை இராஜாவுக்கு அருகில் நின்ற இராணியைக் குறிப்பிட வேண்டும்). சிறைப்பிடிக்கப்பட்டதினால் அவளுடைய தாதிகள் மாரடித்துக்கொண்டு ஒப்பாரி வைத்தார்கள். நினிவே பட்டணம் ஒரு அமைதியான குளத்தைப்போல் இருந்தாலும், இப்பொழுது அனைவரும் அலங்கோலமாக விரைந்தனர். "நில், நில்" என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டாலும், ஒருவரும் திரும்பிப்பார்க்காமல் பறந்துச் சென்றனர். பொன், வெள்ளி மற்றும் சகல பொக்கிஷங்களும் சூறையாடப்பட்டது. நினிவே பட்டணம் வெறுமையாகி விரயமாகக் கிடந்தது. அவள் இருதயம் உருகிபோயிற்று. அவள் முழங்கால் தளர்ந்துபோயிற்று. அவளுடைய முகம் வேதனையினால் இருளடைந்தது. சிங்கங்களின் வாசஸ்தலம் இப்பொழுது எங்கே? (நாகூம் 2:11). சிங்கம் தன் குட்டிகளுக்குத் தேவையானதைப் பீறி, தன் பெண் சிங்கங்களுக்கு வேண்டியதைத் தொண்டையைப் பிடித்துக்கொன்று இரைகளினால் தன் கெபிகளையும், பீறிப்போட்டவைகளினால் தன் தாபரங்களையும் நிரப்பினவைகள் எங்கே? நித்தியமாக அறுப்புண்டு போனாள்.

### தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கான காரணங்கள்

(3) "இரத்தப்பழிகளின் நகரத்திற்கு ஐயோ! அது வஞ்சகத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது; கொள்ளை ஓயாமல் நடக்கிறது. தன் வேசித்தனங்களினால் ஜாதிகளையும், தன் சூனியங்களினால் வம்சங்களையும் விற்கிற மகா சூனியக்காரியும் ரூபவதியுமாயிருக்கிற வேசியினுடைய திரளான வேசித்தனங்களினிமித்தம், இதோ, நான் உனக்கு விரோதமாக வந்து உன் வஸ்திரத்து ஓரங்களை உன் முகமட்டும் தூக்கியெடுத்து, ஜாதிகளுக்கு உன் நிர்வாணத்தையும், ராஜ்யங்களுக்கு உன் மானத்தையும் தெரியப்பண்ணி, அப்பொழுது உன்னைக் காண்கிறவனெல்லாம் நினிவே பாழாய்ப்போயிற்று, அதற்காகப் புலம்புகிறவர் யார்? ஆறுதல் சொல்கிறவர்களை உனக்கு எங்கே தேடுவேனென்று சொல்லி, உன்னைவிட்டோடிப் போவான். (நாகூம் 3:1, 4, 5, 7).

8-ஆம் வசனத்தில் நினிவே, அசீரியர்களால் வேட்டையாடப்பட்ட எகிப்தின் நோ அம்மோனோடு தெபெஸ் (Thebes) ஒப்பிடப்பட்டுள்ளது. தெபெஸ் மிக வல்லமையாக இருந்தபோதிலும் கீழ்ப்படுத்தப் பட்டதுபோல, நினிவேயும் கீழ்ப்படுத்தப்படும். அவளுடைய சகலவிதமான அரண்களும் மெதுவாக குலுக்கப்படும்போதே விழுந்துபோகும் (நாகூம் 3:12). "உன் வர்த்தகரை வானத்து நட்சத்திரங்களிலும் அதிகமாக்கினாய்; இந்தப் பச்சைக்கிளிகள் பரவிப்பறந்துபோகும். உன் மகுடவர்த்தனர் வெட்டுக்கிளிகளுக்கும், உன் தளகர்த்தர் பெருங்கிளிகளுக்கும் சமானமாயிருக்கிறார்கள்; அவைகள் குளிர்ச்சியான நாளில் வேலிகளில் பாளையமிறங்கி, சூரியன் உதித்தமாத்திரத்தில் பறந்துபோம்; பின்பு அவைகள் இருக்கும் இடம் இன்னதென்று தெரியாது. அசீரியா ராஜாவே, உன் மேய்ப்பர்கள் உறங்குவார்கள்; உன் பிரபலஸ்தர் படுத்திருப்பார்கள்; உன் ஜனங்கள் பர்வதங்களின்மேல் சிதறியிருக்கிறார்கள், அவைகளைக் கூட்டிச் சேர்ப்பவன் இல்லை" (நாகூம் 3:16-18).

"உன் நொறுங்குதலுக்குப் பரிகாரம் இல்லை; உன் காயம் கொடியது; உன் செய்தியைக் கேட்பவர் யாவரும் உன்பேரில் கைகொட்டுவார்கள்; உன் பொல்லாப்பு எந்நேரமும் யார்பேரிலேதான் பாயாமற்போயிற்று?" (நாகூம் 3:19).

### இக்காலத்திற்கு இது பொருந்துமா?

நாகூமில் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகள் நிச்சயமாக இந்நாளுக்கும் பொருந்தும். வரக்கூடிய கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கு எதிராக இருக்கக்கூடிய சகலவிதமான ஊழலான அதிகாரங்களையும் தேவன் விழத்தள்ளுவார். இந்தச் செயல்முறை ஏற்கனவே துவங்கிவிட்டது. கிறிஸ்தவ மண்டலத்தின் இராஜாக்கள் முன்னதாவே கடந்துச் சென்றுவிட்டனர். அர்மகெதோன் நெருங்கி வருகிறது.

நாகூம் தீர்க்கதரிசனம், வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்படும் அந்த மகா வேசியைக்குறித்த ஒரு குறிப்பான பொருத்தத்தைக் காண்பிக்கிறது. இந்தப் போப்பமைப்பு அவளுடைய கூட்டாளிகளோடு ஆயிரவருடமளவும் ஐரோப்பாவை பலத்த கரங்களோடு ஆட்சி செய்து வந்தாள். "பூமியின் இராஜாக்களின்மேல்" (வெளிப்படுத்தல் 17:18). அவளுடைய சீர்கெட்ட ஆட்சியினிமித்தம் அந்த வேசி முழுமையாக அழிக்கப்படுவாள் (வெளிப்படுத்தல் 17:16). அப்பொழுது பலர் அவளுடைய மறைவை எண்ணி கைக்கொட்டுவார்கள் (வெளிப்படுத்தல் 19:1-2). [சங்கீதம் 83:8; மீகா 5:5 வசனங்கள், இஸ்ரயேலுக்கு எதிராக அசீரியாவின் இறுதி படையெடுப்பைச் சித்தரிப்பதாகப் பதிப்பாசிரியர்களில் ஒருவர் கூறுகிறார். இது வடதிசையிலிருந்து கோகுவினால் வழிநடத்தப்பட்ட கூட்டமைப்பின் அங்கத்தினர் ஒருவருக்குச் சரியாகப் பொருந்துகிறது - இந்த

விஷயத்தில் இது போப் அமைப்பைக் குறிப்பிடவில்லை. சங்கீதம் 83 மற்றும் மீகா 5-ஆம் அதிகாரங்களில் இந்தத் தீர்க்கதரிசனம், மாம்ச இஸ்ரயேலர்களுக்கு உண்மையில் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. நாகூமில் சொல்லப்பட்டக் காரியம் சங்கீதம் 83 மற்றும் மீகா 5-ஆம் அதிகாரங்களிலுள்ள பொருள் வேறுபட்டதாக காணப்படுகிறது.]

தன்னுடைய பாவம் மற்றும் தன்னுடைய நியாயத்தீர்ப்பில் பாபிலோனும், போப் அமைப்பின் ஒரு சித்திரமாக இருந்தது. அதுபோல அதற்கு முன்னிருந்த அசீரிய சாம்ராஜ்யமும் போப் அமைப்பின் ஒரு சித்திரமாகக் காணப்பட்டது. இந்த இரண்டு தலைநகரங்களும் செழிப்புமிக்க நதிகளின் கரைகளில் இருந்தது. நினிவே டைகிரிஸ் நதியின் கரையிலும், பாபிலோன் யூப்ரட்டிஸ் நதியின் கரையிலும் இருந்தது. யூப்ரட்டிஸ் நதியைத் திசைத்திருப்பி, மேதியர்களும், பெர்சியர்களும் அந்த நதியின் வாயில் வழியாக நுழைந்ததினிமித்தம் பாபிலோன் வீழ்ச்சியடைந்தது. அதுபோல நினிவேயின் வீழ்ச்சியும் அதன் அருகில் இருந்த நதியோடு சம்பந்தப்பட்டிருந்தது. அதின் சுவர்களில் உண்டான கடைசி பிளவு, இயல்புக்கு மாறான உயரமான ஒரு வெள்ளப் பெருக்கு டைகிரீஸ் நதியிலிருந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. (Chronicles of the Chaldean Kings, Donald Wiseman, page 17, citing Xenophon, Anabasis, 3:4:77-12).

**சுவிசேஷகருடைய கால்கள் நற்செய்தியைக் கொண்டு வருகிறது**

சம காலத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசகள் சில நேரங்களில் ஒரேவிதமான வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள். எடுத்துக்காட்டாக, ஏசாயா 2:2-4-இல் காணப்படும் வசனங்கள், மீகா 4:1-3-லும் காணப்படுகிறது. குறிப்பாக அதிகமாக அறிவிக்கப்படாவிட்டாலும் நாகூம் 1:15-ஆம் வசனம் ஏசாயா 52:7-ஆம் வசனத்தோடு இசைவாக உள்ளது.

"இதோ, சமாதானத்தைக் கூறுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளின்மேல் வருகிறது; யூதாவே, உன் பண்டிகைகளை ஆசரி; உன் பொருத்தனைகளைச் செலுத்து; துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்துவருவதில்லை, அவன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான்" (நாகூம் 1:15).

"சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன" (ஏசாயா 52:7).

இந்த ஒப்புமைகளில் நாம் மூன்று நலன்களை காணலாம்,


(1) இந்த வசனப்பகுதியின் பொருளை விவரிக்க உதவுகிறது. "சுவிசேஷத்தை" என்று நாகூமில் காணப்படும் வார்த்தைகள், தேவன் அசீரியாவைத் தண்டிப்பதைக் குறிப்பிடுகிறது. இதுவே இஸ்ரயேல் ஜனங்களுக்கு நற்செய்தியாய் இருந்தது. அதுபோல ஏசாயா 52:7-ஆம் வசனத்தில், இஸ்ரயேலின் மற்றொரு எதிரியான பாபிலோனிடமிருந்து இஸ்ரயேல் விடுவிக்கப்படுவதை இந்த வசனப்பகுதி கூறுகிறது. ஆகவே இந்த இரண்டு வசனப்பகுதிகளிலும், "சுவிசேஷம்" என்ற வார்த்தைகள் ஒரே பொருளை உடையதாய் காணப்படுகிறது. தேவன் அவருடைய ஜனங்களின் சார்பாக அவருடைய சர்வ வல்லமையைப் பயன்படுத்தினார். "தேவன் இராஜரீகம் பண்ணுகிறார்" என்ற சொற்றொடரே இதனுடைய நோக்கமாகும். நம்முடைய நாட்களில் திரும்பிவந்த நம்முடைய ஆண்டவர் செயலாற்றக்கூடிய வல்லமையை நாம் காணலாம். எடுத்துக்காட்டாக, "உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் " (வெளிப்படுத்தல் 11:15-17).

(2) இந்த இரண்டு வசனப்பகுதிகளில் காணப்படும் ஒற்றுமைகள் நாகூம் கூறிய முழு நிகழ்ச்சியோடு ஏசாயா 52-ஆம் அதிகாரத்தை ஒப்பிட்டுப்பார்ப்பதற்கு வழிவகுக்கிறது. இது நாகூமில் சொல்லப்பட்ட அசீரியா, ஏசாயாவில் சொல்லப்பட்ட பாபிலோனை (போப்பமைப்பு) அடையாளப்படுத்தும் என்ற நம்முடைய யூகத்தை இது பலப்படுத்துகிறது.

(3) ஏசாயா 52-ஆம் அதிகாரத்தின் ஆசிரியர் வாழ்ந்த காலத்தில் நாகூம் வாழ்ந்தார் என்ற கருத்தை இது ஆதரிக்கிறது. ஏசாயா புத்தகத்தைப்பற்றி மற்றொரு குறிப்பு - இந்தப் புத்தகத்தின் பிற்பகுதி, அதாவது 40 அதிகாரங்களுக்குமேல் பெயர் தெரியாத வேறொரு ஆசிரியர் எழுதினதாகக் கூறப்படுகிறது. ஆயினும் அந்த ஆசிரியர் உண்மையில் நாகூம் காலத்தில் வாழ்ந்தவராக இருந்தால், மீதியுள்ள ஏசாயாவின் அதிகாரங்களுக்கும் ஏசாயாவே ஆசிரியராக இருந்தார் என்பதற்கு இது ஒரு நியாயமான காரணமாகத் தோன்றுகிறது.

ஆலயத்தின் நிறைவு

# ஆகாய்



"முந்தின ஆலயத்தின் மகிமையைப்பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரியதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (ஆகாய் 2:9).

கிமு 520-ஆம் வருடத்தில் பெர்சிய சாம்ராஜ்யத்தின்போது, தரியு ஹிஸ்டாஸ்பெஸ்சின் (Hystaspes) இரண்டாம் வருடத்தில் இரண்டு அதிகாரங்கள் கொண்ட ஆகாய் புத்தகம் எழுதப்பட்டது. கோரேஸ் இராஜாவின் முதலாம் வருஷத்தில் இஸ்ரயேலர்கள் எருசலேமுக்குத் திரும்பினார்கள். பதினெட்டு வருடங்களுக்கு முன்னதாகவே ஆலயம் கட்டப்பட துவங்கியது. ஆயினும் இஸ்ரயேலின் பகைவர்களால் எதிர்க்கப்பட்டதினிமித்தம் வேலை சோர்வடைந்தது.

"அப்பொழுது எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தின் வேலை தடைபட்டு, பெர்சியாவின் ராஜாவாகிய தரியு ராஜ்யபாரம்பண்ணின இரண்டாம் வருஷமட்டும் நிறுத்தப்பட்டிருந்தது" (எஸ்றா 4:24) என்பதை விவரிக்கிறது. கூடுதலாக, "யூதாவிலும் எருசலேமிலுமுள்ள யூதருக்கு இஸ்ரவேல் தேவனின் நாமத்திலே தீர்க்கதரிசனம் சொன்னார்கள். அப்பொழுது செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலும் யோசதாக்கின் குமாரனாகிய யெசுவாவும் எழும்பி, எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தைக் கட்டத்தொடங்கினார்கள்; அவர்களுக்குத் திடன் சொல்ல தேவனுடைய தீர்க்கதரிசிகளும் இருந்தார்கள்" (எஸ்றா 5:1-2) என்று வாசிக்கிறோம். [எஸ்றாவின் புத்தகம் இந்தச் செய்திகளைப் பதிவு செய்திருந்தாலும், எஸ்றா அது முதல் 62 வருடங்கள் எருசலேமுக்குச் செல்லவில்லை என்பதை நாம் மனதில்கொள்ள வேண்டும். எஸ்றாவின் புத்தகம் 80 வருடங்களுக்கான வரலாற்றைப் பதிவு செய்திருக்கிறது. அது எஸ்றா எருசலேமுக்கு உண்மையாகப் பயணித்த விவரம் முந்தி காணப்படுகிறது. செருபாபேல் ஆளுநராகவும், யெசுவா ஆசாரியராகவும், ஆகாய் மற்றும் சகரியா தீர்க்கதரிசகளாகவும் இருந்தார்கள். ஆனால் எஸ்றா (ஆசாரியர்) மற்றும் நெகேமியா (ஆளுநராகவும்) இருவரும் பத்து ஆண்டுகளுக்குப் பின் வந்தனர்.]

ஆலயத்தை நிறைவு செய்வதற்காக, இஸ்ரயேலர்கள் அந்த தீர்க்கதரிசியை ஊக்குவித்ததாய் ஆகாய் புத்தகம் பதிவு செய்துள்ளது. இஸ்ரயேலிலுள்ள அந்த ஆலயம் சபையை அடையாளப்படுத்தும். "தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே" (2 கொரிந்தியர் 6:16). "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்தஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (1 பேதுரு 2:5). ஆகவே சொல்லர்த்தமான ஆலயத்தைக்குறித்த ஆகாய் தீர்க்கதரிசியின் அறிவுரைகள் அனைத்தும் சுவிசேஷ யுகத்தில் ஆவிக்குரிய ஆலயமாக அழைக்கப்பட்ட சபைக்குப் பொருந்துகிறது.

**தானியேலின் கவலை**

தானியேல் 10-ஆம் அதிகாரம், ஒரு முக்கியமான காரியத்தைக்குறித்து, தானியேல் மூன்று வாரங்களாக துக்கத்தோடு உபவாசித்து தேவனிடத்தில் ஜெபித்தார் என்று கூறுகிறது. "அந்த நாட்களில் தானியேலாகிய நான் மூன்று வாரமுழுவதும் துக்கித்துக்கொண்டிருந்தேன். அந்த மூன்று வாரங்களாகிய நாட்கள் நிறைவேறுமட்டும் ருசிகரமான அப்பத்தை நான் புசிக்கவு மில்லை, இறைச்சியும் திராட்சரசமும் என் வாய்க்குள் போகவுமில்லை, நான் பரிமளதைலம் பூசிக்கொள்ளவுமில்லை" (தானியேல் 10:2-3).

தானியேல் அவர் கவலைப்படும் காரியத்தை வெளிப்படையாக விவரிக்கவில்லை. ஆயினும் அந்நேரத்தில் நடந்த சம்பவங்களைப்பார்க்கும்போது, எருசலேமில் நிறுத்தப்பட்ட ஆலயத்தின் வேலைகளைக்குறித்த கவலைகளை தானியேல் கொண்டிருந்தார் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

கோரேஸ் அவருடைய ஆட்சியின் முதலாம் வருடத்தில் இஸ்ரயேலர்கள் தங்களுடைய தேசத்திற்குத் திரும்புவதற்கு அனுமதித்தார் (2 நாளாகமம் 36:23).

இஸ்ரயேலுக்குத் திரும்பியவர்கள் மறுவருஷத்தில் ஆலயத்திற்கான அஸ்திபாரத்தைப் போட்டார்கள். அந்த வேலை எதிர்க்கப்பட்டு இறுதியாக நிறுத்தப்பட்டது. இந்தச் செய்தி தானியேலுக்கு அந்த வருட இறுதியில் எட்டியிருக்க வேண்டும். ஆகவே கோரேஸ் இராஜாவின் மூன்றாம் வருடத்தின் துவக்கத்தில் ஆலயத்தைக் குறித்ததான பாரம் தானியேலுடைய சிந்தையில் ஆழமாகப் பதிந்திருக்க வேண்டும். ஆகவே அவர் உபவாசித்து, துக்கித்துக்கொண்டிருந்தார்.

இறுதியாக ஆலயம் பெர்சிய இராஜாவாகிய தரியு ஹிஸ்டாஸ்பெஸ் (Darius Hystaspes) ஆறாம் வருஷம் கடைசி மாதம் நிறைவடைந்ததாக எஸ்றா 6-ஆம் அதிகாரம் 15-ஆம் வசனத்தில் பதிவு செய்திருக்கிறது. தானியேலின் 21 நாட்கள் உருக்கமான ஜெபத்திற்குப் பின் மற்றும் அதிலிருந்து 21 வருடங்களுக்குப் பின் கிமு 515-இல் இது நிறைவேறியது. ஆலயத்தை நிறைவு செய்வதற்கு 21 வருடங்கள் தாமதித்தக் காரியம், தானியேல் அவருடைய ஜெபத்தின் பதிலுக்காகக் காத்திருந்த 21 நாட்கள் குறிப்பிடுகிறது.

இந்தச் சுவிசேஷ யுகத்தில் நமக்கு இந்த நிகழ்விற்கான சிறப்பான அர்த்தம் உள்ளது. சபை வகுப்பாருக்கான அஸ்திபாரம் இயேசு மற்றும் அவருடைய அப்போஸ்தலர்களினால் யுகத்தின் துவக்கத்தில் போடப்பட்டது. அதற்குப் பின் தீவிரமான எதிர்ப்புகள் வந்து வேலை நிறுத்தப்பட்டது. யூத மதத்தலைவர்கள் அந்த வேலையைத் தடுக்க முயற்சித்தார்கள் (கலாத்தியர் 4:29). அதற்குப் பின் புறஜாதியாரான ரோம சாம்ராஜ்யம் மலர்ந்துவரும் கிறிஸ்தவ சமுதாயத்தை முற்றிலுமாக அழித்துவிட பயமுறுத்தியது (வெளிப்படுத்தல் 12:3-4). இந்தப் பயமுறுத்தல் நிறைவடைந்தபோது, சபை மூப்பர்கள் பூமிக்குரிய கவர்ச்சிகளினால் இழுக்கப்பட்டதினால் ஆவிக்குரிய நோக்கங்களிலிருந்து வழிவிலகிப் போனார்கள். மற்றும் போப் அமைப்பு அரசியல் செல்வாக்கில் உயர்ந்த இடத்தைப் பெற்று ஆவிக்குரிய வேலைகளை முழுமையாக எதிர்த்தது.

எல்லாவற்றிலும், ஆவிக்குரிய ஆலயத்தின் வேலை முழுமைப் பெறுவதற்கு முன் 21 நூற்றாண்டுகள் கடந்து சென்றிருக்க வேண்டும். ஒருவேளை தானியேலின் ஜெபத்திற்கான பதில் 21 நாள் தாமதித்ததும், சொல்லர்த்தமான ஆலயத்தை நிறைவு செய்வதற்கு 21 வருடங்கள் தாமதமானதும் இதை அடையாளப்படுத்தலாம்.

### மீண்டும் மீண்டும் கூறப்படும் தேதி குறிப்புகள்

நீசான் மாதம் 24-ஆம் தேதி, காபிரியேல் தோன்றி தானியேலின் ஜெபத்திற்குப் பதிலளித்தார் (தானியேல் 10:4). இதிலிருந்து தானியேலின் ஜெபம் நீசான் மாதம் 3-ஆம் தேதி அதாவது 21 நாட்களுக்கு முன்பதாக துவங்கியிருக்க வேண்டுமென்று அறிந்துகொள்ளலாம். இது கோரேஸ் இராஜாவின் மூன்றாம் வருஷத்தின் மூன்றாம் நாள். தானியேல் மூன்று வாரம் ஜெபித்தார். தொடர்ந்துவரும் மூன்று என்ற எண் சுவிசேஷ யுகத்தைத் தெளிவாகச் சித்தரிக்கிறது. ஏனெனில் மூன்று என்ற எண் இரட்சிப்பையும் மற்றும் இரட்சிப்பின் இரண்டு யுகங்களில் சுவிசேஷ யுகம் முதலில் காணப்படுகிறது. [இயேசு மூன்று நாள் கல்லறையில் இருந்தார், 30 வெள்ளிக் காசுக்குக் காட்டிக்கொடுக்கப்பட்டார், 300 பணம் மதிப்புள்ள தைலத்தினால் அவர் அபிஷேகிக்கப்பட்டார், பெந்தெகொஸ்தே நாளின்போது 3000 பேர் இரட்சிக்கப்பட்டார்கள். சுவிசேஷ யுகத்தைச் சித்தரிக்கும் சிம்சோனின் வாழ்க்கையில் வரிசையான இந்த எண்களை காணலாம் - மூன்று நாட்களுக்குள் விடுகதை விடுவிக்கப்பட வேண்டும், அதற்குப் பரிசாகக் கொடுக்கப்படும் 30 மாற்று வஸ்திரங்கள், 300 நரிகள், யூதாவின் 3000 மனிதர்கள்.]

21 நாட்கள், தானியேல் 10:2-3 வசனங்களில், "மூன்று வாரங்கள்" என்று இருமுறை கூறப்படுகிறது. அதாவது ஏழு நாட்களின் மூன்று தொகுப்புகளும் அல்லது ஏழு எண்களைக்கொண்ட மூன்று தொகுப்புகள் என்றும் கூறலாம். இப்படியாக இந்தக் காலபகுதி சபையின் ஏழு நிலைகளை அடையாளப்படுத்தலாம். மூன்று தொகுப்பு, ஒவ்வொன்றும் அந்தக் காலப்பகுதியில் மீட்கப்பட்டவர்களைக் குறிக்கும்.

அந்த மாதத்தின் 24-ஆம் தேதி அன்று காபிரியேல் சந்திக்க வந்த காரியம் ஆலயம் நிறைவடைந்ததைப்பற்றி ஆகாய் எழுதின

எழுத்துக்களோடு சம்பந்தப்பட்டுள்ளது. "பின்பு கர்த்தர் செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் யூதாவின் தலைவனுடைய ஆவியையும், யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனுடைய ஆவியையும், ஜனத்தில் மீதியான எல்லாருடைய ஆவியையும் எழுப்பினார்; அவர்கள் வந்து, தங்கள் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் ஆலயத்திலே வேலைசெய்தார்கள். தரியு ராஜாவின் இரண்டாம் வருஷம் ஆறாம் மாதம் இருபத்துநாலாந்தேதியிலே இது நடந்தது" (ஆகாய் 1:14-15) என்று வாசிக்கிறோம்.

அதே நாளில் அந்த எண் ஆகாய் தீர்க்கதரிசியினால் மறுபடியும் பயன்படுத்தப்பட்டது. "தரியுவின் இரண்டாம் வருஷம் ஒன்பதாம் மாதம் இருபத்துநாலாந்தேதியிலே ஆகாய் என்னும் தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று" (ஆகாய் 2:10). அதே நாளின் எண் ஆகாய் 2:10-இல் மீண்டுமாக பயன்படுத் தப்பட்டுள்ளது. "ஒன்பதாம் மாதம் 24-ஆம் தேதியிலே." " இந்த நாள் முதல் அதாவது ஒன்பதாம் மாதம் 24-ஆம் தேதி முதல் மக்கள் மீண்டுமாக தங்கள் பணியைத் துவங்கும்போது தேவன் அவர்களை ஆசர்வதித்து அவர்கள் பணியை வாய்க்கப்பண்ணுவார் என்ற தேவனின் வார்த்தை ஆகாயின்வழியாக ஜனங்களை உறுதிபடுத்த உண்டானது.

அதேநாளில் மீண்டும் ஒருமுறை குறிப்பிடப்பட்டதை ஆகாய் புத்தகத்தில் காணலாம் (ஆகாய் 2:20-23). இது யூதாவின் ஆளுநரான செருபாபேலுக்கு அனுப்பப்பட்ட செய்தியாகும். "இருபத்துநாலாந் தேதியாகிய அந்நாளிலே கர்த்தருடைய வார்த்தை இரண்டாம் விசை ஆகாய் என்பவனுக்கு உண்டாகி, அவர்: நீ யூதாவின் தலைவனாகிய செருபாபேலோடே சொல்லவேண்டியது என்னவென்றால், நான் வானத்தையும் பூமியையும் அசையப்பண்ணி, ரராஜ்யங்களின் சிங்காசனத்தைக் கவிழ்த்து, ஜாதிகளுடைய ராஜ்யங்களின் பெலத்தை அழித்து, இரதத்தையும் அதில் ஏறியிருக்கிறவர்களையும் கவிழ்த்துப்போடுவேன்; குதிரைகளோடே அவைகளின்மேல் ஏறியிருப்பவர்களும் அவரவர் தங்கள் தங்கள் சகோதரனின் பட்டயத்தினாலே விழுவார்கள். சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் என் ஊழியக்காரனே, உன்னை நான் அந்நாளிலே சேர்த்துக்கொண்டு, உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உன்னைத் தெரிந்துகொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்." செருபாபேல் நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை அடையாளப்படுத்துகிறார். இந்தத் தீர்க்கதரிசனம் கிறிஸ்துவின் இராஜ்யத்தின் ஸ்தாபனத்தையும் உலக இராஜ்யங்களின் அழிவையும் குறிப்பிடுகிறது. அந்நேரத்தில் சபை நிறைவு பெற்றிருக்கும்.

**சகரியா**

ஆகாய் தீர்க்கதரிசியின் இறுதி காலங்களில் வாழ்ந்த சகரியாவின் தீர்க்கதரிசனத்தில் மீண்டும் அந்த மாதத்தின் 24-ஆம் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. "தரியு அரசாண்ட இரண்டாம் வருஷம், சேபாத் மாதமாகிய பதினோராம் மாதம் இருபத்துநாலாந்தேதியிலே, கர்த்தருடைய வார்த்தை இத்தோவின் மகனான பெரகியாவின் குமாரன் சகரியா என்னும் தீர்க்கதரிசிக்கு உண்டாயிற்று" (சகரியா 1:7).

எருசலேம் திரும்பக் கொடுக்கப்படும் என்று சகரியாவின் செய்தி அறிவித்தது. மேலும் தேவன், "நீர் எவ்விடத்துக்குப் போகிறீர் என்று கேட்டேன்; அதற்கு அவர்: எருசலேமின் அகலம் இவ்வளவு என்றும் அதின் நீளம் இவ்வளவு என்றும் அறியும்படி அதை அளக்கிறதற்குப் போகிறேன் என்றார். நான் அதற்குச் சுற்றிலும் அக்கினிமதிலாயிருந்து, அதின் நடுவில் மகிமையாக இருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (சகரியா 2:2, 5). எருசலேம், பரம எருசலேமையும், மகிமையடைந்த சபையையும் அடையாளப்படுத்துவதினால் இவைகள் அனைத்தும் இதற்குத் தொடர்புள்ளதாகக் காணப்படுகிறது (வெளிப்படுத்தல் 21:2).

கூடுதலாக மாம்ச இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட சகரியாவின் தீர்க்கதரிசனம், மாம்ச இஸ்ரயேலர்கள் தங்களுடைய பாரங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு, இறுதியாக தங்களுடைய எதிராளிகளை ஜெயித்து தேவனுடைய இந்தப் பூமிக்குரிய இராஜ்யத்தின் மையமாக இருப்பார்கள் என்பதை உறுதிபடுத்தியது (சகரியா 14:3-8).

ஆகவே ஆகாய் மற்றும் அவருடைய காலத்தில் வாழ்ந்த சகரியாவின் தீர்க்கதரிசனங்களில் மூன்று வேலைகள் ஒன்றோடொன்றாகப் பிணைக்கப்பட்டிருப்பதை தீர்க்கதரிசனமாகப் பெற்றிருக்கிறோம். மேலும் அறுவடையின் முடிவில் இவைகள் நிறைவடையும் - சபை நிறைவடைதல், இராஜ்யத்தின் சகல உரிமைகளும் இயேசுவின் கைகளில் ஒப்புக்கொடுத்தல், இஸ்ரயேலின் சகல எதிராளிகளிடமிருந்து விடுவிக்கப்படும். ஒவ்வொரு விஷயத்திலும் அந்த மாதத்தின் 24-ஆம் நாள் என்ற எண் காத்திருக்கக்கூடிய "21 நாட்களின்" முடிவை அடையாளப்படுத்துகிறது – சுவிசேஷ யுகத்தின் முடிவு.

**பிந்தைய வீட்டின் மகிமை**


"சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். முந்தின ஆலயத்தின் மகிமையைப்பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரியதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்" (ஆகாய் 2:7-9). "...வேற்றினத்தார் அனைவரின் விருப்பத்திற்குரியவைகளும் இங்கு வந்து சேரும்..." என்று திருவிவிலியத்தில் தெளிவாக வாசிக்கிறோம்.

"வேற்றினத்தார் அனைவரின் விருப்பத்திற்குரியவைகளும் இங்கு வந்து சேரும்" என்ற வசனத்தில் குறிப்பிடப்படும் காரியங்கள், செருபாபேலின் ஆலயத்தை மகிமைப்படுத்துவதற்காக தேவன் கொடுக்கக்கூடிய பொன்னும் வெள்ளியுமாம். இந்தப் பொன் மற்றும் வெள்ளி ஆவிக்குரிய சபை மற்றும் திரள்கூட்டத்தாரைப் பெரிதான அளவில் அடையாளப்படுத்துகிறது. இந்த ஆவிக்குரிய ஆலயம் உலகத்தின் பொருட்களைக் காட்டிலும் மிக விலை உயர்ந்த பொருட்களினால் மகிமைப்படுத்தப்படும்.

இந்த மகிமைக்காகவே நாம் காத்திருக்கிறோம். அறுவடையின் முடிவு நெருங்கிக்கொண்டிருக்கிறோம். கிறிஸ்துவின் பிரசன்னத்திற்குப் பின், உயிர்த்தெழுப்பப்பட்ட பரிசுத்தவான்கள் நமக்கு முந்தி அவர்களின் மகிமையான பிரசன்னத்தினால் ஆவிக்குரிய ஆலயத்தை நிரப்பிக்கொண்டிருக்கிறார்கள். மீதியுள்ளவர்கள் நிறைவடையும்போது, நீண்ட நாட்களாக எதிர்பார்த்த தேவனுடைய இராஜ்யம், "பூமியிலுள்ள முழு குடும்பங்களையும்" ஆசீர்வதிக்கத் துவங்கும் (ஆதியாகமம் 28:14).

**மல்கியா, பரலோக தந்தைக்கான மதிப்பு**

# ஐந்தாவது பிரமாணம்



"குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம் பண்ணுகிறார்களே; நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே? என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார் " (மல்கியா 1:6).

கிறிஸ்தவர்களாக இருப்பதினால் நாம் நியாயப்பிரமாணத்தின் கீழல்ல, கிருபையின் பிரமாணத்தின் கீழ் இருக்கிறோம். ஆயினும் 10 கற்பனைகளில் முக்கியமானப் பாடங்கள் உள்ளது. நான்கு மற்றும் ஐந்தாம் கற்பனைகளில் விசேஷித்த பாடங்கள் உள்ளது. 10 பிரமாணங்களில் எட்டு பிரமாணங்கள். "இதைச் செய்யாதிருங்கள்" என்ற சொற்றொடரைக் காணலாம். இதற்கு எதிரிடையாக நான்கு மற்றும் ஐந்தாம் கற்பனைகளில் ஒத்த வாக்கியங்கள் காணப்படுகிறது. நாம் ஐந்தாவது பிரமாணத்தைக்குறித்து காணலாம்.

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப் பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" (யாத்திராகமம் 20:12) என்று கூறுகிறது. இந்தப் பிரமாணத்தைக்குறித்து, "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது" (எபேசியர் 6:3) என்று அப்போஸ்தலனாகிய பவுல் இந்தக் கற்பனையைக்குறித்து விளக்கமளிக்கிறார். உண்மையில் 10 கற்பனைகளில் இந்தக் கற்பனை மட்டுமே ஒரு குறிப்பிட்ட வாக்குத்தத்தத்தைக் கொண்டுள்ளது.

ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கு ஒரு விசேஷித்தப் பாடத்தை இது கற்றுத்தருகிறது. பிதாவாகிய தேவனே நமது தந்தை. "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" (மத்தேயு 6:9). சாராளின் உடன்படிக்கை நம்முடைய தாய். "ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது; ஒருவன் அடிமையானவளிடத்தில் பிறந்தவன், ஒருவன் சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன். அடிமையானவளிடத்தில் பிறந்தவன் மாம்சத்தின்படி பிறந்தான், சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன் வாக்குத்தத்தத்தின்படி பிறந்தான். இவைகள் ஞான அர்த்தமுள்ளவைகள்; அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்பாடுகளாம்; ஒன்று சீனாய்மலையிலுண்டான ஏற்பாடு, அது அடிமைத்தனத்திற்குள்ளாகப் பிள்ளைபெறுகிறது, அது ஆகார் என்பவள்தானே. ஆகார் என்பது அரபிதேசத்திலுள்ள சீனாய்மலை; அந்த ஆகார் இப்பொழுதிருக்கிற எருசலேமுக்குச் சரி; இவள் தன் பிள்ளைகளோடேகூட அடிமைப்பட்டிருக்கிறாளே. மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள்" (கலாத்தியர் 4:22-26). இதற்கு மாறாக யூதர்களுக்கு நியாயப்பிரமாணமே தாயாக இருக்கிறாள்.

**மல்கியா**

ஐந்தாம் கற்பனையின் ஒரு ஆழமான புரிந்துகொள்ளுதல் மல்கியாவில் காணப்படுகிறது. இந்தச், "சிறிய தீர்க்கதரிசி" - மாம்ச இஸ்ரயேலர்கள், பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் மற்றும் திரள்கூட்டம் ஆகிய மூன்று வேறுபட்ட வகுப்பாரைக்குறித்து அதிகபட்சமான முக்கியத்துவத்தைக் கொடுத்திருக்கிறார். இந்தப் புத்தகம் ஒரு தீர்க்கதரிசனம். இது மேசியாவின் முதலாம் மற்றும் இரண்டாம் வருகையைத் தொடர்புபடுத்துகிறது. இது இவ்விரண்டு விஷயங்களிலும் நடக்கக்கூடிய சம்பவங்களைக் காட்டுகிறது.

மாம்ச இஸ்ரயேலர்களுக்கு மல்கியாவின் இறுதியான உணர்ச்சியூட்டும் செய்தியாக இருந்தது. அவர்களுக்கு எதிரான ஒரு நியாயத்தீர்ப்பு அதில் இருந்தது. சீர்பொருந்துதலுக்கான ஒரு அழைப்பையும், இரட்சிப்புக்கான ஒரு வாக்குத்தத்தத்தையும் அது கொடுத்தது. இந்த வாக்குத்தத்தம் பல யூதர்களால் இந்நாள் வரையில் இறுக்கமாகப் பற்றிக்கொள்ளப்படுகிறது. காலியான ஒரு இருக்கை அல்லது வழக்கமாக பஸ்கா மேஜையின்மேல் எலியாவுக்காக கூடுதலான ஒரு பாத்திரத்தில் திராட்சரசம் வைக்கப்படுகிறது (மல்கியா 4:5-ஐ ஒப்பிட்டு காண்க).

**வசனம் 1-4**

ஏதோமுக்கு எதிராக தனிப்பட்ட ஒரு நியாயத்தீர்ப்பை முதலாம் வசனம் காண்பிக்கிறது. இங்கும் (எல்லா இடங்களைப்போல) ஏதோம் கிறிஸ்தவ மண்டலத்தை அடையாளப்படுத்துகிறது. அவர்கள் தேவனுடைய இராஜ்யத்தை

ஸ்தாபிப்பதற்கான முயற்சிகளை ஏறெடுப்பதை இது காட்டுகிறது. ஆனால் தேவன் இந்தப் போலியான இராஜ்யங்களை அங்கீகரிப்பதில்லை. மேலும் அவைகளைக் கீழே தள்ளும்படிக்கான வேலைகள் இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது. அது நித்தியமான நியாயத்தீர்ப்பாக இருக்கும். இது நமக்கு வெளிப்படுத்தல் 14:11-ஆம் வசனத்தை நினைவுபடுத்துகிறது. அதில் அடையாளமாக எரியக்கூடிய அவளுடைய புகை தொடர்ந்து எரிந்துகொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

**வசனம்-5**

நியாயத்தீர்ப்புக்குப் பின் நடக்கக்கூடியவைகளைக் காட்டுகிறது. "இதை உங்கள் கண்கள் காணும். அப்பொழுது நீங்கள்: கர்த்தர் இஸ்ரவேலுடைய எல்லை துவக்கி மகிமைப்படுத்தப் படுவார் என்பீர்கள்" (மல்கியா 1:5). உண்மையான இராஜ்யம் இஸ்ரயேலின் வழியாக ஸ்தாபிக்கப்படும். அந்த இராஜ்யம் நித்தியமானது என்று மற்றும் பல வசனங்கள் காட்டுகிறது.

தொடர்ந்துவரும் பெருமளவிலான தீர்க்கதரிசனம் ஒரு பிரச்சனையையும் அதன் தீர்வையும் ஆழந்து ஆராய்கிறது. இவைகள் இரண்டும் ஐந்தாம் கற்பனைக்குத் தொடர்புடையதாக இருக்கிறது. "குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம் பண்ணுகிறார்களே; நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே? என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார்; அதற்கு நீங்கள்: உமது நாமத்தை எதினாலே அசட்டைபண்ணினோம் என்கிறீர்கள்" (மல்கியா 1:6). தேவனுடைய நாமத்தை அவமதிக்கும் இந்த ஆசாரியர்கள் யார்?

தங்களுடைய பிதாவை மதிக்க தவறிய மூன்று வகுப்பார்கள் உள்ளனர் - (1) சீர்கெட்டுப்போன மாம்ச இஸ்ரயேலர்களின் ஆசாரியர்கள், (2) மகா பாபிலோனின் (பெயர் சபை) பொய் மத குருக்கள், (3) எசேக்கியேல் 44:10-13 வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ள சீர்கெட்ட லேவியர்கள் - திரள்கூட்டம்.

இந்த மூன்று வகுப்பாருக்கும் ஒரு நியாயத்தீர்ப்பின் செய்தி மற்றும் தீர்க்கதரிசனம் மல்கியா புஸ்தகத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. முதலில் இந்த மூன்று வகுப்பாரின் தோல்விகள் என்ன? என்பதைக் கேட்கலாம். இந்த மூன்று வகுப்பாரும் பரலோகத்தின் தேவனாகிய தந்தைக்குச் செலுத்தக்கூடிய கனத்திலும் மதிப்பிலும் குறைவுபட்டார்கள் - அவர்களின் தாய்க்கும் (உடன்படிக்கை) கொடுக்க வேண்டிய கனத்தையும் மதிப்பையும் கொடுக்காமல் விட்டுவிட்டார்கள். இந்த மூன்று வகுப்பாரும் தங்களுடைய பாவங்களை உணராதிருக்கிறார்கள். "குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம் பண்ணுகிறார்களே; நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே? என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார்; அதற்கு நீங்கள்: உமது நாமத்தை எதினாலே அசட்டைபண்ணினோம் என்கிறீர்கள். என் பீடத்தின்மேல் அசுத்தமான அப்பத்தைப் படைக்கிறதினாலேயே; ஆனாலும் உம்மை எதினாலே அசுத்தப்படுத்தினோம் என்கிறீர்கள்; கர்த்தருடைய பந்தி எண்ணமற்றுப்போயிற்றென்று நீங்கள் சொல்லுகிறதினாலேயே" (மல்கியா 1:6-7).

அவர்களுக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்துவரும் வசனங்களில் காணலாம்.

**வசனம் - 7**

"என் பீடத்தின்மேல் அசுத்தமான அப்பத்தைப் படைக்கிறதினாலேயே; ஆனாலும் உம்மை எதினாலே அசுத்தப்படுத்தினோம் என்கிறீர்கள்; கர்த்தருடைய பந்தி எண்ணமற்றுப்போயிற்றென்று நீங்கள் சொல்லுகிறதினாலேயே" (மல்கியா 1:7). இந்த மூன்று வகுப்பாருக்கும் வெவ்வேறு வழிகளில் இது உண்மையாகப் பொருந்துகிறது. அவர்கள் செலுத்தின சொல்லர்த்தமான பலிகள் சிறந்ததாக இருக்கவில்லை. இது அவர்களின் அலட்சியமான மனப்பான்மையைக் காட்டுகிறது. கூடுதலாக, "அசுத்தமான அப்பங்கள்" அசுத்தமான உபதேசத்தையும், பழக்கவழக்கங்களையும் அடையாளப் படுத்துகிறது.

அவர்கள் தங்களுடைய பூமிக்குரிய அதிபதிகளுக்கும் கொடுக்கத்தகாத பார்வையற்ற, கிழிந்த, முடமான, வியாதியுள்ள பரிசுகளையே பலி செலுத்தினார்கள். "நீங்கள் கண் ஊனமானதைப் பலியிடக்கொண்டுவந்தாலும் அது பொல்லாப்பல்ல, நீங்கள் காலூனமானதையும் நசல் பிடித்ததையும் கொண்டுவந்தாலும் அது பொல்லாப்பல்ல என்கிறீர்களே; அதை நீ உன் அதிபதிக்குச் செலுத்து, அவன் உன்மேல் பிரியமாயிருப்பானோ? உன் முகத்தைப் பார்ப்பானோ என்று சேனைகளின் கர்த்தர்

கேட்கிறார். இதோ, இது எவ்வளவு வருத்தமென்று சொல்லி, அதை ஒரு திரணமாய்ப் பேசி, பீறுண்டதையும் கால் ஊனமானதையும் நசல்கொண்டதையும் கொண்டுவந்து காணிக்கையாகச் செலுத்துகிறீர்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; அதை உங்கள் கைகளில் அங்கீகரித்துக்கொள்வேனோ என்று கர்த்தர் கேட்கிறார்" (மல்கியா 1:8, 13). தங்களுடைய உடன்படிக்கையின்படி செலுத்தும்படியாக ஒப்புக்கொண்ட பலிகளுக்குக் குறைவானதையே செலுத்தினார்கள் (வசனம் 14).

தேவனுடைய நாமத்தைப் பரிசுத்த குலைச்சலாக்குவது என்ற மற்றொரு குற்றச்சாட்டும் 12-ஆம் வசனத்தில் கூறப்படுகிறது.

இப்படியாக இந்த மூன்று வகுப்பாரின் மனம் வருந்தாத பாவங்கள் மரபு வழியின் மதத்தைப் பின்பற்றியது, இருதயங்களிலிருந்து பலிகளை ஏறெடுக்காமை, சத்தியத்தைப் புரட்டுதல். இதற்கு எதிராக, உண்மையான இராஜ்யத்தின் விளைவுகளை 11-ஆம் வசனத்தில் காணலாம். "சூரியன் உதிக்கிற திசை தொடங்கி, அது அஸ்தமிக்கிற திசை வரைக்கும், என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும்; எல்லா இடங்களிலும் என் நாமத்துக்குத் தூபமும் சுத்தமான காணிக்கையும் செலுத்தப்படும்; என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (மல்கியா 1:11).

"இந்த மூன்று வகுப்பாரின் தோல்விகள் என்ன?" என்ற கேள்விக்கான பதிலை நாம் பெற்றோம். இவைகள் நமக்கு எந்தளவுக்கு முக்கியமானது? நம்முடைய பரலோகத்தின் தந்தையையும் தாயையும் சரியான முறையில் கனப்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். இல்லாவிட்டால் நாமும் இதே பாவங்களுக்கு உட்பட்ட குற்றவாளிகளாக இருப்போம்.

**அதிகாரம் - 2**

அவிசுவாசிகளாகிய ஆசாரியர்கள் மற்றும் லேவியருக்கான உறுதியான கண்டனம் மல்கியா 2-ஆம் அதிகாரத்தில் உள்ளது. ["லேவி" மற்றும் "லேவியர்கள்" என்ற வார்த்தைகள் மல்கியாவில் காணப்படுவதில்லை. ஆனால் தேவன் "லேவியர்களோடு" ஏற்படுத்தின - உடன்படிக்கை மல்கியா 2:4, 8 வசனங்களில் குறிப்பிடப்படுகிறது. மற்றும் "லேவியன்" புத்திரர் என்ற வார்த்தை மல்கியா 3:3-ஆம் வசனத்தில் காணப்படுகிறது. அதில் அவர்கள் புடமிடப்பட்ட பொன்னாகவும் வெள்ளியாகவும் அதாவது சபை மற்றும் திரள்கூட்டத்தராகிய இரு ஆவிக்குரிய வகுப்பாரைக்குறிப்பிடுகிறது.] விசுவாசமுள்ள மற்றும் அவிசுவாசமான வகுப்பார்களுக்கு இடையில் காணப்படும் வித்தியாசத்தையும் இது காட்டுகிறது.

அங்கீகரிக்கப்படாத பலிகளைச் செலுத்தி தங்களுடைய உடன்படிக்கையின் நிபந்தனைகளை எடுத்து பரிசுத்த குலைச்சலாக்கினார்கள் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டப் படுகிறார்கள் (மல்கியா 2:8, 10). இப்படியாக அவர்களுடைய தாயை அவர்கள் மதிக்காமல், மற்றவர்களையும் இடறச் செய்தார்கள்.

மல்கியா 2:11-16 -ஆம் வசனங்களில் தேவனுக்கும் உடன்படிக்கைக்கும் அவிசுவாசமாய் இருப்பதை வேறுபட்ட அடையாளங்களில் காட்டப்படுகிறது. அந்தப் பாவம், "அந்நிய தேவதைகளின் குமாரத்திகளை விவாகம் செய்வது." இது தேவனையும் உடன்படிக்கையையும் அவமதிக்கிறது. பொதுவான மற்றும் செயல் முறையான கோட்பாடுகளுக்குக் கூடுதலான இந்தச் சொல் முழுமையாக அடையாளமான அர்த்தங்களைக் கொண்டிருக்கிறது. யூதா தேசம் தங்களுடைய உடன்படிக்கைக்கு விசுவாசமாக இருக்கவில்லை. பெயர் சபை பூமியின் இராஜாக்களோடு வேசித்தனம் செய்தது. கிறிஸ்துவின் மணவாட்டியாக இருப்பதற்குத் தேவையான விசுவாசத்தை திரள்கூட்டத்தார் வெளிப்படுத்தவில்லை.

உண்மையான வாக்குத்தத்தத்தின் சந்ததியாகிய கிறிஸ்து மற்றும் அவருடைய மணவாட்டியை தேவனுடைய "பக்தியுள்ள சந்ததி" என்று 15-ஆம் வசனம் காட்டுகிறது.

**வசனம் - 3**

பிரச்சனையைக்குறித்து விவரங்களை இதுவரை நாம் கண்டோம் - இந்தப் பிரச்சனைக்கான தீர்வை 3-ஆம் அதிகாரம் காண்பிக்கத் துவங்குகிறது. இது விசுவாசமுள்ள ஆசாரியர்கள் மற்றும் லேவியர்களை மையப்படுத்துகிறது. இது எசேக்கியேல் 44-ஆம் (15-31) அதிகாரத்திற்கு மற்றொரு இணையாகும்.

முதல் மூன்று வசனங்கள், ஆண்டவருடைய விசேஷித்த தூதனால் நிறைவு செய்ய வேண்டிய ஆயத்தம் மற்றும் சுத்திகரிப்பின் வேலையைக் காட்டுகிறது.

"என்னுடைய தூதன்" என்று சொல்லப்பட்ட யோவான்ஸ்நானனின் ஆயத்த வேலைகள் இதில் தொடர்ந்தது. இந்தத் தீர்க்கதரிசனத்தின் முழுமையான விளக்கம், இயேசுவின் இரண்டாம் பிரசன்னத்திற்கும் பொருந்தக்கூடியது. இதைக்குறித்து, "இயேசு அவர்களுக்குப்

பிரதியுத்தரமாக: எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான்" (மத்தேயு 17:11) என்று மறைமுகமாகக் குறிப்பிட்டார். இயேசுவே உண்மையான "உடன்படிக்கையின் தூதன். "

நாம் அனைவரும் குறைபாடு உள்ளவர்கள். நம் அனைவருக்கும் சுத்திகரிப்பு தேவை. நிழலான லேவியரின் புத்திரர்களின் இரண்டு வகுப்பார்கள் இங்குக் காண்பிக்கப்படுகிறது. சிறுமந்தை இருதயத்தில் தூய்மை உள்ளவர்கள். அவர்கள் பொன்னாகச் சுத்திகரிக்கப்பட்டு ஆசாரியர்களாய் இருப்பார்கள். திரள்கூட்டத்தாரும் இருதயத்தில் சுத்திகரிக்கப்படுவார்கள். ஆனால் வெள்ளியைப்போல் சுத்திகரிக்கப்படுவார்கள். அவர்கள் ஆசாரியர்களாக அல்ல, ஆலயத்தின் ஊழியக்காரர்களாய்ப் பணி புரிவார்கள்.

இந்த இரு வகுப்பாரும் 5-ஆம் கற்பனைக்குக் கொண்டுள்ள விசுவாசத்தின் அடிப்படையில் வேறுபடுகிறார்கள். சிறுமந்தை தங்களுடைய தந்தையாகிய தேவனுக்கும் உடன்படிக்கையாகிய தாய்க்கும் மிகுந்த விசுவாசமுள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள் (முற்றும் ஜெயங்கொண்டவர்கள்).

"நிலைநிற்கிறவர் யார்?" (மல்கியா 3:2) என்ற கேள்வி கேட்கப்படுகிறது. பொன் மற்றும் வெள்ளி, இவ்விரண்டு வகுப்பாரும் நிலைநிற்பார்கள். இரு வகுப்பாரிடமிருந்து எல்லா அசுத்தங்களும் நீக்கப்படும். திரள்கூட்டத்தாரைப் பொறுத்தவரையில் அவர்கள் மரத்தினாலும், வைக்கோலினாலும், புல்லினாலும் கட்டடத்தை எழுப்பி மிகுந்த நஷ்டம் அடைவார்கள். ஆனால் அவர்கள் ஜீவன் தப்புவிக்கப்படும் (1 கொரிந்தியர் 3:10-15). இந்த இரு வகுப்பாரும் இயேசு கிறிஸ்துவாகிய கன்மலையின்மேல் நிலையாக நிற்பார்கள்.

தொடர்ந்துவரும் வசனங்களில் (1) கடந்த காலத்தில் ஏறெடுக்கப்பட்டுள்ள அநீதியுள்ள காணிக்கைகளுக்கும் மற்றும் (2) வருங்காலத்தில் ஏறெடுக்கப்படும் நீதியுள்ள காணிக்கைகளுக்கும் ஒரு வேறுபாட்டைக் காணலாம். முதலாவது (நிழலான) பலிகள் ஆணையிட்டுக் கொடுத்ததைக் காட்டிலும் குறைவாகச் செலுத்தப்பட்டது. இரண்டாவதாக, (நிஜமான) விசுவாசமுள்ளவர்கள், நீதியுள்ளவர்களாக மட்டுமல்ல, (வசனம் 3) தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையில் ஒப்புரவை ஏற்படுத்துவார்கள். "அப்பொழுது பூர்வநாட்களிலும் முந்தின வருஷங்களிலும் இருந்ததுபோல, யூதாவின் காணிக்கையும், எருசலேமின் காணிக்கையும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும்" (மல்கியா 3:4).

ஒப்புரவாகுதலின் செயல்முறை "யாக்கோபிலிருந்து" துவங்கும் (வசனம் 4-12), இதன் துவக்கம் பிரதி உபகாரமும் படிப்படியான இரட்சிப்பும் ஆகும். நிஜமான "லேவியின் புத்திரர்கள்" சுத்திகரிக்கப்பட்ட பின் இந்த உலகத்தின் மனுக்குலம் ஆசீர்வதிக்கப்படும்.

அறுவடையின் காலத்தில் உண்மையான சபையின் நோக்கத்தை 16, 17-ஆம் வசனங்கள் காட்டுகிறது. இவர்கள் ஐந்தாம் கற்பனையை மதிக்கக்கூடியவர்கள். தங்களுடைய பிதாவாகிய தேவனை கனப்படுத்தி, தங்களுடைய தாயாகிய உடன்படிக்கையை மதிக்கப்படக் கூடியவர்களாக, ஒருவரோடொருவர் சபை கூடிவரும்போது இவைகளைக்குறித்துப் பேசி (எபிரெயர் 10:24, 25) மற்றும் ஒருவரையொருவர் நேசிப்பார்கள்). (1 யோவான் 4:21).

தேவன் ஒரு "ஞாபகார்த்த புத்தகத்தை" எழுதிக்கொண்டிருக்கிறார். அவருடைய "சம்பத்தைச் சேர்த்துக்" கொண்டிருக்கிறார். மற்றும் குமாரனைப்போல கடாட்சிக்கிறார்.

**அதிகாரம் - 4**

"சூளையைப்போல எரிகிற நாள்வரும்" என்று வருங்காலத்தைக்குறித்து நான்காம் அதிகாரம் விவரிக்கிறது. சில காரியங்கள் ஏற்கெனவே துவங்கிவிட்டது.

முதல் வசனம் உப்பத்திரவ காலத்தை விவரிக்கிறது. இஸ்ரயேலின்மேல் வந்த உபத்திரவத்தை (கிபி 69-73) நிழலிட்டுக் காட்டுகிறது. இந்த மகா உபத்திரவத்திற்கு பிரெஞ்சு புரட்சியும் ஒரு நிழலாய் இருந்தது. இந்த உபத்திரவம் இரண்டு நோக்கங்களை உள்ளடக்கியுள்ளது. (1) பொய் அமைப்புகள், தவறுகளின் அழிவு மற்றும் ஒரு நியாயத்தீர்ப்பின் வேலை. (2) ஆக்கப்பூர்வமான மற்றும் சுத்திகரிப்பின் வேலைகள்.

இந்த இரண்டு வேறுபட்ட அடையாளங்களுக்கு மத்தியில் காணப்படும் உறுதியான ஒரு வித்தியாசத்தை இது பெரியளவில் காட்டுகிறது. (1) அந்த நாள் அவர்களுடைய வேரையும் கொப்பையும் எரித்துப் போடுவதினால், அவர்களுக்கு எதுவும் மீதியிருப்பதில்லை. வயல்வெளிகளை இப்படியாக எரிக்கக்கூடிய பழக்கம் இன்னும் பல தேசங்களில் காணப்படுகிறது. இந்தச் சுத்திகரிப்பின் வேலையில், வேர்களும் விரும்பப்படாத

வளரக்கூடிய செடிகளின் விதைகளும் முற்றிலுமாக அழிக்கப்படும். என்றுமே தீமையான காரியங்கள் வளர்ச்சியடையாதபடிக்கு முற்றிலுமாக இது அழிக்கப்படுவதை இது அடையாளப்படுத்துகிறது. (2) 1 கொரிந்தியர் 3:11-15 மற்றும் மல்கியா 3:3, 17 வசனங்களுக்கு இடையிலுள்ள இணையைப் பார்க்கும்பொழுது பொன் வெள்ளி மற்றும் விலையேறப் பெற்ற கற்கள், தேவனுடைய சம்பத்தாகச் சேர்க்கப்படுவதற்கு லேவியின் புத்திரர்களைச் சுத்திகரிக்கப்படுவதுபோல சுத்திகரிப்பதை நாம் காணலாம்.

இந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம், இந்த யுகத்தின் முடிவில் நீதியின் சூரியன் உதிக்கத் துவங்கும்போது ஒரு விசேஷித்த வழியில் சம்பவிக்கும். நம்முடைய ஆண்டவரின் இரண்டாம் பிரசன்னம் ஒரு விசேஷித்த அறுவடை வேலையோடு துவங்குகிறது. இதில் அசுத்தமான தீமைகளை அழிப்பதற்கும் தேவனுடைய ஜனங்களைச் சுத்திகரிப்பதற்கும் ஒரேவிதமான அக்கினி பயன்படும்.

"இக்காலத்து தீமையான உலகத்தின்" அமைப்புகளின் அழிவைத் தொடர்ந்து தேவனுடைய இராஜ்யத்தின் கட்டுமானப் பணிகள் அதிகமாக நடைபெறும். "அவருடைய செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்" (வசனம் 2) என்ற வார்த்தைகள் இங்குத் திரும்பக்கொடுத்தலின் செயலை அடையாளப்படுத்தும். படிப்படியாக இந்த முழு உலகமும் கற்பனைக்குக் கீழ்ப்படியக் கற்றுக்கொள்ளும். அவர்கள் தேவனாகிய தந்தையைக் கனப்படுத்தி, தாயாகிய புதிய உடன்படிக்கையையும் கனப்படுத்துவார்கள். இவர்கள் படிப்படியாக, "கொழுத்தக் கன்றுகளாக" வளர்ச்சியடைந்து ஆயிரவருட ஆட்சியின் முடிவில் தேவனுடைய பலிபீடத்தில் "பலி செலுத்தப்படக்கூடிய காளைகளாக" இருப்பார்கள் (சங்கீதம் 51:19).

இந்தப் புத்தகத்தில் நிலையான ஒரு ஆலோசனையை மல்கியா 4:4-ஆம் வசனம் கூறுகிறது. "ஓரேபிலே இஸ்ரவேலரெல்லாருக்காகவும் என் தாசனாகிய மோசேக்கு நான் கற்பித்த நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளையும் நியாயங்களையும் நினையுங்கள்." மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால், ஐந்தாம் கற்பனைக்குக் கீழ்ப்படியுங்கள். தேவனை கனப்படுத்துங்கள். உங்கள் உடன்படிக்கையின் பொருத்தனைகளைக் கனப்படுத்துங்கள். நம்முடைய இருதயத்தில் இப்படிப்பட்ட நோக்கம் இருந்தால், மற்ற கற்பனைகளுக்கும் தேவைப்படும் கீழ்ப்படிதல் தொடர்ந்துவரும்.

**மல்கியா புத்தகத்தின் முடிவு**

இந்த மல்கியா புத்தகம் எலியா வகுப்பாராகிய பாத அங்கத்தினரின் ஒரு விசேஷித்த வேலையைக்குறித்த தீர்க்கதரிசனத்தோடு முடிவடைகிறது. இந்தப் பணி திரைக்கு இந்தப் புறம் நிறைவடையும். (1) பாவம் மற்றும் தவறுகளைக்குறித்த கடிந்துகொள்ளுதல் நமக்குள் துவங்குகிறது. (2) உபத்திரவத்தைத் தொடர்ந்துவரும் மகிமையான இராஜ்யத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

மனுக்குலத்திற்கான சீர்திருத்தலின் வேலை வருங்காலத்தில் நடைபெறும். எலியா வகுப்பினர் தங்களுடைய சாட்சிகள் மற்றும் எடுத்துக்காட்டுதலின் வழியாக இந்த முழு உலகம் நிச்சயமாக விழுந்து போனாலும் அதை மனந்திருப்ப முயற்சிக்க வேண்டும். இப்படியாக உபத்திரவ காலத்தின் சாபம் தொடரும். குறிப்பாக 1914-ஆம் வருடத்தில் இது ஏற்கெனவே துவங்கிவிட்டது. இருப்பினும் சத்தியத்தை அறிவிப்பதற்கான நம்முடைய பணி தொடர வேண்டும்.

நம்முடைய தந்தையையும் தாயையும் கனப்படுத்துவதினால் ஆசீர்வதிக்கப்படுவோம். நமக்குச் செவிகொடுப்பவர்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். சிலர் இக்கால வாழ்க்கையில் இந்த ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள். ஆனால் பலர் இந்த ஆசீர்வாதங்களை உயிர்த்தெழுதலின்போது பெறுவார்கள்.

வசனங்களில் மூன்று "தாய்" உடன்படிக்கைகள் காண்பிக்கப்படுகிறது. கலாத்தியர் 4-ஆம் அதிகாரத்தில் இரண்டைப்பற்றி பவுல் தெளிவாக அறிவிக்கிறார். மூன்றாவது தெளிவாக காண்பிக்கப்படவில்லை. ஆனால் மல்கியாவின் புஸ்தகம் மூன்று உடன்படிக்கைகளையும் குறிப்பிடுகிறது. (1) மாம்ச இஸ்ரயேலர்கள் தங்களுடைய தாய் (ஆகார்) நியாயப்பிரமாணம் உடன்படிக்கையையும் அதற்குப் பின் புதிய உடன்படிக்கையையும் கனப்படுத்த வேண்டும். (2) ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தங்களுடைய தாய் (சாராள்) பலியின் உடன்படிக்கையைக் கனப்படுத்த வேண்டும்.

ஆனால் மறைவாகச் சொல்லப்பட்டாலும், இந்தத் தீர்க்கதரிசனத்திலும் கேத்தூராளும் காண்பிக்கப்படுகிறாள். "சுத்தமான தூபம் செலுத்தப்படும்" என்று மல்கியா 1:11-ஆம் வசனத்தில் சொல்லப்பட்ட சொற்றொடர், "தூபவர்கத்தை ஆயத்தம் செய்தல்" என்ற பொருளைக்கொடுக்கக்கூடிய எபிரெய

வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (SH6999). இது அந்த வார்த்தையின் இணைச் சொல்லாகும். அதற்கானப் பெயர் சொல் கேத்தூரா ஆகும் (SH6989). இராஜ்யத்தில், "கேத்தூராள் வகுப்பினர்" அவர்களின் உடன்படிக்கையின் நாமத்திற்குரிய உண்மையான பொருளைச் செயல்படுத்தத் துவங்குவார்கள். அவர்கள் நன்றியறிதல் மற்றும் துதியின் தூபவர்க்கத்தை தேவனுக்குச் செலுத்துவார்கள்.

**சுருக்கம்**

(1) நாம் பிரச்சனையை ஆராய்ந்தோம்; ஐந்தாம் கற்பனையைக் கீழ்ப்படிவதற்கான சோர்வு இதைப்பற்றி இயேசு மத்தேயு 15:4-9 வசனங்களில் குறிப்பிடுகிறார். "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்றும்; தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் என்றும், தேவன் கற்பித்திருக்கிறாரே. நீங்களோ, எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தன் தாயையாவது கனம்பண்ணாமற்போனாலும், அவனுடைய கடமை தீர்ந்ததென்று போதித்து, உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள். மாயக்காரரே, உங்களைக்குறித்து: இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்" (மத்தேயு 15:4-9).

கூடுதலாக இயேசு, "தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்; நீங்களும் தேவனால் உண்டாயிராதபடியினால் செவிகொடாமல் இருக்கிறீர்கள் என்றார். அப்பொழுது யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: உன்னைச் சமாரியனென்றும், பிசாசுபிடித்தவனென்றும் நாங்கள் சொல்லுகிறது சரிதானே என்றார்கள். அதற்கு இயேசு: நான் பிசாசுபிடித்தவனல்ல, நான் என் பிதாவைக் கனம் பண்ணுகிறேன், நீங்கள் என்னைக் கனவீனம்பண்ணுகிறீர்கள்" (யோவான் 8:47-49) என்று கூறுகிறார்.

தேவனை அவமதிப்பதே பொய் மதத்திற்கு எதிராகக் காட்டப்படும் குற்றங்களில் இது மிக முக்கியமானது.

(2) இதற்கான தீர்வையும் நாம் ஆராய்ந்தோம். நம்முடைய தாய் தந்தையைக் கனப்படுத்த வேண்டும். "பயம்" என்ற வார்த்தையின் இடத்தில் "கனம்" அல்லது "மதிப்பு" என்ற வார்த்தையை நாம் அடிக்கடி பயன்படுத்துகிறோம். "கர்த்தருக்குப் பயப்படுதலே (பயபக்தி) ஞானத்தின் ஆரம்பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள்" (நீதிமொழிகள் 1:7). "கர்த்தருக்குப் பயப்படுதலே (பயபக்தி) ஞானத்தில் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு." (நீதிமொழிகள் 9:10). "கர்த்தருக்குப் பயப்படுதல் (பயபக்தி) ஞானத்தைப் போதிக்கும்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை (நீதிமொழிகள் 15:33).

ஒழுங்குள்ள மற்றும் ஒழுங்கில்லாத பயம் உண்டு. "அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" (1 யோவான் 4:18). அன்பு நிறைந்த மதிப்பு, தேவன் மற்றும் அவருடைய குணலட்சணங்களுக்கான கனம் என்பதே ஒழுங்கான பயம் என்பதற்கான பொருள்.

**நடைமுறையில் எடுத்துக்காட்டுகள்**

நம்முடைய தாய் தந்தையைக் கனப்படுத்துவதற்கு உதவியாக, நடைமுறையில் சில எடுத்துக்காட்டுகளோடு நாம் நிறைவு செய்கிறோம்.

- அவருடைய கற்பனைகளை நம்முடைய இருதயத்தில் காத்துக்கொள்ள வேண்டும் (விசேஷமாக நம்முடைய உடன்படிக்கையைக் காத்துக்கொள்ள வேண்டும்). "என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்" (யோவான் 14:21).

- "நம்முடைய பிதாவின் வேலைகளில் அடுத்தவைகளில்" நாம் இருக்க வேண்டும் (லூக்கா 2:49).

- தேவனுடைய குணலட்சணங்களைப் பாதுகாக்க வேண்டும்.

• மாய்மாலமின்றி நேர்மையாக இருக்க வேண்டும் (R5724b).

• தேவனுடைய அன்பில் நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும் (யூதா 21) (R5724b).

• "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல் லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன். கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது. கர்த்தாவே, நான் உமது அடியேன்; நான் உமது அடியாளின் புத்திரனும், உமது ஊழியக்காரனுமாயிருக்கிறேன்; என் கட்டுகளை அவிழ்த்துவிட்டீர். நான் உமக்கு ஸ்தோத்திரபலியைச் செலுத்தி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும்" (சங்கீதம் 116:12-18) (R5724b).

• தேவனுக்கு மகிமையுண்டாக அனைத்தையும செய்ய வேண்டும் (1 கொரிந்தியர்10:31) (R5724b).

• நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்க வேண்டும் (எபிரெயர் 1:9; சங்கீதம் 45:7).

• ஆண்டவருக்கு ஊழியஞ்செய்ய வேண்டும்.

• சகோதரருக்காக நம்முடைய ஜீவனைக்கொடுக்க வேண்டும் (1 யோவான் 3:16).

• சகோதரரிடத்தில் அன்பு செலுத்த வேண்டும் (1 யோவான் 4:20, 21).

• பிரமாணத்தை நிறைவேற்ற வேண்டும். "ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றென்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான். எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது. அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது" (ரோமர் 13:8-10).

• தேவன் பூரணசற்குணராயிருப்பதுபோல நாமும் பூரண சற்குணராயிருக்க வேண்டும் (மத்தேயு 5:48) (R4558). இது சரீரத்தின் பரிபூரணமல்ல. ஏனெனில் நாம் அனைவரும் அபூரணர்கள். இது சிந்தையின் பரிபூரணமாகும்.

• தேவனுடைய ஒளியில் ஐக்கியமாக இருக்க வேண்டும். "தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது. நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (1 யோவான் 1:5-7).

• அவிசுவாசிகளின் நுகத்தில் பிணைக்கப்படக்கூடாது. "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?" (2 கொரிந்தியர் 6:14) (R5427b).

• இறுதியாக தேவன் நேசிக்கக்கூடியவைகளை நாம் நேசிக்க வேண்டும். இந்த இறுதிப் பிரமாணம் ஒருவேளை உணர்ந்துகொள்வதற்கு மிகக் கடினமானதும் அதை நடைமுறைப்படுத்துவதற்கு மிகக் கவனமுள்ள படிப்பு தேவைப்படலாம்.

நாம் தேவனுடைய குணத்தைப் பின்பற்ற முயற்சிப்போம். பரிபூரணமான மாதிரியும் நம்முடைய நிறைவான எடுத்துக்காட்டாகிய நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற முயற்சிப்போம். தேவன் நேசிக்கக்கூடியவைகளை நாம் நேசிப்போம். இவைகளைச் செய்வதினால், "தாயையும் தந்தையையும் கனம் பண்ணுவாயாக" என்ற ஐந்தாவது கற்பனையை நிறைவேற்றுவதற்கு மிகுதியான ஆற்றலைப் பெறுவோம்.

# உலகிற்குக் கல்வி புகட்டுதல்

"அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை" (எபிரெயர் 8:11).

இங்கிலாந்திலுள்ள லண்டனில் ஆண்டுதோறும், சட்டக் கல்வி கருத்தரங்கை, உலக கல்வி மன்றம் Education World Forum (EWF) ஏற்பாடு செய்யும். கல்விக்குத் தேவையான எதிர்கால பயிற்சியைக் குறித்து உலகிலுள்ள அனைத்துக் கல்வி அமைச்சர்களும் ஒன்றுக்கூடி விவாதம் செய்வார்கள். 70 நாடுகளிலிருந்து ஏறக்குறைய 300-க்கு மேற்பட்டோர் இதில் பங்கேற்பார்கள் - 80% உலக ஜனத்தொகைக்கு பிரதிநிதியாக இருப்பார்கள். 2016 ஜனவரி 17-20 வரை நடக்கும் இந்த மன்றத்தில் கலந்துகொள்ளுவார்கள். பொதுவான பிரச்சனைகள் மற்றும் சவால்களுக்கு ஒரு நேர்மையான மதிப்பீடு கொடுப்பதே இந்தக் கருத்தரங்கின் நோக்கமாகும்.

ஐக்கிய நாடுகளின் பத்தாயிரம் மேம்பாடு இலக்குகள் போன்றவற்றின் முயற்சிகளால் தூண்டப்பட்டு வளரும் நாடுகளில் ஆரம்பப்பள்ளி கல்வியின் அணுகுதலின் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் விவாதிக்கப்பட்ட பிரச்சனைகளில் ஒன்றாகும். முதன்முதலில் 2000-இல் வெளியிடப்பட்ட இந்த இலக்குகள், 2015-க்குள் உலகளாவிய ஆரம்பக் கல்வியை அடைவதை உள்ளடக்கியது. கல்விக்கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படுத்த உதவி செய்து, பிராந்திய மற்றும் தேசிய அளவில் இக்கொள்கைகளில் பயிலும் உலகளாவிய செயல்திட்டமாகிய, "The Learning Curve" வழியாக, உலகின் முதல் பத்து இடங்களைப் பிடித்திருக்கும் கல்வி அமைப்புகளின் பட்டியலை பியர்சனால் (Pearson) சமீபத்தில் வெளியிடப்பட்டது. இதுவே இந்நாள்வரை வெளியிடப்பட்டதில் மிகப்பெரிய உலகளாவிய பள்ளி தரவரிசை ஆகும். எப்பொழுதும்போல், ஆசிய நாடுகள் முதல் ஐந்து இடங்களையும், ஆப்பிரிக்கா நாடுகள் இறுதி இடங்களையும் பிடித்துள்ளன.

### எழுத்தறிவு சார்ந்தப் பிரச்சனைகள் இன்னும் உள்ளன

உலகம் முழுவதும் கல்வியறிவைக் கண்காணிக்கும் நிறுவனமாகிய ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு வெளியிட்ட தகவலின்படி, 2010-இல் வயது வந்தோரின் உலகளாவிய எழுத்தறிவு 84% ஆக உயர்ந்தது. சில நாடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகிறது. நேபாலில், 1990-இல் 17% மகளிர் மட்டுமே படிக்க தெரிந்தவர்களாக இருந்தார்கள். ஆனால் இப்போது 50% மகளிர் படிக்க தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். இருப்பினும் UNESCO, 2000-இல் அமைக்கப்பட்ட கொள்கைகள் அனைத்தும் எல்லா நாடுகளும் அடைந்துவிடுவார்கள் என்று குறைந்த நம்பிக்கை வைத்திருக்கிறது.

வருடாந்திர ஆய்வு பணியின் பகுதியாக, UNESCO, உறுப்பு நாடுகள் உறுதி கூறிய பத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தை அளவிடுகிறது. 2015-க்கு முன்பாக ஒவ்வொரு குழந்தையும் எளிதாகப் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்பது இந்தக் கொள்கைகளில் ஒன்றாகும். UNESCO, தனது உறுப்பு நாடுகளுக்கு, குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி வழங்கும் வாக்குறுதியை வைத்திருக்க வேண்டும் என்றும் எச்சரித்தது. இருப்பினும் பல நாடுகளில், கல்வி கற்றல் அதிகரிப்பதைக் காட்டிலும் குறைந்து வருகிறது. பொருளாதார செழிப்பை அனுபவிக்கும் நாடுகள் இதற்காகப் பெரிதான முயற்சிகளைச் செய்கிறார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆயினும் வறுமை மற்றும் ஓரங்கட்டப்படுதல், ஆரம்பப் பள்ளிக்குக்கூடச் செல்ல முடியாத 72 மில்லியன் குழந்தைகளைப் பெரிதும் பாதிக்கிறது.

சமூக மாற்றத்தை ஊக்குவிக்கும் இளைஞர்களுக்கானப் பெரிய அமைப்பாகிய DoSomething.org. உலகளாவிய கல்வியைப்பற்றி பின்வரும் உண்மைகளை வெளியிட்டனர்.

- 2012-இல் உலகம் முழுவதிலும் 31 மில்லியன் தொடக்கப்பள்ளி மாணவர்கள் பள்ளியிலிருந்து நின்றுவிட்டார்கள்.
- சஹாராவில், 11 மில்லியனுக்கு அதிகமான குழந்தைகள் ஆரம்பப் பள்ளியை முடிக்கும் முன்பாகவே பள்ளியைவிட்டுவிடுகிறார்கள்.
- உலகம் முழுவதிலும் பள்ளியைப் பாதியில் விட்டுவிடும் குழந்தைகளுள் ஐம்பத்து மூன்று சதவிகிதம் பெண்கள் ஆவர். உலகின் படிப்பறிவில்லாத மக்களுள் மூன்றில் இரண்டு பங்கு பெண்கள் ஆவர்.

• ஆப்பிரிக்காவில், பதினெட்டு வயதிற்குக் கீழுள்ள குழந்தைகளுள் எழுத்தறிவு 50 சதவீதத்திற்கும் கீழுள்ள பகுதிகள் உள்ளது.

UNESCO-வின் அறிக்கையின்படி 2010-இல் ஆரம்பப்பள்ளியில் சேரும் வயதுள்ள 61 மில்லியன் குழந்தைகள் பள்ளியில் சேரவில்லை. இக்குழந்தைகளுள் 47% குழந்தைகள் பள்ளியில் நுழையமாட்டார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. 26 சதம் குழந்தைகள் எதிர்காலத்தில் பள்ளிக்குச் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உறுதி கூறிய நாடுகளுள் சீனா, இந்தோனேஷியா மற்றும் ஈரான் மட்டுமே படிப்பறிவின்மை விகிதத்தை 2015-க்குள் பாதியாகக் குறைக்கும் சர்வதேச கொள்கையை அடைந்திருக்கிறார்கள்.

மில்லியனுக்கும் அதிகமான மக்கள் படிப்பறிவு இல்லாதவர்கள் ஆவர். மற்றும் இந்த எண்ணிக்கையில் பள்ளிக்குச் செல்லாதக் காரணத்தால் 150 மில்லியன் குழந்தைகளும் சேர்ந்துக்கொள்ள வாய்ப்புள்ளது. இவற்றுள் பலர் வளரும் நாடுகளில் வாழ்கின்றார்கள்; அங்கு தங்களது பள்ளிப்படிப்பின் செலவை, அவர்களின் குடும்பமே செய்ய வேண்டியுள்ளது. அந்தக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும்படியான முடிவுகளை எடுக்க வேண்டும்.

UVESCO-வின் முடிவின்படி, 2015-இன் கொள்கைகளில் முன்னேற்றம் காணப்பட்டாலும், அனைத்துக் குழந்தைகளுக்கும் உலகளாவிய, இலவச மற்றும் தரமான கல்வியை வழங்கும் இந்தக் கொள்கையை அடைய இன்னும் 70 வருடங்கள் ஆக வாய்ப்புள்ளது.

**கல்வியைக்குறித்து தேவனின் ஆயிரமாண்டு திட்டம்**

எல்லா உண்மையான அறிவிற்கும் அடிப்படை கர்த்தரின்மேல் வைத்திருக்கும் பயமே ஆகும் என்று சாலொமோன் நமக்குக் கூறுகின்றார் (நீதிமொழிகள் 1:7). இங்கு, பயம் என்ற சொல் பயங்கரவாதத்தையோ அல்லது அச்சத்தையோ குறிக்கவில்லை; மாறாக தேவனின் பரிசுத்தத்திற்கும், மாட்சிமைக்கும் நாம் காட்டும் பிரம்பிப்பும், பெருமதிப்பும் மற்றும் அவரை ஏமாற்றுவதிலும் கீழ்ப்படியாமல் இருப்பதிலும் நாம் காட்டும் தயக்கமேயாகும். சத்தியத்தை அறிந்தால், சத்தியம் நம்மை விடுதலையாக்கும் என்று இயேசு கூறினார் (யோவான் 8:32). சத்தியத்தின் அறிவைப் பெறும்போது, பயத்திலிருந்து நமக்கு விடுதலைக் கிடைக்கிறது.

சமூகத்தின் நோய்களுக்கான சிகிச்சை, கல்வி என்று உலக அமைப்புகள் நம்புகிறார்கள். எனினும், கல்வி தானாகவே பாவத்திற்கு எதிராக யுத்தம் செய்வதில்லை. தேவனின் அன்பு பற்றிய அறிவை தவிர மற்ற எல்லா அறிவும் நமக்கு செருக்கை உண்டுபண்ணும் என்று பவுல் கூறுகிறார் (1 கொரிந்தியர் 8:1). நிக்கொதேமு இஸ்ரயேலின் ஆசிரியராக இருப்பினும் அவரால் ஆவிக்குரிய வாழ்வின் கருத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை (யோவான் 3:10). பவுல், அவர் காலத்தில் மிகவும் சிறந்த யூத பள்ளியில் பயின்று, உயர் கல்வி கற்ற மனிதன் (அப்போஸ்தலர் 22:3). அவர் தன் கல்வியைப் பல கலாச்சாரங்களைச் சார்ந்த மக்களிடம் திறமையாகப் பேசப் பயன்படுத்தினார் (அப்போஸ்தலர் 17:28; தீத்து 1:12). இருந்தும் பவுலின் கல்வி அவரைப் பரிசுத்தராகச் செய்யவில்லை (1 தீமோத்தேயு 1:16). "எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்கள்" (2 தீமோத்தேயு 3:7) என்று பவுல் நம்மை எச்சரிக்கின்றார். உண்மைகளை மட்டுமே தெரிந்து வைத்திருத்தல் ஒரு மனிதனைச் சிறந்தவனாகச் செய்ய முடியாது; உயர் கல்வி கற்ற முட்டாளாகவும் இருக்க வாய்ப்புண்டு.

சத்திய அறிவும், கல்வியும் உலக மக்கள் அனைவரையும் சேரும் என்று எதிர்காலத்தைக்குறித்து தேவன் நமக்கு வாக்குறுதிக் கொடுத்துள்ளார். இன்றைய தேசங்கள் மத்தியில் நீதியுள்ள இராஜ்யம் நிறுவி கிறிஸ்துவின் வருகையில் இந்த வேளைத் துவங்குகிறது. "அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானே என்றென்றைக்கும் நிற்கும்" (தானியேல் 2:44).

இஸ்ரயேலர்கள் தங்கள் மூதாதையரின் தாயகத்திற்குத் திரும்பிச் செல்லுதல், இராஜ்யம் நிறுவப்பட்டது என்பதற்கு ஒரு ஆரம்ப அறிகுறி என்று வேதம் கூறுகிறது. அந்தத் தேசத்தின் வழியாக, தேவன் சகல மக்களோடும் உடன்படிக்கை ஏற்படுத்துவார் (எரேமியா 31:31-34). விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஆசிரியர்களாகவும், தலைவர்களாகவும் விளங்க, தங்களது தகுதியை வெளிப்படுத்திய முற்பிதாக்கள், மக்களின்

கல்வியை நிர்வாகம் பண்ணுவார்கள் (எபிரெயர் 11). அனைத்து மக்களும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பும்போது இந்தக் கல்விமுறைத் தொடங்கும்.

"ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரிந்தியர் 15:22) என்று பவுல் எழுதுகின்றார். இந்த நம்பிக்கையைப் பற்றி அவர், "உம்மிடத்தில் ஒன்றை ஒத்துக்கொள்ளுகிறேன்; அதென்னவென்றால், இவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனைசெய்து நியாயப்பிரமாணத்திலேயும் தீர்க்கதரிசிகள் புஸ்தகங்களிலேயும் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் நான் விசுவாசித்து, நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கைகொண்டிருக்கிறதுபோல, நானும் நம்பிக்கைகொண்டிருக்கிறேன்" என்று அப்போஸ்தலர் 24:14, 15-இல் பேசுகிறார்.

மக்கள் எந்த நினைவுகளுடனும், எண்ணங்களுடனும் கல்லறைகளுக்குச் சென்றார்களோ, அதே நினைவுகள் எண்ணங்களுடனே கிறிஸ்துவின் இராஜ்யத்தில் கல்லறையிலிருந்து உயிர்பெற்று வருவார்கள். நீதியின் சட்டத்தை அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். நீதியின்படி நடத்தலினிமித்தம் அவர்களுக்குக் கிடைக்கும் நன்மையை அவர்கள் கற்க வேண்டும். "என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்" (ஏசாயா 26:9).

இப்போது வாழ்பவரும், முற்காலத்தில் வாழ்ந்தோர் அனைவரும் இந்தக் கல்வியைக் கற்பர். இந்தச் செயல்முறை பரிசுத்தத்திற்கு வழிவகுக்கும் என்று ஏசாயா விவரிக்கின்றார்.

"அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை. அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை, அங்கே காணப்படவுமாட்டாது; மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள். கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்" (ஏசாயா 35:8-10).

இந்தத் திட்டம் முழுமைப் பெற்றதாக இருக்கும். ஏனெனில் அனைவரும் அதன் செய்தியைக் கேட்பர். விசுவாசம் இல்லாதவர்களாக நெடுஞ்சாலையின் பாதையைத் தொடங்கும் மக்கள் அதன் முடிவில் விசுவாசிகளாக இருப்பார்கள். முட்டாள்கள்கூட தவறாதவாறு அந்தப் பாதை மிகவும் தெளிவானதாக இருக்கும்.

இந்த உரையின் மையக்கருத்து, இந்தவிதமான கற்றலின் முழுமையை விவரிக்கிறது. "இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" (எரேமியா 31:34). நாம் அந்த நாளை எவ்வாறாக எதிர்நோக்குகிறோம்!

**சங்கிலியாண்டபுரம் வேதமாணவர்கள்**, திருச்சி.

**கைப்பேசி : 9244611241,8122224919**